59

உ

ஸ்ரீகன்னபிரான் துணை.

ஹிந்துஸ்தான், பாரஸி, ஜாவளிவான

மெட்டுகளடங்கிய

குசேலோபாக்யான மென்னும்

ஸ்ரீ

குசேலமாமுனிவர் சரித்திரம்.

ஆற்காடு தாலூகா சிவபாதசேகர சதுர்வேத

சித்தாந்த மங்கலம் என்னும் வளவி

யாற்றார் என்னும் இயற் பெயர்

அமைந்த

வளையாத்தூர் சிரகருணீகம சேஷப்பிள்ளை

அவர்கள் திருக்குமாரர், வித்வான்

முத்துகிருஷ்ணபிள்ளை

அவர்களால்

இயற்றப்பட்டு

சென்னை ரூளை முனுசாமி முதலியார் அவர்களால்

சென்னை ரூளை ஸன் ஆப் இண்டியா பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1917 [அணா 8.

ரிஜிஸ்டர் காபிரைட்

THE REGIST
13 - OCT 1

O-, 2MMK6,K.
N17
176025

உ

சாற்றுக்கவிகள்.

ஆரணி சமஸ்தானம்-திருமலைசமுத்திரம்

மகாவித்வான்

ச. ப. அண்ணாமலைசெட்டியார் அவர்களால்

இயற்றிய

ஆசிரிய - விருத்தம்.

ஏர்மருவுதெண்டிரைச் சூழ்புவியினலர்மாதை
　　யேற்ற கண்ணப்பிரான்றன்
இனிமையுற்றுச்சுசீலைப்பாரி தன்னோ
　　டினப்புதல்வரைப்பயின்று
நேர்மருவுசெல்வநிலை யாமையைவிளக்கிய
　　நிகரிற் குசேலர் காதை.
நேமமுறதமிழிசரித் திரமெனவிசைத்தனன்
　　நீடுவளையாத்தூரினிற்
சீர்மருவுகருணீக சுகமகாரிஷிகோத்ர
　　சேஷபிள்ளைப்பூருவம்
செய்தவகொழுந்தென வுதித்துவெண்ணீறுபுனை
　　திருநுதன்முத்துகிருஷ்ணப்
பேர்மருவுபாவலன் சொற்பொருணயம்பரவ
　　பிரியமொடுகேட்டுவானோர்
பின்னுமிமையாநோக்க மாயினர்களென்றிடிற்
　　பேசுவரியாதுருவரோ,

ஆரணி சமஸ்தானம் திருமலைசமுத்திரம் வித்வான்

கோ. வே. பழனிசெட்டியார் அவர்களால்

இயற்றியது.

சிறப்புச் செய்யுள்.

திருமகட்கிறைவன் றன்னடிக்கமலஞ்
சிந்தையின் மலரு மெய்த்தவனா
றெளிமறைக்குலனைம் பொறிசினமடக்கும்
திறனுளன் மக விருபத்தேழ்
கருமலர்க்கோதை உத்தமிசுசீலை
நங்கையோடில்லமுற்றொழியா
நவையுறுங்கொடிய மிடியினல்வருந்தி
நண்பனுங்கண்ணனுக் கவல்கொண்
டொருபிடியுதவி யெண்ணிதிப்பேறு
மோங்கியவுயர் குசேலன் றன்
ஒதூற்கதையை சரித்திரமாக
உறைத்தனனிசைவ லோருவப்பத்
தருமமார்வளையாத் தூர்சுகமுனிவர்
தமதுகோத்திரத்தினி லுதிசீர்த்
தருங்கருணீக சேஷப்பிளை தவத்திற்
றந்தமுத்துக்கிருட்டினனே.

ஆரணி சமஸ்தானம் திருமலைசமுத்திரம் வித்வான்

கொ. மு. சுப்பராய செட்டியார் அவர்களால்

இயற்றியது.

ஆசிரியப்பா

பொன்னிறமென்ன நன்னிறம்பொலியும்
துன்னியபன்மலர்த் தன்னிலின்றொழீத்
தூநறைப்பெருக்கம் வானலைத்தோடி
யானிறைத்தொருதியு மானிரைக்கணமும்

பல்பொறிசுமந்த-வல்லியவேங்கையும்
பிரிவுறுதடைந்து திரமுடன்பருகும்
செங்காலன்னம் தங்கியவனப்புடன்
சேணறமகளிர் மாணீராடும்
பொற்றாமரைக்கயம் வற்றாதுநிறைத்து
கற்பகநாட்டின் பொற்பினைநோக்கு
மற்புதவனமதி லமர்ந்தபுண்ணியன்
நித்தியனடிமலர் வைத்தவகத்தோன்
நற்றவத்தோர்புகழ் குற்றமின்முனிவன்
சுத்தநற்கதியாந் தொற்பொருளுடையோன்
நாளெனுந்தொகுதி நன்மக்களுடையோன்
கோளிலவலான் மாளாச்செல்வம்
தொன்னட்புடையத் துளபக்கண்ணனாற்
பெற்றகுசேலன் றற்றதோர்கதையை
இசைவல்லோரு மேனையரும்புகழ்
சரித்திரமாக குரித்துமேதெய்தனன்
தேமாநிழற்கண் டேமுடன்றுஞ்சுன்
றாய்புனிற்றெருமையின் றெருதிகளொழுக்கிய
பாலுடன்கற்று வினம்விடும்பாலும்
வணைக்கணமொலிக்க வலையுடன்பெருகி
வயல்வெளிபறந்து வளருஞ்சென்னல்
வானுறவோங்கும் வளையாத்தூரிற்
றிருமகட்செல்வ நிரைவுடன்பெற்றுச்
சீர்கருணீக பார்புகழ்மரபிற்
சேஷப்பிள்ளை செய்தமுற்றவத்தின்
பயனெனவந்தோன் பரனடித்தொண்டன்
ஆயர்தம்மரபி லன்புடனுதித்து ஒண்ணவநீதமுண்ட
கண்ணன்றிருப்பேர் கொண்டநற்சீலனே

உ

ஓம்கணேசாய நம:

ஸ்ரீகண்ணபிரான் துணை.

ஸ்ரீ குசேலமா முனிவர் சரித்திரம்.

கணேசர் துதி நேரிசை வெண்பா,

பூதலத்தில்உத்திரபால் பொங்கவந்திநன்னாட்டில்
வேதக்குசேலமுனிவிஞ்சுபுகழ்—காதைதனை
கோதினவசரித்திரமாய் கூறுதற்குமுன்னருளுங்
காதல்துதிக்கை முகன்தாள் காப்பு.

பரமசிவஸ் துதி.

தரைமிசைமாய்கைதன்னில் தங்கிதங்காதுநிட்டை
நிரைகொள் குசேலனார்ச்சீர்-நிகழ்த்தமாமரகதத்தின்
அரையெனுமுமையாள்பாக-மமைந்துமாசற்றவெள்ளி
வரைதனின்மேவுமீசன்-மலரடிதலைமேற்கொள்வாம்.

சுப்ரமண்யர் துதி.

மந்திரமோதுந்தூய மறையினமாங்குசேலன்
பந்தனன்னேயமாயன் பார்க்கவிமருகனாகி
நந்தெய்வப்பிடியாள்வள்ளி நாயகமானசெவ்வேற்
கந்தவேளுபயதிவ்ய கழலிணைபோற்றிசெய்வாம்.

கண்ணபிரான் துதி:

புண்ணியமாதவத்திற் பொலிந்திடுமுனிவராரும்
எண்ணரும்பொருளதாகி யிலக்குமியுரத்திலங்க
வண்ணகுசேலநேயம் வாய்ந்துத்வாரகையின்மேவும்
கண்ணபிரான்பொற்றாளை கருத்தினிலிருத்திவாழ்வாம்

கலைவாணி துதி.

அலைகடற்சூழுமிந்த அம்புவிதன்னின்மேலோர்
நிலைபெறும்பொதுவகத்து நீங்காதநின்றுநாவில்
தலைமையாய்முன்னங்கார்க்குந் தாயெனவெவருமேத்தும்
கலைமகள்கமலத்தாளை கருதியெத்தினமுங்கொள்வாம்,

ஸ்ரீ குசேலர் துதி.

கலித்துறை.

ஆரணமோதிடு பூசுரரின்மணியாயுதித்து
நாரணன்றன்றிரு பாதாம்புயத்தை நவின்றுகிட்டை
பூரணமாகிபொலிந்துச்சுசிலையாம் பூவையொடு
தாரணியுற்ற குசேலநந்தாசிரு தாள்சரணே.

அவையடக்கம்.

எண்சீரடி - விருத்தம்.

உலகுதனிற்பலகலைக ளுணர்ந்தமேலோர்
ஓதுமுனமித்தூய் குசேலனார்ச்சீர்
சொலமிகவும்புன்மதியிற் றுணிந்தனன்பால்
சோதியெதிர் தீபவொளிகாட்டில்போலும்
குலமழைகொழிக்கசில கொண்டுதிர்க்குங்
குட்டிவிருக்கம்போலும் குருகிநாயேன்
புலவர்களேயித்தகை சரித்ரக்குற்றம்
பொறுத்தருள்வீர் நும்மடிகள்போற்றிபோற்றி.

விநாயகர், சுப்ரசன்னம்.

வேலாயுதன் முன்வந்த என்கிற வர்னம்.

இ-ம் எமுனுகல்யாணி ஆதிதாளம்,

பல்லவி.

மூலாதரனேசிவன் பாலாவசுரர்க்காலா. (மூ)

அனுபல்லவி.

நாலாதிக்கிலுமுன்னே வாலாயமாய்த்தேடியு
நறவாரளிபடு நருமறையடியோய்
உறவுபெருக வருளோகரிமுடியோய். (மூ)

சரணங்கள்.

சண்முகனிடமுனங் தரிசனமாய்வருபோதனே ஒரு
விண்முகிலெனநெடு கருசடைவல்லபைநாதனே
அண்டமுகடிலுறை மண்டலத்தோர்கடுதி
அரிமேறுயிலிடு மரிகளிமருகா
தெரியலுரமணியுந் தேவேவருக. (மூ)

உந்தியிலெழுசுதனுள மகிழொடுபணிசீலனே-உயர்
தந்தியுரியினொடு தணிவுறுனடனிடபாலனே
தொந்திமிகக்குலுங்க வந்தச்சிகரியேறி
தொழுதாளிணை தனை தொழவருணிதியே
வழுவிலருமறையின் மாகணபதியே. (மூ)

நச்காபரணனிட மொருகனிபெறுதீரனே-ஜித
வாகாயமதனினிரு வரதெரிதரசூரனே
வாகாயெனதிலுறை யோகாவரமருளே
வருவாய்முத்து கிருஷ்ணன்மனோகரனே
தருகத்தருணமது தாவைங்கரனே. (மூ)

கலைமகள் சுப்ரசன்னம்.

பாகிபனுயி என்கிற வர்னமெட்டு.

வந்தனம்வந்தனம் மலரயவாணி
வரமருள்செய்யுங் கல்யாணி
சந்ததமெனதபி ப்ராயமேகாணி
சங்கீத சாஹித்யபாணி வந்த

சுந்தரகுண வலங்கிருதசுவாரி
சோபிதமான வொய்யாரி
சந்தணபாளித குங்குமதாரி
சகலசாம் ப்ராஜ்யவுதாரி வந்த

அந்தரலோக பிர்ம்மாவினுவாசி
ஆகமவேத வுலாசி
பைந்துணர்கற்பக நிழலமர்நேசி
பாரதியே சுப்ரகாசி வந்த

அந்தகுசேலநற் காதையையாலித்
தாடவே பாடவேசீலி
முந்தவந்தாண்டிட தரிசனம்பாலி
முத்து கிருஷ்ணனுகூலி. வந்த

விதூஷகன் பிரவேசம்.

இங்கிலீஷ் மெட்டு.

விதூஷகன்வந்தான் வெகு
விகடமேதந்தான் வேகமாய். விதூ

விருவிடென தடதடென
கடகடென நடனமிடென. விதூ

தட்டிஜல்லடங்கட்டிடுஞ் சிங்கக்குட்டியெனவே
தடைக்கஞ்சாசதுரனை தந்திரகுணனும்
சம்பன்னசுகனும் சரஸீஜமுகனும்

திகுதியென்னவே மகுடனுன்னவே
சொகுசுமின்னவே மிகுதிபன்னவே. விதூ

ஸ்ரீ குசேலர் பிரர்ப்தம்.

பொது விருத்தம்.

மண்ணவராதியேற்றும் வடமதுரைச்சமீபம்
புண்ணியநாடவந்தி புரிதனிலவதரித்து
கண்ணபிரானேடொக்க கலைமுழுதும்பயின்ற
தண்ணருளார்க்குசேல தாசிதோவருகின்றுரே.

வசனம்.

ஸ்ரீ பரமபாகவத யோகீஸ்வரராகிய, ஸ்ரீ குசேலமாமுனிவர் பிராப்தமாகின்றபடி,

இ-ம்-கமாஸ்-ரூபகம்.

அந்தணர்க்குசேலர் வந்தனர் அந்த
அண்ணனிராசனனழகிய
கண்ணபிரானெடுபழகிய (அந்தணர்)

நாரணர்ப்பதமிடையருது நண்ணியேயுள்ளக்கமலநாட்டி
ஆரணமுறைசாதுகோஷ்டிக் கடிமையானவனென்னுமேட்டி

அன்பைவளர்க்குஞ்சத்திய
அஃறிணை உயர்திணைநித்திய
மின்பமதாக நடாத்திய
ஏக; போக; மான, தேக. (அந்தணர்)

கருணையடக்கம்பொறுமைநேசம் கனவிலும்மறவாதத்யாகி
கருணிபிற்றவமியற்றும்யோகி கலைபயின்றவுத்தமவிவேகி

காமம்கோபமயக்கம்
கருதுந்தீயர்பயக்கம்
பாமரமென்னவுறைக்கும்
பாச, வாச, ஞன, தாச. (அந்தணர்)

சித்தசித்தீசனென்னுமூன்றை தெரிவிக்குங்குருவாஞ்சாந்தீப
நிந்தனையடைந்துவேதோப நிஷதம்பயின்றவேகூப்ரதாப

நீதிவைராக்யமிலங்கும்
நெறியுடனேன்புதுலங்கும்
சோதிமேலோங்கிவிளங்கும்
சுத்த, நித்த, மூத்த, கத்த. (அந்தணர்)

போற்றி விருத்தம்.

தருமமோருருவாய்வந்த சகதேவனுற்பிணித்த
அருமையாந்தெய்வமேநின் னடியிணைக்கமலம்போற்றி
மருமமில்லாமலிந்த மைந்தனைக்காவனம்ம
கருமமென்றெண்ணியுந்தன் காக்ஷிதாபோற்றிபோற்றி

ஸ்ரீ குசேலர் துதி.

இராகம்-தற்பார்-ரூபகம்.

"ஆ! ஆசிவமே நல்லகதிஆக்கினுய் சிவமே" என்கிறவர்னம்.

ஸ்ரீபதியே் உந்தனருள் தேக்குவாய் நிதியே. (ஸ்ரீ)

தேவாதனிமூவாமனு பாவாவெனேக்காவா. (ஸ்ரீ)
பதகபன்னகவைரிபாகா
பாபரகித தேவா-ஜித
மிதபாஷி பரமாத்மயோகா
மிருதவானர ஜீவா

வித்தகசத்தான்வனே வேதமுதற்காரணனே
மூத்திதருநாரணனே மூல, சீல, ஞால, பால. (ஸ்ரீபதி)

மதஜனக சீருவணகேதன
வாலிமர்த்தன சீலா-சங்கு
சுதரிசனனேஜ னுர்த்தன
சுரகணபரிபாலா

சுந்தரவம்மங்களனே சுத்தகுண நிஷ்களனே
அந்தரமாதவகுலனே ஆதி, ஜோதி, நீதி, பூதி. (ஸ்ரீபதி)

வேலையிற்றுயில்விஸ்வராஜா
விண்ணவரகவாசா-ஆதி
மூலனே முத்துக்ருஷ்ணநேசா
மோனர்கடுதி யீசா

மூச்சுடராய் நின்றவனே மூவுலகாளும்பரனே
உச்சித நிரந்தரனே யோக, போக, மான, தேக. (ஸ்ரீபதி)

ஸ்ரீ குசேலர் வசனம்.

நமது பதிவிரதா சிரோன்மணியான சுசீல நாயகம், இன்று நம்மருமந்தமக்களின் பசிப்பிணியை அகற்ற, ஏதாயினும்மார்க்கம் தேடினளோ ! இல்லையோ ! அதை இல்லின்கண்சென்று, கண்டறிந்து தக்கபடிசெய்வேனாக.

பொது வசனம்.

ஸ்ரீ பதிவிரதா சிரோன்மணியான சுசீலையம்மன் பிராப்த்தமாகின்றபடி.

இ-ம்-கமாஸ்-ரூபகம்.

வந்தாள் சுசீலநாயகி ம-கி-மூடனிதோ. (வ)

சந்தக்குயிலோவென்ன சாதகுந்ததி சொர்ன்ன
மந்தஹாசமாய்ப்பன்ன மைந்தரெல்லோருந்துன்ன
கூட, நாட, ஆட, பாட. (வ)
முந்தபார்க்கவிமதிக்க மோனாசீர்வதிக்க
சிந்தைதனிற்பஜிக்க தேவதுந்துமிமுழங்க

(முடுகு)

விந்தையாய் சந்தணஞ்சுந்தர கந்தாமணி சந்திரமுக
பைந்துணர்கற்பகநிழலுறை அந்தரமகளென்றுபுகலும்
ஆதி, ஜோதி, நீதி, யோதி. (வ)

ஸ்ரீ சுசீல விருத்தம்.

அத்துவிதத்தைநன்றாய் அறிந்தமாமுனியேபோற்றி
வித்தகாதேகமாதி மித்தையாமென்றாய்போற்றி
மூத்தனேநான்குவேத முடிவினைச்சார்ந்தாய்போற்றி
தத்துவதீதாபோற்றி தவமணிபோற்றிபோற்றி.

ஸ்ரீ சுசீல ஜாவளி,

"சாமிக்கார்போய் சொல்லுவார்" என்கிற வர்னம்.

இ-ம் அபுரூபம்-ஆதி.

போற்றிபோற்றிபோதனே மறையோதுநாதனே. (போ)
ஏற்றினேனெனையாசிர்வதிப்பீர் மங்களமதிப்பீர்இங்ஙனே. (போ)
கண்ணபிரானே கதிநீயென்போனே
கமலமாமலர்ப்பதந்தானே பணிவோனே கார்த்தருள். (போ)
அரிவையெனதியே யாகாதிபதியே
அஞ்சலிசெய்தேனீகதியே இதுததியே அய்யனே. (போ)
அருந்தவத்தோனே அடியவள்நானே
அன்பாய்நின்றுணையைப்பெற்றேனே அல்லற்றேனே அருள்வீர். ()
பாலர்தம்மீது பக்ஷம்வையாது
பராமுகமெய்வதுமாகாது ஈதடாதுபார்த்திடும். (போ)
பஞ்சைகள்போலே பசிப்பிணியாலே
பரதவிப்பதும்பலகாலே புவிமேலே பாதையே. (போ)

ஸ்ரீ குசேலர் விருத்தம்.

கற்புகைக்கொண்டுமிக்க கண்ணியம்வாய்ந்துதம்மில்
சற்புதல்வரையடைந்த தையலர்க்கரசேவாழி
அற்புடன்கண்ணன்றாளை அனுதினமகத்திலேத்தி
தற்புகழ்ச்சியையகற்றி தாரணியில் வாழி வாழி.

வசனம்.

கற்புநிலையில் எள்ளளவேனும் பிசகாமல் சற் புத்திரபாக்கியத்தையடைந்த தையலர்க்கரசான ஏ! சுசீலா தற்பெருமையைமுற்று மொழித்து, அனுதினமும் கண்ணபிரான் பொற்கழல்களை மறவாது அகத்தில் துதிசெய்துகொண்டு நீடூழிவாழ்வாயென் கண்மணி.

ஸ்ரீ சுசீலை விருத்தம்.

கண்ணபிரானின்றுளை கனவிலுமறந்திடாமல்
திண்ணமாய்மன துட்கொண்டு திருவுளம்பெறுவோமென்றால்
உண்ணுடுமன்னத்திற்கா யுறுமிநம்பாலரென்றும்
குண்ணிடுந்தடையேயென்னை குறுக்கிடுதென்செய்வேனே.

வசனம்.

பிராணவல்லபா:—சாக்ஷாத் கண்ணபிரான் திருக்கழல்களை என்றுமறவாமல் தியானித்து அவர் திருவுளம் பெருவோமென்றால், உண்ணும் அன்னத்திற்காகப் பின்னப்பட்டுவாடும் நம்மக்களின்பரிதாபமானது, இடைக்கிடையே அதற்கு நேர்விரோதமாய் முடிகின்றது. என்செய்வேன்நாதா.

ஸ்ரீ குசேலர் விருத்தம்.

எத்துன்பமணுகினும் இளவலார்அழுதிட்டாலும்
பத்தியுமழிந்திட்டாலும் பாவையேயென்னசெய்வேன்
இத்ததிமக்களைக்கார்த் திருப்பையான்கானிற்கேகி
சுத்தபுல்லரிசிகொண்டு சுருக்கினிலுதவுவேனே.

வசனம்.

சுகுணபூஷணமே:—நமக்கினி யெவ்விததுன்பநேரிட்டாலும, நம்மிளவல்கள், பசிநோயால் வருந்திட்டாலும், நம்பக்திமார்க்கங்கள் அழிந்திட்டாலும், நான் என்ன செய்யப்போகின்றேன். துயரப்படாதே இக்ஷணம் யான் வழக்கப்படி காட்டிற்கேகி புல்லரிசி கொண்டு சீக்கிரம் திரும்பிவருகிறேன்.

ஸ்ரீ சுசீலை வசனம்.

அவ்விதமே போய்வருவீர் தேவா.

ஸ்ரீ குசேலர் வசனம்.

துவாரகாவாசா, எத்தனைநாளைக்கு புல்லரிசியின் உதவியால், எமது இருபத்தேழுமக்கட்களையும் காப்பாற்றுவேன். இப்படிப் பட்ட வறுமையிலும் எனதருமை காதலியின் சுகுணத்தை என் னென்றுரைப்பேன். ஆ! ஆ!! நித்தியதரித்திரியாகிய அடியேனி டத்தில் என்னவொழுக்கம் என்ன வணக்கம், எவ்வளவு பிரியம், அவள் கற்புநிலைமையே எனதாசைப்புதல்வர்களை காக்கின்றதென நினைக்கின்றேன். இதோ வனத்தினிடமாகவந்தேன். கொள்வாரின்றி ஏராளமாய்க்காய்த் துக்கிடக்கும், இப்புற்கதிர்களைக்கொய்வேனாக.

ஸ்ரீ குசேலர்-தரு.

புற்கதிர் கொய்தல்.

தோடி-ரூபகம்.

"சாம்பவிஸ்ரீசாமுண்டீஸ்வரி" என்கிற வர்ணமெட்டு.

ஈதோ, புற்கதிர்கள்கொய்கின்றேன்—என
தின்பப்புதல்வர்கள்
வன்பசிக்காய்த்தேடி. (ஈதோ)

மாதவமுனீந்திராதி வணங்கிடுமுகுந்தஜோதி
பாதமதைபணிந்தேநீதி பரவவருள்புரிப்ரக்யாதி
பாவையாளுய்ந்திடப் பாகமுஞ்செய்திட
நாவினிற்பெய்திட நற்சுவையெய்திட. (ஈதோ)

பஞ்சையாமெனக்கென்றே யிவ்வடவியிற்
படைத்திட்டாய்முனம்பாக்கியம்-என்றன்
நெஞ்சமிவ்வண்ண நிலையுற்றிருப்பதே
நீணிலத்திற்சிலாக்கியம் நித்த
மிஞ்சிவரும்விருந் தாளிகட்களித்து
மேவுவதுமகாயோக்கியம் நிகழ்
கஞ்சனுறைசதுரானன முதலாக
கழறுமேசத்யவாக்கியம் நான்
காதலாகதினங் கட்டளைப்படியே
கருதியிங்ஙனங் காணுங்கொடியே

மீதகற்றிநன்றாய் வியந்திப்படியே
வேணமட்டுங்கொண்டேன் விருக்கிச்செடியே
வேகமாய்ச்சென்றிட வெம்மையகன்றிட
ஏகமுயன்றிட இன்றுமகிழ்ந்திட. (ஈதோ)

ஸ்ரீ குசேலர் வசனம்.

ஏ! கிருஷ்ணபூபதி:—இதோவேண்டியமட்டும் புற்கதிர்களைக் கொய்துகொண்டேன். இனி எம்மகத்துக்குச்சென்று, இதை சுசிலையினிடமளித்து உரலிலிட்டு குத்தியாய்ந்து, அரிசியை வேறெடுத்து, பாகம்செய்து பாலர்களின் பசிப்பிணியை அகலவோட்டவேணுக.

ஏ! சுசீலா! ஏ சுசீலா!!! ஏ சுசீலா!!! கபாடந்திறப்பாயடி இதோ வந்துவிட்டேன்.

ஸ்ரீ சுசீலை வசனம்.

காட்டுப்புல்லரிசிக்குச்சென்ற யோகீஸ்வரர், தெருவாயிலில் நின்று அடியாளை அழைப்பதுபோல் காண்கின்றது. காந்தரே:— இதோவந்தேன் கால்கடுக்க கானகத்தில் எப்படி நடந்தீரோ மலர் போன்றபாதங்கள், எவ்விதமாகநோகின்றதோ ஆ! ஆ!! ஜெகதீசா அடியார்களுக்கு இவ்வித துன்பமுமளிக்கலாகுமா? இதுவுமுன் திருவிளையாட்டோ! நாயகா அடியாள் நமஸ்காரம்.

ஸ்ரீ குசேலர் விருத்தம்.

அருந்ததிக்கேற்றமாதே அழியுமித்தேகத்துக்காய்
வருந்தநீவேண்டாமீதை வகையுடனேசமைத்து
விருந்தினருக்களித்து மீந்ததைமைந்தர்க்கிட்டு
பொருந்தவீற்றிருப்பையோகம் புரியயான்போகின்றேனே

வசனம்.

அருந்ததிக்குச்சமதையான ஏ! சுசீலநாயகமே நீ நீடூழிவாழ்வாயாக இதோ யான் தரும்புற்கதிர்களைக் குத்தியாய்ந்து, விரைவாய்வட்டித்து ஒருபாகத்தை அதிதிக்களித்து, மற்றதை மைந்தருநீருமுண்டு சுகித்திருப்பை யான்சென்று, சற்றுயோகத்திலிருந்து வருகின்றேன்.

ஸ்ரீ சுசீலை வசனம்.

அடியாள்பேரிலும், அருமந்த மக்கள்பேரிலும், கியாபகமிருக்கவேண்டும். போய்வருவீர் இதோ நமஸ்காரம்.

ஸ்ரீ குசேலர் யோகம்.

தேவாரம்.

பரமனேவாசுதேவா பரஞ்சுடரானதீபா
பிரமனைப்பெற்றநாதா பேதைமீதின்னம்வாதா
திரமகாபலியழுந்த செய்துநற்புவியளந்த
சரணனேவாமனுவ தாரனேபோற்றிபோற்றி.

இ-ம் கமாஸ்-ரூபகம்.

சிம்மாவெனை அருட்கண்பாராயோ!
என்மேல் சித்தம்வைத்துநர. (சிம்மா)

மர்ம்மமா யிரண் யாக்ஷதனே
தர்ம்மனே பிர்ம்மனே யுன்தலைக்
கர்ம்மமாய் மாய்த்துயிர் கார்த்தக்
கோர, வீர, சூர, நார. (சிம்மா)

பெரியத்திருவடியினிலுறை கரியனெனுநாராயணநாதாமுன்புக்
கருமியஜாமீளன்றனை யுரிமையாயாண்டருளியநாதா

பிரியனைநீராட்கொள்ளப்
பீடவிடாமரைமாதொடு
விரிதொடைவேய்ந்துபதந்தர
வாது, சூது; மேது, சாது. (சிம்மா)

ஆதியிலன்னங்கொடுமறை யோதிவிதிக்கினிதருளிய சீலாஅன்றும்
பூதியமீதுகரிக்கிறை யோதிடவந்திகளொழிதரகாவா

மேதியிவர்ந்துக்டைத்தொழி
லாதிதொடங்கிபுரித்திடு
நீதியிறைக்குதெரித்திடு
வித்த, கத்த, சுத்த, மூத்த. (சிம்மா)

பொது வசனம்

ஸ்ரீ சுசீலையம்மன், முனீஸ்வரரால் அளிக்கப்பெற்ற புற்கதிர்களைக்குத்தியாய்ந்து அரிசியை வேறெடுத்து பாகம்செய்யபிராப்தமாகின்றபடி.

ஸ்ரீ சுசீலை தரு.

இ-ம் நவரோஜ்-ஜம்பை.

செல்வமக்கள்பசிதணிய சீக்கிரநான்தீவளர்த்தி
புல்லரிசியிதைபாகம் புரியவிதோபோரேன்.

வசனம்

என்செல்வமக்களின் பசிதீவிரமடக்க, அதிவிரைவாக, அக்கினிமூட்டி, இப்புல்லரிசியை பாகம் செய்யும் பொருட்டு இதோ போகின்றேன்,

முதற்பிள்ளை விருத்தம்.

அம்மாடியென்சொன்னலும் அரும்பசிதாளமாட்டேன்
சும்மாநீகெடுவிடாதே சோருதென்தேகமெல்லாம்
தம்மாலியன்றமட்டும் தடைமொழியாமலிப்போ
இம்மாத்ரங்கஞ்சிவார்த்தா லெனக்கதுபோதும்பாரே.

வசனம்.

அம்மா எனக்குபசிபொறுக்கமுடியவில்லை. நீசும்மாகெடுவிடாதே உன்னால் கூடியது இம்மாத்திரங்கஞ்சியாவது வார்ப்பாயடி.

ஸ்ரீ சுசீலை தரு.

ஷை வர்ணம்.

சற்றுபொறுப்பாயடாநான் தாமதமேசெய்யாமல்
பற்றுடன்சமைத்துனக்கு பாகிப்பேண்டாமகனே.

வசனம்.

மகனே இன்னம் சற்றுநேரம்பொறுப்பாயடா இதை சமைத்து, உனக்குண்டானது தருகின்றேன்.

மற்றொருபிள்ளை விருத்தம்.

என்னவென்றுரைதவேனன் என்னரும்பசினையயிப்போ
பன்னவும்போமோதாயே பக்ஷமாயென்னைவிளித்து
தினனவேதேனும்பண்டம் சிற்றநீகொண்டிடாமல்
உன்னியிக்கணமளித்தால் உயிர்தரிப்பேனம்மாடி.

வசனம்.

தாயே, பசி அகோரமாகின்றது என் வதனத்தை நோக்கு வாய் தின்னவே தேனுமளிப்பாய், இப்படி கேழ்க்கின்றேனென அடியன்மீது கோபம்வேண்டாம். உயிர்போகின்றததடி.

ஸ்ரீ சுசீலை தரு.

ஷை வர்ணம்.

பண்டமளித்திடசையில் பண்டுளதொன்றில்லையடா
உண்டியதுபரபரப்பா யுதவுவேண்டாமகனே.

வசனம்.

மகனேஉனக்குத்தின்பண்டமளிக்க பழைமையாகியதொன்று மில்லையடா சீக்கிரமாக அன்னம்வட்டித்து அளிக்கின்றேன். சற்று தாமதிப்பாயப்பா.

இன்னொருபிள்ளை விருத்தம்.

எப்படிபசிபொறுப்பே னென்செவியடைக்குதையோ
செப்படிநேற்றுநான்வாய் திறந்தாச்சேசீசும்ம
இப்படிமோசமெய்தல் ஏற்குமோஎந்தனுக்கே
உப்புநீராகிலுந்தான் ஒருவிழுங்கீய்ந்திடாயே.

அம்மணிபசிப்பிணியால், என்னிருகாதுமடைக்கின்றது நேற்றுகாலையில் வாய்திறந்ததாச்சே நீ யென்விஷயத்தில் இப்படி மோசம் செய்யலாகுமா? இதுபெற்றவளாகிய வுனக்குத்தகுமா? உப்பிட்ட ஜலமாவது ஒருவிழுங்கு அளிக்கமாட்டுவையா.—

ஸ்ரீ சுசீலை தரு

ஷை வர்னம்.

உப்புகற்கும்வழியில்லா வுணிகளானேமடா
இப்பொழுதேகாய்த்திதனை யீய்ந்திடுவேன்மகனே.

வசனம்.

அடபாலா உப்புக்குக்கூட கதியில்லாதவ்வளவு தரித்திரப்பிழைப்புபிழைக்கின்றோமே இப்புல்லரிசிதவிர என்கையில் ஒன்றுங்கிடையாதே இப்பொழுதே இதைவட்டித்து, அளிக்கின்றேன் சற்று நிதானிப்பாயப்பா.

வேறொருபிள்ளை விருத்தம்.

தந்தைதாயாரிருந்தும் தனையநான்பசியிநோயால்
சிந்தைநைந்துருகிவாடல் தேவருக்கேற்குமோதான்
வந்தனமாவதிவேன் மாங்கனியளவுசாதம்
எந்தனுக்கன்பதாக வீய்ந்துநீபோஷிப்பாயே.

வசனம்.

அன்னையே அடியேனுக்குத்தாய்தந்தையர் இருந்தும், யான் இப்படி அரற்றலாகுமா? உன் காலிலாவது விழுகின்றேன். ஒரு மாங்கனியளவுசாதம் கிருபைசெய்வாயடி.

ஸ்ரீ சுசீலை தரு.

ஷை வர்ணம்.

உன்மழலைவார்த்தையினுல் உருகுதடாநெஞ்சமிதோ
இன்னொடியில்நான்தருவேன் இஷ்டபடிமகனே.

வசனம்.

அட என்னிளஞ்செல்வமே உன் மழலைச்சொற்களைக்கேழ்க்க என்மனமானது நெய்யைப்போல் உருகிப்போகிறதடா உன்னிஷ்டப்படி ஒரு நொடியில் தருகின்றேன் இங்கனே யிருப்பையப்பா.

கடைசிபிள்ளை விருத்தம்.

புரண்டுமண்மேல்விழுந்து புலம்பியேஅழுதிட்டாலும்
இரண்டுநாழிகைபொறென்றே யியம்பிடுவாய்நீயல்லால்
முரண்டுமென்பசிதணித்து முகமலர்ச்சிக்கொள்வாயோ
வரண்டிடுதையோவென்னு வாரடிகஞ்சிதானே.

வசனம்.

அடியென்னைப்பெற்றமாதாவே பசிப்பிணியால் நான்தரையில் விழுந்து புரண்டு புரண்டு அழுதாலும் இரண்டு நாழிகைபொறுத்து வாவென்று உறைப்பையேயல்லாமல், என்னிளைப்பைத் தவிர்த்து முகமலர்ச்சி கொள்ளப் போகின்றனையா? வஞ்சம் வேண்டாமடி, என்னுவு வரண்டுபோகின்றது கஞ்சிவார்ப்பாயம்மா.

ஸ்ரீ சுசீலை தரு

ஷை வர்னம்.

கஞ்சிவார்க்கத்தடையில்லை கண்ணேயென்கண்மணியே
கிஞ்சிதநேரம்பொறுத்துக் கேளடாநீமகனே,

வசனம்,

அட என்னிருகண்மணி பெற்றபிள்ளைக்குக் கஞ்சிவார்க்காத பரமலோபியென்று, நினைத்தனையோ ? இல்லாதகுறையேயொழிய மற்றொன்று மில்லையடா ஒரு கிஞ்சித நேரம் பொறுத்துவருவாயப்பா.

ஸ்ரீ சுசீலை விருத்தம்.

மக்களாவென்னைநொந்து மனதுதுக்கிக்கவேண்டாம்
ஒக்கவெல்லீருங்கூடி ஒருநொடியளவுவீதி
புக்கியேயாட்டமாடி போஜனங்கொள்ளவந்தால்
அக்கரையாயதற்குள் ஏமுதுசெய்துதவுவேனே.

வசனம்.

அடமக்களா என்னைநொந்து துக்கிக்கவேண்டாமடா ஒரு நொடியளவுநேரம் நீங்களெல்லோரும் ஒருமிக்க வெளியேசென்று விளையாடிவந்தால், அதற்குள் இவ்வரிசியை வட்டித்து உங்களுக்குப்போஜனமிடுவேன் சற்றுபோய்வாருங்களடா.

மக்கள் வசனம்.

அப்படியேசென்று விளையாடிவருகின்றோம். சமையல்வெகு நேர்த்தியாக ஒரு நொடியில் செய்ய வேண்டும். வாருங்களடா வீதிக்குப்போகலாம்.

ஸ்ரீ சுசீலை வசனம்.

ஆ! துவாரகாவாசா எமக்கென்ன காலம்நேர்ந்தது தரித்திரமே குடியாய்க்கொண்ட இம்மிடிமையர்க்கு எனிம்மைந்தரை யளித்தீர். செருக்குற்ற செல்வர்களுக்களிக்கலாகாதா ? இதுவுமுன் திருவிளையாட்டோ ? அல்லதுன்சோதனையோ ? சீ! சீ!! மூட மனமே ஏன் வாயில் வந்தவாறு பிதற்றுகின்றனை. பாலர்கள் வந்துவிடுவார்களே அன்னங்கேழ்ப்பார்களே இப்போதுந்தடை புகன்றால் சண்டையிடுவார்களே வீணாய் ஆலோசிக்கவேண்டாம் இப்புல்லரிசியைவட்டிக்க பிரயத்தனிப்பேனாக.

ஸ்ரீ சுசீலை தரு.

இ-ம்-சாமா-அடதாளசாப்பு.

"நடந்துவரமயிலே" என்கிற வர்ணமெட்டு.

முட்டுரேனுலையே சமைத்திட
மூண்டிதோஷிலையே
வாட்டமடைந்தவென் பக்கள்பசியாற
வாருடனேகளை மாறியிளைப்பாற. (மூ)

அமுதினைக்களைந்தேன் பாத்திரத்தில்
அன்புடனேவளைந்தேன்
சமுசாரமேதுக்க சாகரமாமென்று
சாற்றுமெந்தனரி தாசுறைமெய்யின்று. (மூ)

சாதங்கொதிக்கிறதே பொங்கிபொங்கி
தரையில் துளிக்கிறதே
வேதமுணர்ந்தவித் தகனைக்கைத்தொட்டு
வேண்டியபணிசெய் மெல்விநயப்பட்டு. (மூ)

இன்னம்வேகவில்லையே இளைஞர்கள்
இங்குவந்தால் தொல்லையே
பன்னகசயனுவுன் பக்ஷபாதந்தானோ
பார்ப்பனத்தியென்மேல் பாராமுகமேனோ. (மூ)

ஸ்ரீ சுசீலை வசனம்.

ஏ! பன்னகாசன! இதுவுமுன் பக்ஷபாதமோ? அல்லது? சோதனையோ? இல்லாவிடின் இப்பார்ப்பனத்தியின்மீதுபாராமுகமோ ஐயோ தேவா இந்த அஷ்டதரித்திரத்தை எமக்கேனளித்தனை, ஆ! ஆ! கஷ்டம் கஷ்டம், உருக்மணி நாதா இனிமேலாவதருள் செய்யமனமுண்டோ இல்லையோ சரி சரி பாலர்வரும் வேளையாயிற்றே இப்புல்லரிசியும் வேகவில்லையே என்செய்வேன்.

முதற்பிள்ளை இங்லீஷ்-நோட் ஆதி.

அம்மா! அம்மா!! அம்மாடி!!!
ஆலசியஞ்செய்வ தென்னடி
சும்மாநீ சும்மாநீ
ஐ-ஒ ஆறைத்தாலினி மேல்பொறுக்கேனடி. (அ)

ஸ்ரீ சுசிலா-கண்ணி. "ஆ, மகனேபாம்பு" என்கிற வர்ணம்;

இ-ம் அபுரூபம்-சாப்பு.

அம்மா ஆம்மாடியென் றரைநாழிகைக்குமுன்
ஞகவந்துவிளை யாடநீசென்ருயே சுகனேசுகனே
சும்மாவிதற்குளிச் சோறுசமைத்தாமோ
தொந்தரவீயாமல் சொல்லாடலில்லடாமகனே மகனே.

மற்ருெருபிள்ளை-நோட்டு

அம்மணி! அம்மணி!! அம்மணியே!!!
ஆடிவந்தேனி தோசற்குணியே
இம்மாத்ரம்-இம்மாத்ரம்
எனக்களிப்பாயடி மனங்களிப்பாய்நதி, (அ)

ஸ்ரீ சுசீலை-கண்ணி.

ஷை வர்னம்.

அம்மணிஅம்மணி அம்மணியென்றுநீ
ஆகாத்தியஞ்செய்தால் அன்னங்கிடைக்குமோ அளியே அ.
இம்மாத்திரநேரம் இப்பசிபொறுத்தவன்
இன்னம்சற்றுபொறுத் திடலாகாதோசொர்னக்கிளியே கி.

இன்னொருபிள்ளை நோட்டு.

மாதா! மாதா!! மாதாவே
மக்களைபெற்றதும்விருதாவே
எதாகும்-எதாகும்
இப்படிபட்டினி ஒப்பியிருந்தாலினி (மா)

ஸ்ரீ சுசீலை-கண்ணி.

ஷை வர்ணம்.

மாதாமாதாவென்று-மாதாவைவெறுத்திட்டால்
மாதாவென்செய்வது மறுமொழிகூறுமென்கண்ணே க.
மூதாதைசெய்வினை மூண்டதிங்கனமையோ
முகமிகவாடாதே முன்னமளிப்பேனன்னம் விண்ணே வி.

வேறொருபிள்ளை நோட்டு.

தாயே! தாயே!! இதுதகுமா
தனையநான் படுந்துயருனைவிடுமா
நீயாவென் நீயாவென்
னிடபசிதணிப்பவள் மிடிமையைதவிர்ப்பவள் (தா)

ஸ்ரீ சுசீலை-கண்ணி,

ஷை வர்ணம்.

தாயேதாயேயென்று சஞ்சலங்கொள்ளாதே
தண்ணீருஞ்சாதமாய்தரையி லிறக்கிறேன் சுகனே சுகனே
ஓயாமல்கூவாதே ஒருநொடியாரட்டும்
உன்பசிதீர்ந்திட வுகந்தளிப்பேனன்னம் மகனே மகனே

கடைசிபிள்ளை நோட்டு.

அன்னாய்! அன்னாய்!! அன்னாய்!நீ!!
ஆடிவரும்படி சொன்னாய்நீ
என்னாநீ என்னாநீ
என்புறம்பார்த்திடு முன்பசிதீர்த்திடு. (அ)

ஸ்ரீ சுசீலை-கண்ணி.

ஷை வர்ணம்.

அன்னையன்னையென்றே அவசரங்கொள்ளாதே
ஆக்கப்பொறுத்தாப்போல் ஆறப்பொறுத்திடு துரையே து
இன்னமுந்தடையில்லை ஏகினதுதொல்லை
ஈய்ந்திடுவேனன்ன மிங்ஙனமுட்காருபொறையே பொ.

ஸ்ரீசுசீலை விருத்தம்,

மைந்தரேயிலைகடைத்து வருகுவீர்நானதற்குள்
தந்தைகட்டளையின்வாறு சன்னதவீதியேகி
அந்தணனைகபார்த்தோர் அதிதியைக்கூட்டியிங்கு
வந்தவர்க்கிட்டமிச்சம் வருத்திடுவேனுங்கட்கே.

வசனம்.

பாலர்காள், இதோ இப்புல்லரிசிக்கஞ்சி ஆறிவிட்டது. நீங்கள் அதிதுரிதமாக இலைக்கலங்கள் சம்பாதித்துவாருங்கள். நான்அதற்குள் உங்கள் தந்தையிட்ட கட்டளைப்படி சன்னதி வீதிக்கேகி ஓர் பிராம்மண அதிதியைக்கூட்டிவந்து, அவரை முந்தி திருப்திசெய்வித்து, மீந்ததை உங்களுக்குப்பாகிக்கின்றேன். போய்வருவீர்.

ஸ்ரீ சுசீலை தரு.

"காசிநாதா இதுவுன்னருளோ" என்கிற வர்ணமெட்டு.

அய்யா அதிதியாகவருவீர் ஓ அய்யா
அன்னம்படைப்பேன் அரும்பசிதணிப்பேன்
நன்னீருமளிப்பேன் நானுபசரிப்பேன். (அ)

துரையோ குசேலதாசென்பவரே என்
தரைதனில்நாங்கள் சாதன்புமாக்கள்
விரைவுடனீங்கள் விசையஞ்செய்யுங்கள். (அ)

வேதமுணர்ந்தவித்தகனே-சதுர்
பேதம்வையாதீர் பீதிகொள்ளாதீர்
வாதம்செய்யாதீர் மறுத்துவிள்ளாதீர், (அ)

ஜாலம் வேண்டாம்வேண்டாமிப்போது மிக
பாலரிக்காலே பசிப்பிணியாலே
சாலவாயாலே சலிப்பதினாலே. (அ)

நேரம் ஆய்விட்டதென்றேயின்று வெகு
கூரமெண்ணாதீர் குறைபுகலாதீர்
தீரம்விடாதீர் திகைத்துவாடாதீர். (அ)

வஞ்சம் வைக்காமலேதிரும்பும் என்மேல்
கெஞ்சியேவந்தேன் கிட்டிநான்மகிழ்ந்தேன்
அஞ்சலிதந்தேன் அருந்துதிபுரிந்தேன். (௨)

ஸ்ரீ சுசீலை வசனம்.

சுவாமி தாங்கள் யாரோ? இவ்வடிமைக்குத் தெரியவராது பார்த்தால் பிராம்மணரைப்போல் தோற்றுகின்றது. ஆனதுபற்றி எனதில்லத்திற்குவருவீர் அன்னம் புசிப்பீர் இளைப்பைத்தவிர்ப்பீர் கிருபைசெய்வீர்.

அதிதி விருத்தம்.

சன்னசம்பாவட்டித்து தயிருபால்நெய்மோரோடு
பின்னமில்லாதெனக்குப் பெய்துசட்சுவைபொருந்த
அன்னமேயிடுவதல்லால் அதற்குபின்வடைபாயாசம்
முன்னநீசாதிப்பாயோ மொழிந்திடில்வருகுவேனே.

வசனம்.

அமமணி நான்வடதேசப்பிராம்மணன் உன்னிஷ்டபடி விருந்துக்குவருகின்றேன் ஆபின் சன்னசம்பாவமுது தளிகைசெய்து, தயிரு, பால், நெய், மோர் இவைகளை கோடைகால மாரியைப்போல், வருஷித்து, ஆறுசுவையும்பொருந்த அன்னமிடவேண்டும் அதுவுந்தவிர வடைபாயாசமுதலிய பலகாரபக்ஷணங்களும், சாதிக்கவேண்டும் அப்படிசெய்வதானால் வருகின்றேன்.

ஸ்ரீ சுசீலை விருத்தம்.

இப்படிகேழ்ப்பதையோ ஏற்குமோவுலகின்கண்ணே
எப்படியானளிப்பேன் ஏழையாச்சேயென்னையா
தப்படிபேசமாட்டேன் தயவுடனின்றுநீரும்
ஒப்பியேவருவீரானால் உள்ளதைசாதிப்பேனே.

வசனம்.

சுவாமி உலகின்கண் தங்களைப்போலொத்த அதிதியரைவிருந் துக்கழைத்தால், இப்படியுங்கேழ்க்கலாகுமா? நான் ஏழையாச்சே கேழ்க்கும் வண்ணம் எவ்விதமளிப்பேன். பொய்வார்த்தை புகல மாட்டேன், இன்றைப்பொழுது தயவுசெய்து, என் குடிலுக்கு விஜயம்செய்வீரேயாகில் உள்ளதைவஞ்சனையின்றி அளிக்கின்றேன் வேறுவிதகியாபகம்வேண்டாம் வருவீர் இதோ பரிகலம் போட்டி ருக்கிறது உட்காருவீர் யான் அதிசீக்கிரம் பரிமாறுகின்றேன்.

ஸ்ரீ சுசீலை தரு.

இ-ம் கேதாரம்-ரூபகம்-சாப்பு.

எந்துகுவாலகிநாடே என்கிற வர்ணம்.

எப்படிநானிக்கஞ்சியை ஒப்பியேயிவர்க்களிப்பேன்
எண்சாணுடம்புமோர்சாணாய் எங்குதெவ்விதங்களிப்பேன். (எ)

இப்புவியில்பெண்ணாய் பிறந்திப்படியுருகலாமோ
ஈசனேயிம்மிடிமையால் எண்ணமிட்டலையப்போமோ. (எ)

வந்தவரையுபசரித்து வாகுடனன்னமீயாது
வாடுகிறேனிந்தப்பழி மாதவாவுனைவிடாது. (எ)

பத்திரத்தில்வார்த்தேனையா பாசமாய்க்கண்ணோக்கிடுவீர்
பார்ப்பனத்தின்மீதுகோபம் பண்ணாமலருந்திடுவீர் (எ)

ஸ்ரீ சுசீலை வசனம்.

அய்யரேகோபம்வேண்டாம் அஷ்டதரித்திரம் எங்களைவாட்டு கின்றது. இதோயான் முழுபிரியத்துடன் இப்பத்திரத்தில் வார்த் ததையருந்தி எம்மைப்புனிதராக்கவேண்டும் சுவாமி.

அதிதி தரு.

இ-ம் அடாணா ஆதி

"எப்படியகப்பட்டாளோ பாரப்போம்" என்கிற வர்ணமெட்டு.

சீச்சீபைத்தியமேபோபோ அடிசீச்சி
காச்சிமூச்சியென்றுநீகை வீச்சியழைத்தாயிதற்கோ. (சீ)

கொஞ்சிகொஞ்சியென்னையின்று கெஞ்சியேவழிமடக்கி
அஞ்சலிபுரிந்திதுபுல் கஞ்சிவார்க்கவே துணிந்தாய். (சீ)

ஆப்பம்வடைதோசையுடன் சாப்பிட்டந்தணரகத்தில்
எப்பமிடுமெந்தனைநீ யூப்பிகப்பரைகொடுத்தாய். (சீ)

ஆத்திரமாய்க்கூவிவெகு நீத்தமுடன்கூட்டிவந்து
பாத்திரமறிந்திடாமல் சூத்திரனைப்போனினைத்தாய். (சீ)

மைந்தரேயுந்தனுக்கொரு மங்கையாயிருக்கும்போது
எந்தனையுபசரித்து சிந்தனைப்படுவதென்ன. (சீ)

மக்களைக்கணேக்கணேக்க துக்கமேபெருக்குதையோ
இக்கஞ்சியளித்துயிர்கள் தக்கும்படிசெய்திடுவை (சீ)

அதிதி வசனம்.

ஏ! அஷ்டதரித்திரங்குடிகொண்ட மாதுஸ்ரீ உனக்கென்னபைத்தியம் மேலிட்டதோ இப்போஜனத்திற்கு விருந்தாளும் வேண்டுமோ ரொம்மநன்றாயிருக்கின்றது காற்படி காட்டுப்புல்லரிசியைக் கொதிக்கவைத்து, இதோபசிப்பிணியால் வாடுகின்ற மக்களுக்களிக்காமல் வழியேபோகிற பிராமணனாகிய என்னை யழைத்துவயிற்றெரிச்சலைக் கிளப்புகின்றனை உன் உபசாரம் போதும் போதும். இப்பாலர்களை நோக்க நேக்குதுக்கம்பெருக்குகின்றது. அவர்கள் ஆவியோ துடிதுடிக்கின்றது. நல்லவேடிக்கை இக்கஞ்சியை அவர்களுக்கிட்டு உயிர்களை நிலைபொருந்தச்செய் மயங்காதே.

மக்கள் தரு.

இ-ம்-கமாசு-ஆதி.

சாதிப்பாயா? இல்லையா? அம்மா; அம்மா; அம்மா; அன்னம் (சா)
வாதிப்பாயாமனம் பேதிப்பாயா சொல். (சா)

மன்னியவிளைப்பினை உன்னி தவிர்த்திடநீ
இன்னமுமயங்கினால் என்னேரம்பொறுக்கலாம். (சா)

இந்தவிதம்புலம்பி சிந்தைநைந்துருகவே
அந்தணன்சனியனாய் வந்தானெங்களுக்கிப்போ. (சா)

காட்டுப்புல்லரிசிக்கும் போட்டிகொணர்ந்திட்டாயோ
வாட்டுதேதேகமெல்லாம் மூட்டுதணல்பெருகி. (சா)

ஆகுதேகளேமிக வேகுதேஆவியும்
நோகுதேகாதடைத்து போகுதேயென்னசெய்வோம். (சா)

கற்றகல்வியையிங்கு முற்றுமளக்குமிவர்
நற்றவனுயிருந்தும் சற்றும்புத்தியைக்காணேம். (சா)

மக்கள் வசனம்.

அம்மணி இன்னமும் என்னேரம் பொறுக்கலாம். இந்த நச்சுகாரப் பிராம்மணனே ஏனழைத்துவந்தாய். "வீட்டிருப்பு கல்லடி சித்தனுக்கு தெரியுமா"? இந்த காட்டுப்புற்கஞ்சிக்கு போட்டியாக வந்தும், கற்றகல்வியை அளக்கின்றாரே நம்மேழ்மைக்குத் தகுந்த ஏழைப்பிராம்மணன் எங்கேயும் கிடைக்கவில்லையா? இவர் மதம் பிடித்தவர்போல் காண்கின்றதே, இவர் எப்போதருந்தப் போகிறார். எங்களுக்கெப்போ தளிக்கப்போகிருய் ஐயோ காதுமடைக்கின்றதே கண்களுமிருளுகின்றதே ஆவியுந்துடிதுடிகின்றதே வார்த்தையாவும் சக்தி யில்லையே இதென்ன விபரீதத்திற்கிடங்தேடிக் கொண்டனையம்மா.

ஸ்ரீ சுசீலை தரு.

இ-ம்-செஞ்சுருட்டி ரூபகம்.

"துரையே உன்னைப்பரையனுகச்செய்தானே" என்கிற வர்ணம்.

இந்தகஷ்டம் ஏனளித்தாமெயக்கிசா; பரமேசா
வந்தவர்க்கதற மைந்தருமலர
விந்தனைபுகல நெஞ்சமதகல. (இ)

பெண்ணுய்ப்பிறந்ததுபோதும்போதும்தேவா; அருணவா
மண்ணுமிகழ்ந்திட மார்க்கம்பிறழ்ந்திட
எண்ணியிடிந்திட இங்குமடிந்திட. (இ)

மாணிக்கங்கள்போலமக்கள் பிறந்தாரே சிறந்தாரே
காணியாக்ஷியில்லை கதியதுவேறில்லை
பேணுவதுந்தொல்லை பேசுவதுஞ்சள்ளை. (இ)

எப்போதகலும்மடியார்ப்படுந்துன்பம் வருமின்பம்
இப்புவியிற்கதி ஏதுமுண்டோததி
செப்புவைகீசதி செய்யாதாசீர்வதி: (இ)

ஸ்ரீ சுசீலை வசனம்.

ஆ! ஆ! ஜானகிமணாளா எமக்கேனிவ்வளவு கஷ்டமளித்தனை தாரித்ரமென்னும் பெருஞ்சாகரத்துள்ளழுந்தச் செய்தனையே பசி நோயானது வெந்த இருப்பூசிபோலவும், ஒப்பற்ற எமனைப்போலவும், ஆலகாலவிஷம் போலவும், கடலைச்சுவரடிக்கும் வடவாக்கினி போலவும், அடியாளை வாட்டுகின்றதே என்பசியைப்பார்ப்பேனு? மாணிக்கங்கள்போன்ற மதலைகளின் மனச்சஞ்சலத்தை நோக்குவேனு? ஆ! என்செய்வேன். இப்பெருந் துன்பமானது எம்மை விட்டு எப்போதகலும், உன்னைவிடவேறு கதியில்லை. உன்பாதாரவிந்தமே எனக்காதாரமெனக்கொண்டேன். தண்ணருள் பெருக சந்ததம் கண்ணோக்குவீர்:—

அதிதியாரே அடஞ்சாதித்தல்அழகல்ல கிருபைசெய்துஇதனையருந்தி எம்மைக்கிருதார்த்தராக்குவீர்.

அதிதி வசனம்.

அடதொம்மாணி இதென்ன பெருநச்சாயிருக்கின்றது. இவளைப்பார்க்காவிடினும், இச்சிறுபயல்களின் பசியைப்பார்க்கவேண்டும் இப்போது நாம் சாப்பிடாமற் போய்விட்டாலோ இவள் அழப்போகிறுள். இக்கஞ்சியும் விருதாவாய்ப்போய்விடும். அப்படிச்செய்வதழகல்ல நீசற்று வெளியில் போயிரு:—இதையருந்தி வருகின்றேன்.

(அருந்துதல்)

அம்மா சுசீலா இப்பேர் உனக்குத்தகுந்ததே இப்பேர்ப்பட்ட கஷ்டதிலுங்கூட தருமகுணத்தை நீ கிஞ்சிற்றும் மறக்கவில்லை. ஆ! வெகு சந்தோஷம், இம்மிடிமையில் இவ்வகைமேன்மையானசற்குணம் வாய்த்தது அதிசயம் ஆ! மெய்ஞ்ஞானியான குசேலமாமுனிவர் இருகணமணியை நிகர்த்தபெண்மணியே உன்னருங்கலமான குணத்திற்கு அனுசூயையும், அருந்ததியும் நிகரல்லவென்றுல், வேறுசாக்ஷியம் அனுவசியம். உங்கட்கு கூடியசீக்கிரம் பகவான் அருள்செய்வார் பயப்படவேண்டாம் நான்போய்வருகின்றேன்.

ஸ்ரீ சுசீலை வசனம்.

போய்வருவீர் அநேக நமஸ்காரம்.

அதிதி வசனம்.

தீர்க்கசுமங்கலிபவா.

மக்கள் வசனம்.

அன்னையே அய்யரும் ஒழிந்தார் இன்னமும் என்னதடை அருள்செய்வாயம்மா.

ஸ்ரீ சுசீலை வசனம்.

மக்களா அதிதியை தூஷிக்கலாகாது. உங்கள் பரிகலங்களுடன் வரிசையாய் உட்காருங்கள் ஒருவருக்கொருவர் சச்சரவு செய்யாதிர்களடா.

மக்களுக்கு, கஞ்சிவார்த்தல்.

ஸ்ரீ சுசீலை-தரு-காம்போதி-அ-சாப்பு.

"என்னவிதிவிட்டனேசிவமே" என்கிற வர்ணம்.

என்னகாலம் வந்ததோவிதியே ஐயோ

இந்தபுற்கஞ்சியை மைந்தர்க்களித்திட
முன்னமென்பாவஞ் செய்தேன்விதியே ஐயோ

முக்கினிபாகுடன் மக்களுக்கியாமல்
தொன்னைதைத்து வார்த்திடவிதியே ஐயோ

தோன்றினனே யெமன்போன்றவளாயிங்கு
சண்டைதொடுக்கின்றாரே விதியே ஐயோ

ஜாலமோவீதுந்தன் கோலமோவதியேன்
ஒருகுழந்தைக் கூட்டுகையில்விதியே ஐயோ

ஊட்டென்றின்னொன்றுகை நீட்டுதென்செய்குவேன்
கண்டிதனை மற்றொன்றுவிதியே ஐயோ

கால்வயிரிலையென்று மேல்விழுதேயிதோ
வேறொன்றங்கு பொறுமுதேவிதியே ஐயோ

வீழ்ந்துமண்மீதென சூழ்ந்துபுரளுதே
இம்மகவுங்கூவியேவிதியே ஐயோ

என்பசிதணிய வில்லையென்கிறதே
வார்க்கவேயில்லை யென்றுவிதியே ஐயோ

வாடியவனும்பொய்ப் பாடிகூத்தாடுறான்
ஒன்றையொன்றடிக்குதேவிதியே ஐயோ

ஒப்பியிந்தகோரம் எப்படிநோக்குவேன்
என்னகாலம்விதியே ஐயோ

ஸ்ரீ சுசீலை வசனம்.

ஆ! மண்ணவர்ப்புகழுங் கண்ணபிரானே இலக்கலப்பாத்திரத்தில், சுற்றிவார்த்த இக்கஞ்சியானது, ஒவ்வொரு குழந்தையின், கால்வயிற்றுக்கும் பற்றாமையைக்கண்டு, வேற்றுடம்பாகி நிற்கலானேனே ஐயோ இவர்களுக்குள்ள பசிப்பிணியாலல்லவோ ஒருவர்க்கொருவர் சண்டையிடுகின்றார்கள் எங்களையேன் இவ்விதகோரத்திற்குள்ளாக்கினை. மக்களா சச்சரவு செய்யவேண்டாமென முன்னமேயான் உங்களுக்கு ஆக்யாபனை செய்திருந்தும் இவ்வித கோலமுறுகின்றீர்கள் வேண்டாம் பேசாமல் அருந்துங்களடா.

பிள்ளைகள் வசனம்.

அம்மா சாப்பிட்டாய்விட்டது கையலம்பிவருகின்றோம்.

சுசீலை வசனம்.

போய்வாருங்களப்பா.

சுசீலை விருத்தம்.

மண்ணிலிம்மைந்தராலே மானவீனம்போய்த்தேகம்
குண்ணிதான்சாகவேண்டும் கொஞ்சகாலத்திற்குள்ளே
நண்ணினங்கணவன்முன்னே நடக்கும்வாறிதனைச்செப்பி
திண்ணமாயினியானாலும் சீர்பெறவழிச்செய்வேனே.

வசனம்.

இப்பூவின்கண் இம்மைந்தர்களால் மானவீனமெல்லாங்கெட்டு, இன்னங்கொஞ்சகாலத்திற்குள் உயிரைத்தான் விடவேண்டும். ஆனதுபற்றி முன்ஜாக்கிரதையாக இதுசேதியை நம்கணவனிடம் புகன்று, இனியாவது சீர்படுமார்க்கம் தேடுவோம்.

முதல்பிள்ளை வசனம்.

அம்மா:—அடுத்தமனையிலுள்ள ஒரு சிறுவன், என்னைமடக்கி உனது கிரகத்தில், என்ன பணியாரம் யாதுபதார்த்தம் செய்தார்களென்றுகேட்டான் அவைகள் எனக்கொன்றும், தெரியவரவில்லை, பணியாரம் என்பது எப்படியிருக்கும்? பதார்த்தமாவதியாது. அவை எவ்விதச்சுவையோடுள்ளன எடுத்துக்கூறல்வேண்டுந்தாயே.

சுசீலை வசனம்.

அய்யோ கேட்கும் பிள்ளைக்கு அவைகளின் ருசிபாகங்களை யெடுத்துச் சொல்லுவோமேயானால், தக்ஷணம் செய்து கொடுக்க வேண்டு மென்றால் என்செய்வது:—அப்பா இவ்வார்த்தைகளைச் சொல்லி எவனோ உன்னுடன் விளையாடவந்தான் அந்த வெளிப் பிள்ளைகளுடன் கூடிபேசவேண்டாமடா.

மற்றொருபிள்ளை வசனம்.

அம்மா:—தெருவில் ஒரு பையன் விளையாடிக்கொண்டிருக்கிறான் அவனுக்கு காதில் என்னமோ போட்டிருக்கிறது அது மினுக்குமினுக்கென்கிறது, கால்கைகளில் என்னமோபோட்டிருக்கிறது பட்டுசரிகைதுப்டா கட்டிக்கொண்டிருக்கிறான் அப்படியே எனக்குவேண்டும்.

சுசீலை வசனம்.

மகனே நாளைக்காகட்டும் எடுத்தணிகிறேன் அழாதே என் பீறல்சேலையை தொட்டிழுக்காதே.

வேறொருபிள்ளை வசனம்.

தாயே:—எனக்குத்தங்ககலத்தில் சாதம்போடவேண்டும்.

சுசீலை வசனம்.

தட்டானிடம்கொடுத்திருக்கிறது. இன்னம் ஒரு வாரத்திற்குள்வேலைமுடிவாகும். அதன் பின் உன்னிஷ்டப்படி அளிக்கிறேனப்பா.

இன்னொருபிள்ளை வசனம்.

அம்மா:—எனக்குப்பருப்பும் சர்க்கரையும் தரல்வேண்டும்.

கடைசிபிள்ளை வசனம்.

அம்மணி எனக்குமதுரமான பாலும் வெண்ணெயும் கிருபை செய்தளிக்கவேண்டும்.

சுசீலை-தரு-பியாக்-ரூபகம்.

மைந்தரிவர்கேள்விக்கென்ன மறுமொழி
சொல்வேன் இந்தமிடிமையைவெல்வேன். (மை)

சந்ததமுந்தந்தையோகம் சாதிக்கின்றாரே பெற்ற
தனையரையென்காலிற்பூட்டி தானகன்றாரே
சம்-சாரத்தைவென்றாரே. (மை)

பாலகாரங்கள்வேண்டுமென்றே பாதைசெய்கிறார்-ஐயோ
பாழும்பிறல்சேலையீதை பற்றிவைகிறார் பல
வாறாய்நொய்கிறார். (மை)

பூஷணங்கள் இல்லையென்று புலம்பிவாடுறார்பசும்
பொற்சரிகை ஆடையையிப் போதுநாடுறார்
புகழ்ந்துபாடுறார். (மை)

சர்க்கரைபால் வெண்ணெய்மோரும் தாவென்
றோதுறார் நான்தராவிட்டால் தவடைமீதில்
தாங்கமோதுறார் தப்புந்தாரும்பேசுறார், (மை)

தங்ககலம் தேவையென்று சண்டைபோடுறார்
ஓதாயேதாயேயென்றுகூவி தாவிவேடுறார்
சஞ்சலத்தால்மூடுறார். (மை)

சுசீலை வசனம்.

த்வாரகாவாசாஇல்லாமைக்கென்செய்வேன், ஒருவன்பாலும் சர்க்கரையும் விரும்புகின்றானே ஒருவன்மதுரமான மோரும்வெண்ணெயும் தாவென்கிறானே ஒருவன் நவமணிப்பூஷணங்களை அணியென்கிறானே ஒருவன் அரிய சரிகைப்பட்டுடைக்கோருகின்றானே. ஒருவன் தங்கக்கலத்தில் சாதம் போடென்கிறானே. இவைகளுக்கெல்லாம், அவர்களுக்கெத்தனை நாளைக்கு சமாதானம் சொல்லுவேன். அருந்துதற்குரிய சிசிவடித்த அன்னப்பாலும்வயிராரகிடைக்காதவ்வளவு, தரித்திராம்சையை உடைத்தாயிருக்கிறேனே வரவு அதிகமுடைய அளவிறந்த பெருஞ்செல்வத்தின் வளப்பமுடையவர்களும், தனதன்பொழியாத ஒருபிள்ளை விரும்பியவற்றை விரும்பியபடி அளித்துபசரித்தல் கூடாததாயிருக்க பேதையாகிய யான் எனது இருவத்தேழுமகற்கும், இஷ்டப்படி எம்மாதிரியளிப்பேன். அடமக்களா! உங்கள்தந்தையிடம்சென்று நம்குறையைத்தீர்த்துக் கொள்வோம் வருவீர்களடா.

சுசீலை தரு.

"ஆவிபோகுதே துரையே" என்கிற வர்ணம்.

நாதாநின்பாதம் பணிந்தேன்ப்ராண (நா)

மாதவகோலரே மதிப்புறுஞ்சீலரே
மாதினைப்பார்த்திடுவீர் மகிழாய்ப்ராண (நா)

சிற்பரத்யானரே ஜெகம்புகழ்நேயரே
அற்புதயோகீஸ்வரரே ஆண்டிடும்ப்ராண (நா)

சாகரத்யானரே சற்குண தூயரே
தேகசதானந்தரே தேக்கருள்ப்ராண (நா)

ஆகமவேதமும் அரியபுராணமும்
ஏகமாயுணர்ந்தவரே இங்கிதப்ராண (நா)

தனயரைக்கூட்டியே தங்களின்பேட்டியே
கனமுடன்கண்டேனெனையே காத்திடும்ப்ராண (நா)

சுசீலை வசனம்.

பூரணகைவல்ய யோகமாதவரே நமஸ்காரம் அடிமையையும் அருமந்தபக்களையும் கண்ணோக்கிப் பாரும் அன்பார்ந்த வார்த்தை தாரும் சுவாமி.

குசேலர் தரு.

"ஆயிநசிமேபஹார்" என்கிற வர்ணமெட்டு.

என்னசமாச்சாரமோ இங்குவந்த
தென்னசமாச்சாரமோ. (எ)

என்னசமாச்சாரம் ஏதுசமாச்சாரம்
என்னசமாசார மெடுத்துரைப்பாய் இருகண்மணியே. (எ)

மக்களைக்கண்டேன் மனமகிழ்கொண்டேன்
இக்கணமென்துய ரெல்லாம்விடுத்தேன் இளங்குயிலே. (எ)

அல்லல்படாமல் அட்டியிலாமல்
புல்லமுதைபாகம் புரிந்தனையா பொற்கிளியே. (எ)

அதிதிவந்தாரா அன்னமுண்டாரா
அதன்பின் தனயர் பசியாறினரா ஆரணங்கே. (எ)

நெஞ்சுகந்தாயா நீபுசித்தாயா
அஞ்சாமலென்னுட னறைகுவையே அ,அ,ஆ. (எ)
நிலவரமோடி நின்முகம்வாடி
கலங்கினுப்போல் மனது காணுறதே காரிகையே. (எ)

குசேலர் வசனம்.

பெண்ணரசே உன்னல்லொழுக்கத்திற்கும் மக்களின்வாஞ்சனைக்கும் மனமகிழ்ந்தேன் யாதுகாரணமாக மக்களுடன் என்னிடமணுகினை புற்கதிர்களைக்குத்தியாய்ந்து அமுதாக்கிப் பாகம் செய்தாயா? அதிதி யாவராயினும் பிராப்தமாயினுரா? அன்னமுண்டாரா? நம்மைந்தர்களின் பசிப்பிணியை அகற்றினுயா? சிந்தைகளித்தாயா? நீயும்புசித்தாயா? செந்தாமரை கமலத்தையொத்த உன்முகமானது ஏதோ வாடியிருக்கின்றதாய்த்தெரிகிறது. அதென்னகாரணம் சீக்கிரம் தெரிவி?

சுசீலை-தரு இ-ம்-காம்போதி-ஆதி.

"என்னகாரியம்செய்தாய் உத்தரா" என்கிற வர்ணமெட்டு.

பல்லவி.

நாதாநானென்னசொல்லுவேன் மக்கள்கோரத்தை
ஏதாய்த்ணித்துவெல்லுவேன். (நா)

அநுபல்லவி,

ஆதாரமாகவென்றும் அங்கைநெல்லிக்கனிபோல்
பாதாரவிந்தமதை பணிந்திருக்கின்றேனும்பால். (நா)

சரணம்.

சோற்றுலெடுத்தவுடம் பென்றுபுராணீகர்கள்
சொல்லிமுறையிடலுநன்றே ஐயா
நாற்றிசையிலும்வேத கோஷ்டமிடுவதென்ன
நலமுடனுயிர்வாழ்கவென்றே ஐயா
சாற்றியிருக்கும்வண்ணம் தனயரைக்கண்டுகந்து
தாரணிதனிற்பொருள் சம்பாத்தியம்புரிந்து
சீற்றம்கொள்ளாமற்போஷித்துமனமகிழ்ந்து
செவ்வனேபிழைக்கவெண்டும் திரமுடனேயறிந்து. (நா)

இந்தநெடும்புவியில் புண்ணியர்த்தனவான்கள்
இல்லாதவர்ப்பாவியராமே ஐயா
சந்ததமுந்தாரித்ரம் குடியிற்கலகம்வைத்து
சந்தமழித்திடுஞ்சீர்போமே ஐயா
சிந்தையில்அவிந்திடா தீயதனைக்கொடுக்கும்
தீமைகள்பலபல செய்திடவேவிடுக்கும்
புந்தியறவழியில் போகாமலேதடுக்கும்
புகழ்ச்சியதைக்கெடுத்து இகழ்ச்சியதைவளர்க்கும். (நா)

நன்னூல்கற்றுணர்ந்தநம் முன்னோரிவ்வறுமையை
நல்லொழுக்கத்திற்சேமனென்றே ஐயா
பன்னினபடியனு சாரத்திற்குமூலமாய்
பந்தத்தைத்தரு நமக்கென்றே ஐயா
இன்றுமுதலாகிலும் இதனைத்தொலைக்கவேண்டும்
இளைஞரெல்லோருமீடேறிநிலைக்கவேண்டும்
ஒன்றுபத்துநூறாக வொருங்கேதழைக்கவேண்டும்
உன்னியாலோசித்தோ ருபாயந்தொடுக்கவேண்டும். (நா)

சுசீலை வசனம்.

தக்ஷணாக்கினியம் ஆகவனீயம் என்னும் முத்தியையும் சுடர்க்கொழுந்து விட்டெறியும் வண்ணம் வேள்வியையும் வளர்க்கும் எனது மணவாளரே:—பாலர்கள்பசிநீங்க அன்னமில்லாமல் அழுதழுது ஏங்குகின்றனரே அந்தோ இது சோற்றுலெடுத்த துருத்தியென வேதங்களும் புராணங்களும் கோஷிக்கின்றனவே தனயரைப்போஷித்தல் தந்தையின் கடனல்லவா? பேதையாள் என்செய்வது இப்பூவின்கண் தரித்திரமுடையவர் பாவியரும் செல்வமுடையவர் புண்ணியருமல்லவோ? இம்மிடிமை ஒருவனழகையழித்து, உடம்பை உலர்த்திசோம்பலையெழுப்பி, உலோபத்தை மிகுவிப்பதல்லாமல் நாயக நாயகிமார்களுக்குமிடையே நீங்காக் கலகத்தையும் விளைவிக்கும் மேலும் பலவகைத்துன்பங்களும் இருப்பிடமாய், "ஒழுக்கம் உயர்குலத்தின்று, என்னும் பழமொழிக்கு மாறுதலாகவு மிருக்கின்றது. ஆனதுபற்றி இம்பரும் உம்பரும் தொழும் எம்பிரான் எழுந்தருளியிராநின்ற இதையதாமரையையுடையவரே:—இதனையொழிக்க வழி தேடுவீர்,

குசேலர் ஜாவளி.

"கொய்ரப்கி கொய்ரப்கி என்கிற வர்னம்.

என்செய்வேனென்கண்மணியே என்னிடமணுகிநீ
ஏங்கித்தவித்துத்துயர் தாங்கிவருந்திடில். (எ)

சன்மார்க்கங்களையிப்போதே
சாற்றுகின்றாயே மாதே
கன்மவினைகளைக்கருதாதே
கண்ணே கழறப்போகாதே. (எ)

நிலையெனதேகம் நம்பாதே
நீர்மேற்குமிழி வெம்பாதே
அலையல்துரும்பா யலையாதே
அற்பசுகத்தை நினையாதே. (எ)

அஞ்ஞானங் கைக்கொள்ளாதே
அப்படியிப்படி விள்ளாதே
நெஞ்சாரத் தூஷிக்காதே
நீதிசார முறைக்காதே. (எ)

மக்களுக்காய் நீவாடாதே
மாநிதியாசை நீடாதே
சொக்கிவிழுந்துபாடாதே
சோதனை புரியக்கூடாதே. (எ)

கண்ணபிரானை மறவாதே
கஷ்டசுகங்களை பாராதே
எண்ணியெண்ணி யிடியாதே
எந்தனையினிமேல் நோகாதே. (எ)

(குசேலர் வசனம்.

மாதரசே வறுமையைப்பற்றி என்னிடமுறையமிடில் நானென்செய்வது. அவரவர் கன்மவினையை அவரவரே அனுபவிக்கவேண்டும் இத்தேகமோ நீர்மேற் குமிழியாகும். அலையில் தத்தளிக்கும் துரும்புபோல் அலையாதே அஞ்ஞானத்தை முன்னிட்டு, அப்படியிப்படியென்று நீதிசாரங்களை யெடுத்தோதி என்னை மனதாரத்தூஷிக்காதே மக்களுக்காகவாடாதே மகராஜத்தன்மையை நாடாதே என்னை சோதனைசெய்யாதே துக்கத்தை மனதுள் வை

யாதே கண்ணபிரானை என்றும் மறவாதே கஷ்டசுகங்களை நினையாதே என்னைநோகாதே மாதே.

சுசீலை விருத்தம்.

கண்ணனுநீருமொன்றாய் கலைபயின்றீர்களென்று
பண்ணவர்ப்பலருஞ்சாற்றப் படிமிசைக்கேட்டேனையா
திண்ணியரவரிடத்துச் சென்றுநம்சேதியெல்லாம்
வண்ணமாயோதினின்றால் வறுமையைத்தீர்த்திடாரோ.

வசனம்.

மறைமுடிவையுணர்ந்தமாதவரே:—தாங்கள் கண்ணபிரானுடன், பலகலையும் ஒரே பள்ளியில், பயின்றீரென உம்மையொப்பார் பலரிஷிகள் பகரக்கேட்டிருக்கின்றேன். ஆனதுபற்றி அப்பீதாம்பரனிடம்சென்று நம்குறையைப்புகன்றால் அப்பரமமூர்த்தி நம்வறுமையைத்தீர்க்கிற்பார் போய்வருவீர் நாதா.

குசேலர் அகவல்.

1. நாணம்பயிர்ப்பெனு நல்குநாற்குணமும்
மாணமெய்திடவே மருவுநாயகமே
முற்பிறப்பிலறம் முயற்சியாய்ச்செய்தோர்
இப்பிறப்பிலதன் இயல்பினைக்கொள்வார்.

2. திரைகடற்சூழ்புவி ஜீவர்களெல்லாம்
வரையிலர்ச்செல்வமம் வருகவென்றுள்ளத்
தெண்ணியெண்ணிமனோ ராச்சியஞ்செய்தால்
நண்ணுமோ அவர்க்கது நவிலடிபேதாய்,

3. அருமருந்தன்ன அன்பரைக்காக்க
பெருநிதிவேண்டி பிதற்றியேவந்தாய்
கருப்பையண்டங்களில் கதிக்குஞ்ஜீவர்க்கும்
விருப்பமாய்க்கல்லுள் மேவுதேரைக்கும்.

4. உணவளிக்கண்ணன் உனதுமைந்தரையோர்
கணவளவேனுங் கைவிடுவானோ
ஆதலால்மக்கள் ஆயுளின்கழிவு
வேதனெழுதிய விதிப்படிமுடியும்.

5. உண்மையாநூலில் உணர்ச்சியில்லாத
வெண்மையர்ச்செய்கை விளம்பநீகேளாய்
செல்வமுஞ்சீரும் சிங்காரமனைவியும்
பல்வளத்தோடு பாலர்கட்பேறும்.

6. அழகியநலமும் அனுபவப்புகழும்
பழகினேனென்று பாடுவதன்றி
உயிர்க்கொலைபுரிதலும் உணவில்மாராயம்
செய்தலும்பொய்யை திரள்திரளாக.

7. செப்பியேவஞ்சனை செய்துதன்னண்பர்
ஒப்பிடாவண்மை உதாசினம்பேசலும்
நல்லவர்மனது நடுநடுங்கிடவே
அல்லற்படுத்தலும் ஆலயப்பொருளை.

8. வவ்விதம்மாதரை வாகுடன்கூட்டி
எவ்விதமாயினும் ஈய்ந்தன்னியர்ப்பால்
நன்னடையாரென நாயதுபோலவே
இன்னிதிக்காக எங்குந்திரிந்து.

9. தானுறும்பொருளைத் தரையிற்புதைத்து
தீனருங்கண்டு சீயெனத்தூற்ற
சுடலையைத்தினமும் சூழ்ந்திடும்பேய்போல்
அடவுடனேகார்த் தார்த்துவாழ்வார்கள்.

10. பன்னுமப்பொருளால் பாழ்நரகெய்தி
இன்னமும்பலவித இடுக்கணுண்டாகி
துற்குணமிக்க தோன்றுமல்லாமல்
நற்குணமதனுல் நண்ணுமோநண்ணு.

11. ஐயையோவந்த ஆட்கொல்லிபின்மேல்
வெய்யவாழ்க்கைக்காய் விருப்பநான்வைத்தேன்
கண்ணனையணுகி கரங்களையேந்தேன்
எண்ணரும்பொருளை யீயெனக்கேளேன்.

12. குடும்பமிச்சேற்றில் கூடியேயுழலேன்
கடம்புகொண்டாடேன் கஸ்தியைநாடேன்
பின்னடிவாடேன் பெருமையுந்தேடேன்
உன்னையும்பாரேன் ஓடிவாய்பெண்ணே.

சுசீலை தரு.

"பூசுங்களபம் சேர்க்க" என்கிற வர்னம்.

இப்படிமொழிந்தால் எப்படிபாலரை
இப்படியில்வளர்ப்பேன் நாதாகுணமேதா
ஒப்பியிவர்கோரம் செப்பத்தரமாமோ
விப்பிரனே சதுர்வேதா மலர்ப்பாதா. (இ)

அன்னமன்னமென்று சின்னவரெல்லோரும்
என்னேரமுமேங்குறுரே கேழ்க்குறுரே
அன்னையானென்செய்வேன் இன்னம்பாராமுகம்
உன்னிதாங்களெய்கின்றீரே உய்கின்றீரே. (இ)

எத்தனைநாளைக்கு சித்தங்குழைந்துயான்
கஸ்தியடைகுவேனையா வேடிக்கையா
பெத்ததந்தையர்கள் புத்திரரையெலாம்
நித்தம்போஷிக்கவேண்டாமா மிகுநேமா. (இ)

மண்ணவர்ப்புகழும் அண்ணல்துவாரகை
கண்ணபிரானிடம்செலவே குறைசொலவே
குண்ணியிப்போதகம் எண்ணமேனிடுகிறீர்
பெண்ணின்முகம்பாரும்விதியே நீரேகதியே (இ)

வசனம்.

நாதா:—இப்படிமொழிந்தால் இப்படியில் எப்படிபாலர்களை போஷிப்பேன் தீர்க்கொணுத்துயரம் நீடிபார்க்கப்பரிதாபமாகின்றதே பச்சாத்தாபமின்றி பராமுகம்செய்கின்றீரே எத்தனை நாளைக்கு, சித்தங்குழைந்து கஸ்தியடைவேன் பெத்தவர் நித்தமும் புத்திரரை சம்ரக்ஷணைசெய்யவேண்டாமா? மண்ணவர்ப்புகழும் கண்ணபிரானிடம் செல்வதற்கு மனங்குண்ணி எண்ணமிடுகின்றீரே பெண்ணின் முகம்பார்த்து போய்வாருமையா.

குசேலர் தரு.

"வழிவிடப்போன அத்ரி" என்கிற வர்ணமெட்டு.

இ-ம்-ஆனந்தபைரவி-[illegible]தி.

போய்வருவீரெனவே புகலுற்றாய்ப்பலதரம்
புத்திபாயவில்லையே பொற்கிளியே. (போ)

ஆய்ந்துணர்ந்தோரிந்த அற்பவறுமைக்காக
அல்லற்படுவார்களோ சொல்லடிசொல்லடிநீ. (போ)

இத்தரையோர்புகழும் எம்பெருமானுடைய
இடம்பாகாரத்துக்குமிவ் வேழைபார்ப்பானெனக்கும்
வித்தியாசமில்லையோ வீணையோசனை
வேண்டியதில்லை துயர் பூண்டிடாதேயடிநீ (போ)

என்னையொருபொருட்டாய் எள்ளளவாகிலும்
எங்குறைவைத்தவிர்க்க எண்ணிகளிப்பதாக
அன்னவன்மதிப்பானோ ஆருனக்கிந்தபுத்தி
அறிவித்தாரடிபேதாய் தெரிவிப்பாயிக்ஷணநீ. (போ)

பாதபம்வைத்தோநீர் பாய்ச்சிடாமற்போவானோ
பாலர்வயிற்றுக்காக பாதையேன்படுகிறாய்
வேதனன்றுவரைந்த விதிப்படிதான்முடியும்
வேறுவிதமாய்க்கொண்டு மாறுறைத்திடாதேநீ. (போ)

வசனம்.

அடிபேதாய் கண்ணபிராணிடம்போய் வரவேண்டுமென பலதரமுறையிடுகின்றனை அவரிருக்கும் படாடோபபயங்கரத்திற்கும் யானிருக்கும், ஏழ்மைக்கும், ஏணிவைத்தல்லவோ பார்க்கவேண்டும். என்னையொரு பொருட்டாய், அன்னவன்மதியாவிட்டால், பின்னையென் செய்வது? உனக்கிம்மாதிரி எம்மிடம் பேசும்படி உறைத்தவர்யார்? மரம்வைத்தவன் தண்ணீர்வார்க்காமற் போவானோ? பிர்ம்மன் விதிப்படி கர்ம்மத்தை அனுபவித்தே தீரவேண்டும். அடிமாதரசே யான்சொல்வதை வேறுவிதமாகக் கொண்டுமாறு உறைக்கவேண்டாமடி.

சுசீலைக்கு—"ஏனோடா இந்தமோடி" என்கிற வர்ணம்.

ஏனையா இந்தவார்த்தை இப்போ
தேனையா இந்தவார்த்தை. (ஏ)

தீனநாதன் சேவைகாண
திருகல் சொல்வதழகாமோ இப்போ. (ஏ)

பாழுங்குக்ஷி பாதைக்காக
பாலர்படும்பாட்டை நீக்க இப்போ. (ஏ)

எத்தனை நாளைக்கிவ்விதம்
எங்கிதவிப் பேனையையோ இப்போ. (ஏ)

நம்மைப்போன்ருர் நம்மைப்பார்த்து
நகைக்கின்ருரின்னகரில் இப்போ. (ஏ)

இருபத்தேழி ஊஞ்சருக்கும்
எவ்விதம்பதிலுரைப்பேன் இப்போ. (ஏ)

சுசீலை வசனம்.

தபோனரே அடிமையர் விஷயத்தில் ஏனிந்த வார்த்தையாடுகின்றீர் ஜெகதீசனைக்கண்டுமகிழ திருகல்சொல்வதழகாமா? குக்ஷிபாதைக்காக சொக்கிவாடும் மக்களின் பரிதாபத்தைக்கண்ணுக்குவீர் எத்தனைநாளைக்கு சித்தங்குழைந்து கஸ்தியடைவேன் இன்னகரில் நன்னயமுடன் இல்லறதருமத்தை நடாத்துபவர் ஏளனஞ்செய்கின்றனரே, அந்தோ! இருபத்தேழுபாலரும் ஏககாலத்தில் என்னைவருந்துவதனுல், எவ்விதம் சகிப்பது. முடியாதகாரியமல்லவா? ஐயோ! ஐயோ!! ஐயோ!!!—(சோகமுறல்)

குசேலர் விருத்தம்.

பதிவிரதாதரும நிலைகொண்டவெங்கன்
பாவையேயிதுவரையி லென்முன்னின்று
எதிர்வார்த்தை மொழியாமலிந்த
இங்கணுகிவாதமது செய்வதென்ன
அதிசுகுணமாதரசே கண்ணன்தாளை
அனுதினமுமுள்ள மதினியிருத்தி
துதிசெய்திருந்திடினம் மைந்தருக்கு
துணையாகிபோஷிப்போர் சோர்ந்திடாதே.

வசனம்.

பதிவிரதாதருமத்தில் எள்ளளவும் பிசகாதபாவையே நீயிதுவரை எம்முன்னின்று எதிர்வார்த்தையாடத்தெரியாதவள் இந்தநேரமிங்கணுகி வார்த்தையாடுவது மிக்க ஆச்சரியம் வேண்டாம். எம்மைவெறுக்காதே ஸ்ரீபகவானை அனுதினமும் சிந்தித்து வந்தித்து சிந்தையிற் பதித்திடில் மைந்தரை விந்தையுறபோஷிப்பார். சோர்ந்துபோவது தகாதடி.

சுசீலை விருத்தம்.

மாக்ஷிமையதைக் கொண்ட மாதருக்கு
மணவாளரே தெய்வமல்லால்வேறு
காக்ஷியீயுந்தெய்வ முண்டோவெந்தன்
காந்தரேயீதென்ன விந்தைதாங்கள்
தாக்ஷியில்லந்திரு கண்ணணின்பால்
சார்ந்திடிலன்னேன் மனது புளகமாகி
நீக்ஷிமிகபெருகிட நந்குறைதவிர்த்தல்
நிச்சயமேபோய்வருவீர் நேசனாரே.

வசனம்.

நேசரே கற்புநிலைமையைக்கைக்கொண்ட காரிகையர்க்கு காந்தரை விட காக்ஷியளிக்குந்தெய்வங் கனவிலுமுண்டோ ஆ! ஆ!! தாங்கள் புகல்வது என்னவிந்தை அக்கண்ணபிரானிடம் கால்கடுக்கநடந்து கண்டிடில் கண்ணியமளிப்பதுந்தவிற நம்மைவாட்டும் கனதரித்திரத்தையும் காற்றாய்ப்பறக்கடிப்பாரே.

குசேலர் வசனம்.

என்னடி தரித்திரம் தரித்திரம் எனபலவாறு கூறுகின்றனை அவ்வார்த்தைப் பொது மொழியாகக்கொண்டு தரித்து+இரம் என பிரித்துப்பார் நாம் நீடித்துதரித்திருக்கமாட்டோம் என்னும் பொருளடங்கிய எதிர்மறைத்தன்மைப்பன்மை வினைமுற்றாக முத்தமிழ் வித்வசிரோன்மணிகள் மொழிவதைநீ கேட்டிலையா ?

சுசீலை வசனம்.

யாவும்வாஸ்தவ்வியமே தத்காலம் மக்களின்கோரம் துக்க சாகரத்துள்ளழுந்தச்செய்கின்றதே நீடித்திராவிடினும் இப்போது பாதிக்கின்றதே இதுவரைப்பட்ட துன்பம்போதாதா இனியாவது சுகப்படலாமேநாதா.

குசேலர் ஜாவளி.

“ பலவிதமானகாமக்கலவிகள்” என்கிற வர்ணம்.

என்னடியிப்படிமீது என்னுடன்செய்கிறாய்வாது
பன்னுமொழியைக்கேளாயோ அடி
இன்னமுன்மனந்தேறாயோ நீ
தன்னையறிந்துப்பேசாயோ அகலாயோ
அடி உன்னிருப்பிடஞ்சேராயோ.

சுசீலை ஷை.

சேர்ந்திடில்மக்கள்கூடி ஊர்ந்துமேயெந்தனைநாடி
சோர்ந்திடுவோர்ப்பசிமீறியேனற்
கூர்ந்தார்மொழிகளைக்கூறி கை
யார்ந்திடவேணுமேயன்னம் ஐயோமுன்னம்
தப்பி னேர்ந்திடுமப்போதேபின்னம், (சே)

குசேலர் ஜாவளி.

“மைடியர்க்கண்ணே என்கிற வர்ணம்.

பின்னம்செய்வதாரடி பெற்றபிள்ளைகள்தானடி
இன்னமென்னகூறடி இந்தவாதமேனடி. (பி)

சுசீலை ஜாவளி.

ஷை வர்ணம்.

வாதமில்லையே மக்கள்தொல்லையே
மாதென்மனதையே வாட்டுகிறதையே. (வா)

குசேலர் வசனம்.

ஆ! துவாரகாவாசா மக்கள் மக்களென மக்களின் பசியாற்ற லுக்காய் மாதுமனஸ்தாப முறுகின்றனளே இதென்னகோரம் இவளோ! பதிவிரதாதருமத்தில் எட்டுணையும் பிசகாதவள் இல்லாமையினுல் அல்லவோ! பதிவார்த்தைக் கெதிர்பகரலாயிற்று. ஆ! ஆ!! ஆ!!! இனி:—

குசேலர் ஜாவளி.

“மாரன்வேதையினுல்” என்கிற வர்ணம்.

என்னசெய்குவதோ நான்
ஏதுமறியேனையையோ இனி. (எ)

பன்னகாசனு நின்னைநம்பினேன் பண்ணுமோர்வழி. (எ)

என்றன்முன்னே நின்றுவார்த்தை
என்றும்பேசா தின்றிப்பேதை
குன்றியேதேகம் மன்றுடுகிருள் தொன்றுவினையே. (எ)

மாதிவள்பிடி வாதமாக நீதமுடனிப் போதுத்வாரகைக்
கேதமின்றியே காதலாய்ப்போவும் நாதாவென்கிறுள். (எ)

சட்டமுடனே பொட்டெனவிது
கஷ்டதிசையால் நிஷ்டைகலைந்து
விட்டுவிடநே ரிட்டதிங்கனம் நஷ்டமுறவே. (எ)

சுசீலை வசனம்.

யோகீஸ்வரரே என்றும் எதிர்வார்த்தையாடாமல், இன்று ஆடுகிறாளென்றும் துவாரகைக்குச்செல்லும்படி பிடிவாதம் செய்கிறாள் என்றும் இவள் தொந்திரவால் நிஷ்டை கலைந்ததென்றும், தாங்கள் நிஷ்டூரமாய் வசனிக்கவும் அடிமை காதாரக்கேட்கவும் யாதுபாவம் செய்தனளோ? ஐயோ பிராணநாத் நான் ஒருபோதும் அப்படிச் செய்யப்பட்டவளல்ல ஸ்ரீ தரணையணுகி செல்வம் வேண்ட நமக்கிஷ்டமில்லாவிடினும், அவரது திவ்ய திருச்சேவையைக் கண்ணாரக்கண்டுவந்தாலும் போதுமானது தேவா.

குசேலர் வசனம்.

யாவும் சரிதான் இக்கோலத்துடன், அக்கண்ணனிடம் எப்படிச்செல்வது.

சுசீலை வசனம்.

நம்ம நிலைமையை அம்மகாத்துமா அறியாரா.

குசேலர் வசனம்.

அறிந்திருந்தாலும், அவ்விடத்தில் மதிப்பு எவ்விதத்தில் கிடைக்கும்.

சுசீலை வசனம்.

மதிப்பென்பதை மானிடர் பாராட்டுவரேயொழிய பகவான் பாராட்டமாட்டார் துரையே.

குசேலர் வசனம்.

பாராட்டமாட்டாரென்பது உனக்கெவ்விதம் தெரியும் பெண்ணே.

சுசீலை வசனம்.

தெரியும் எறும்பு கடை எண்பத்துநான்குலக்ஷம் ஜீவராசிகளுக்கும் படியளக்கும் பகவான் ஏழை பணக்காரரென்னும் வித்தியாசம் கொள்ளுவரா? எள்ளளவும் கொள்ளமாட்டார் நாதா.

குசேலர் வசனம்.

ஆயின் போகலாமென்றாலும்.

குசேலர் தரு.

'துணைநினையல்லாவில்லை'' என்கிற வர்ணம்.

அவர்முன்னெப்படிச் செல்வேன்
அகதிநானென்பேன் அருள்கொள்வேன். (அ)

விவரமெவ்விதம் விள்வேன்
வெறுங்கையனாக தென்பாக. (அ)

பகவான்குரு மன்னவன்
பார்வையி லேகுமவன்
பகாமுட னேதேனும்
பரிந்திடவேணும் கனந்தோணும். (அ)

உதரபோஷணைக்காக
உகந்து த்வாரகைக்கேக
சுதரிசனமுங்காண
சொற்றனைநாடி எனைதேடி. (அ)

நதரொன்றுமின்றி மாதே
நடந்திடவு மாகாதே
இதற்கென்ன யோசனை
எடுத்துரைசீராய் அடிநேராய். (அ)

குசேலர் வசனம்.

பவளம்போன்ற அதரமுடைய பாவையே தெய்வம் குரு கோமான் இவர்களைத் தரிசிக்கச்செல்வோர் அன்னவர் அங்கேகிருக்கும் யாதொரு பொருளைக் கைக்கொண்டு சென்று காண்பார்கள் நம்முதரபோஷணைக்காக துவாரகாபுரியை நாடி நல்ல தரிசனம் கண்டுவரும்படி சொல்கின்றனை சரிதான் நதர் ஒன்றுமில்லாமல் நடந்திடலாகாது என்னயோசனையோ அதனைத்தெரிவிப்பாய்.

சுசீலை விருத்தம்.

அவலநீர்கொள்ளவேண்டாம் அடியவளில்லமேகி
அவசமாமைம்புலன்கள் ஆர்த்துசந்தோஷமாக
அவலிடித்தோடிவாரேன் அதனைகொண்டையமின்றி
அவனிபாரகனுக்கன்னாய் களித்தடிகண்டுவாரீர்.

வசனம்.

ஸ்ரீபரவாசுதேவர் பாதகமலங்களை பலமாக நம்பி வல்வினையைப் பறக்கடிக்கும் பிராணபதி வருத்தங்கொள்ளாதீர். இதோ அடியாள் நமதில்லமேகி நெடுநாளாய் சேர்த்துவந்த கிஞ்சிற்று புல்லரிசியை குதூஹலத்துடன் அவலாக்கி எடுத்தோடிவருகின்றேன். அதனைப்பெருமையாகக்கொண்டு கண்ணபிரானிடமளித்து அவரிணையடிகளைக் கண்டுவருவீர் நாதா.

குசேலர் வசனம்.

இஷ்டப்படி செய்வாய் மாதே.

சுசீலை விருத்தம்.

நண்ணியேயெம்மைவாட்டும் நவிலொணுமிடிமைதீர
தணணருளார்க்குசேல தாசரென்கணவரிப்போ
கண்ணபிரானிடத்து கதுமெனச்செல்லவில்லின்
கண்ணவற்செய்துதந்து கால்வழிகூட்டுவேனே.

சுசீலை அவல் இடித்தல்.

சுசீலை ஜாவளி.

தேசிகதோடி - ஆதி.

"சுத்தநிர்விகாரதேவா" என்கிற வர்ணமெட்டு.

அவலிடிக்கின்றேன் மிக்க
ஆவலாய்க்கண்ணன் புசிக்க
தவமுனிவர்க் களிக்க
தாரித்திரத்தை யொழிக்க. (அ)

வைரவுலக்கை கொண்டு
மாறிமாறி யிவ்விரண்டு
கைகளாற்பற்றி பண்டு
கஷ்டதிசை யதைவிண்டு. (அ)

பெம்மானருள் தருக
பெருநிதியும் வருக
இம்மிடிமையுங் குறுக
என்குடும்பமும் பெருக. (அ)

எக்காலமும் பிழைக்க
எங்களாயுளைக் கழிக்க
மக்களுயிர் வளர்க்க
மகராஜரா யிருக்க. (அ)

சுசீலை வசனம்.

இதோ இப்புல்லரிசியை உரலிலிட்டு இடித்தவலாக்கினேன். இனி இதன் கரிசு போக்கி எனது மணவாளரிடம் தருவேன். ஆ! என் புருஷசிங்கமே! அடியாள் அவலிடித்துக் கொணர்ந்தேன். தாங்கள் போர்லவயிட்டிருக்கும் வஸ்திரத்தைத்தாரும் இதனை முடிந்துதருகின்றேன்.

குசேலர் ஜாவளி.

"அரவாபரணனே" என்கிற வர்ணம்.

இந்தக்கந்தைதனி லேந்தியவல்தனை
எப்படி நீமுடிவாய்
செந்தாமரைவாயால் தின்னுவனோவந்தி
தீனதயா பரனே,
மாதவன்வாழுந்து வாரகைக்கேகென
வாட்டுகிறு யெனையே
மூலையிலிருந்தோனை முற்றத்திலிழுத்து
விழிக்கவுஞ் செய்தனையே
தேடிவந்தானென்று தேறவிசாரித்து
சித்த மகிழுவனோ
ஏழைப்பார்ப்பானிவ னென்னபராமுகம்
எய்துவனோ வறியேன்.

சுசீலை வசனம்.

கலைமுழுதுங் கற்றுணர்ந்த காந்தரே ஏனிப்படி விசாரப்படுகின்றீர் பகவானுக்கு தங்களிடத்தில் பேதமிராது உம்மைக்கண்ட மாத்திரத்தில் அவர் எவ்வளவோ பிரியங்கொண்டாடுவார். அஞ்சாதீர் நம்முடைய நிர்வாகம் அவர் அறியாரா? சகலமுந்தேறித் தெளிந்த நீரே அச்சங்கொள்ளப்போமா? ஏதோ வஸ்திரத்தைத் தாரும் முடிந்துதருகின்றேன்.

குசேலர் வசனம்.

இதோதந்தேன் முடிந்துதருவாய்.

சுசீலை வசனம்.

ஆ! துவாரகாபதி எனது பிராணநாதர் சொன்னபடி கணக்கு. வழக்கற்ற பொத்தலாய்த்தானிருக்கிறது ஆகிலும் கூடியமாத்திரம் மடித்து பொத்தலை மறைத்து முடிவோம். தேவா முடிந்தா யிற்று பெற்றுக்கொள்வீர்

குசேலர் வசனம்.

திலகநுதல்வாய்ந்த தெரிவையே நான் போய்வரட்டுமா?

சுசீலை வசனம்.

போய்வருவீர். இதோ ஆயிரநமஸ்காரம் செய்துகொண்டேன்.

குசேலர் துவாரகைக்கேகுதல்.

இந்துஸ்தான்-ஜாவளி.

கோகுலபிருந்தாவனந்திகழ் கோபிகாமனோகரா
வாகொடுப்ரயாணமாய் மனதிலேகத்யானமாய்
வருகிறேனிதோ வருகிறேனிதோ வருகிறேனையனே. (கோ)

மாதுதுயர் தீரவே மைந்தரு மீடேறவே
வருகிறேனிதோ வருகிறேனிதோ வருகிறேனையனே (கோ)

மந்தஹாசம் பூணவே மலரடியைக் காணவே
வருகிறேனிதோ வருகிறேனிதோ வருகிறேனையனே. (கோ)

வண்மையருள் தேக்குவாய் வதனமதை நோக்குவாய்
வருகிறேனிதோ வருகிறேனிதோ வருகிறேனையனே. (கோ)

வசனம்.

உருக்மணி நாதா எப்போதும் நெடுந்தூரவழி நடந்தறியேன். உமதிருப்பிடம் இன்னம் எவ்வளவுதூரம் இருக்கின்றதோ! அதுவுந்தெரியேன். மார்க்கத்தில் யாதொரு கஷ்டமுநேராமல், காக்கவேண்டுந்தேவா ஆரப்பா என்னெதிராக வருகின்றவர் துவாரகாபுரி எவ்வளவு தூரமிருக்கிறது.

பாட்டைசாரி வசனம்.

துவாரகாபுரி இவடமேது அது நெடுந்தூரமையா.

குசேலர் கண்ணி.

"என்னைநீர்கைவிடில் என்னநான்செய்குவேன்" என்ற வர்ணம்

கண்ணன்வாழ்த்வார லையோவிதுநேரே
கண்ணுக்கெட்டாதப்பற் சாதமென்கிறரே கிருஷ்ணபூபா.

கண்ணி ஷை வர்ணம்.

எப்படிநடப்பேன் இவ்வழிகடப்பேன்
கப்புதேபயமும் கார்த்திடுவீரைய கிருஷ்ணபூபா.

வசனம்.

ஆ! ஜெகதீசா எவ்விதம் நடப்பேன் என் மனமானது நடுநடுங்கி பயமடைகின்றதே சீக்கிரம் அடியனைக்கார்க்க வோடிவருவீர் ஏது இவடத்தில் வழி நாற்பக்கமும் பிரிகின்றது. எந்த வழியென்று கண்டுபிடிப்பேன் இங்கு எவரையுங்காணேமே அதோ யாரோ ஒருவர் வேலைசெய்துகொண்டிருக்கின்றார் அவரையாவதனுக் கேழ்க்கலாமா? கேழ்போம் அய்யா துவாரகைக்கு வழியெப்படி.

பாட்டைசாரி வசனம்.

ஆரையா பிராம்மணரைப்போல்காண்கின்றது. சரியானவழியில்தானே போய்க்கொண்டிருந்தீர் அதைவிட்டு இப்படியேன் திரும்பினீர் வாரும் காண்பிக்கின்றேன் இக்கால்வழியிற்சென்று அதோதெரிகிற காட்டில் நுழைந்தால் பாதையேற்படும் போவீர்.

குசேலர் கண்ணி ஷை வர்ணம்.

காட்டிற்புலிசிங்கம் கண்டுசிதைத்தங்கம்
பாட்டைசாரியென்னை பங்கப்படுத்தாதோ கிருஷ்ணபூபா.

வசனம்.

இதோ காட்டில் நுழைந்தேன் அவர் சொன்ன பாதையைக் காணேமே.

குசேலர் கண்ணி ஷை வர்ணம்.

இந்தவழிமார்க்க மிங்குகண்டுகேழ்க்க
மூந்தியாருங்காணேன் மோசமேதோதோனேன் கிருஷ்ணபூபா.

வசனம்.

இன்னம்சற்று முன்னேக்கிப்பார்ப்போம். இதென்னவிந்தை இதற்கப்புறம் எப்படிச்செல்வோம் சிங்கத்தின் கர்ச்சனை இடிமுழக்கம்போற்காண்கின்றதே ஐயோ ஐயோ எனக்குநேராக அப்புதரில் புலியொன்று என்னை விளித்துப்பார்க்கின்றதே பின்னல் கரடியொன்று, துள்ளித்துள்ளி யோடிவருகின்றதே ஆ! இதென்னகஷ்டம்! ஏ! கிருஷ்ணபூபதி நீயேகதி.

குசேலர் விருத்தம்,

கடுத்திடுகானத்தோராள் கானெறித்தேடும்போது
கடுப்புலிதுரத்தக்கண்டு கதுமெனமரத்தைத்தாவ
திடுக்கெனநாகமொன்று சீறிமேற்பாயவன்னேன்
நடுக்குமாற்போலயானு நாதனேயலைதலானேன்.

வசனம்.

நடுக்காட்டில் வழிதெரியாமல் அலையுமொருவனை ஓர்புலியானது துரத்த அதனைக்கண்டு அவன் அருகிலிருந்த மரத்தின்மீதேற அங்கவனை ஏறவொட்டாமல், ஓர் பைங்நாகமானது, படம்விரித்து சீறித்தடுத்தால், அன்னவன் மனமானது, என்னவிதமாய் நடுங்குமோ? அவ்விதம் நடுங்கலானேனே? ஐயோ! இப்பக்கத்தில் ஏதோ வழிபோகிறது. சென்று பார்ப்போமா? பார்ப்போம். கரடியும் ஒதுங்கிவிட்டது அந்தோ! அந்தோ!! அந்தோ!!! காலில் ஓர் முள்தைத்துக்கொண்டதே இலட்சுமி சமேதா.

குசேலர் தரு.

"தில்லாந்திரி" என்கிற வர்ணம்.

ஐயோ இதுவெல்லாமுந்தன் அருளோஜெகதீசா
பையகாலிலோர்முள்தைத்து பாதிக்கிறதீசா
இதனைமெல்லவாங்குபவர் இங்கெவருங்காணேன்
கதறவிதிதானோநடுக் காட்டிலொன்றுந்தோணேன்
முள்வாங்கிடுங்கருவியுங்கை முதலாவதில்லையே
எள்வாரெனைக்கண்டவரிங் கிருப்பதுந்தொல்லையே
பெண்சாதியின்மொழியால்மனம் பேதித்துவந்தேனே
எண்சாணுடம்புருகிபலர் ஏசிடநொந்தேனே
வானோர்புகழ்தேவாவென்னை வாட்டிவருத்தாதே
நானேபரதேசியானேன் நஷ்டப்படுத்தாதே

இந்தவிதநேருமென எப்போதுமறியேன்
செந்திருவின் கண்ணனுவனே சேரவழிதெரியேன். (ஐயோ)

பாட்டைசாரி வசனம்.

• ஏனையா அழுகின்றீர் எங்கு போகவேண்டும் பொழுது போயிற்றே.

குசேலர் வசனம்.

அப்பா யான் துவாரகைக்குப் போகவேண்டும் இக்காட்டில் வழிதெரியவில்லை துஷ்டமிருகங்களின் கர்ச்சனை பயமாயிருக்கின்றது. காலில்ஓர் முள்தைத்துக்கொண்டது. என்செய்வேன் நடக்கக்கூட சக்தியில்லையே.

பாட்டைசாரி வசனம்.

எதோ முள்தைத்த விடத்தைக்காட்டும் பார்ப்போம்.

குசேலர் வசனம்.

இதுதானப்பா முள்தைத்தவிடம்.

பாட்டைசாரி வசனம்.

வாங்கிவிட்டேன் எழுந்துநடப்பீர் இதுதான் பாட்டை. நேராய்ச்சென்றால் எதிரில் ஓர் நகரம் தெரிகிறது, அதைத்தாண்டினால் சமுத்திரம்காணும் பிறகு படகேறிச்செல்லவேண்டும். அதிதுரிதமாய்ப்போவீர் பொழுதும் போயிற்று.

குசேலர் கண்ணிகள் காம்போதி திரிபுடை.

"என்னவிதிஎந்தன்விதிமன்னனாய்ப்பிறந்தபலன்" என்கிறவர்னம்.

அப்பனே துவாரகேசா எப்படிநடப்பேன்கானில்
அஞ்சுதேகால்கள் துஞ்சுதே
கொப்பளித்திரண்டுபாதம் திப்பிரமையாகிபயம்
கொள்ளுதேமுன் தள்ளுதே
இன்னமும்சரியாம்பாதை தென்படாமற்கொடிவழி
எகுதேமனம்நோகுதே
சூரியனுமிதோமேற்கு வாரியிலமிழ்ந்திருளும்
சூழுதே உரந்தாழுதே
துஷ்டமிருகங்கள்வெளிப் பட்டிடும்வேளையாயிற்றே
தூயனே மிகுமாயனே

காட்டுவழியைக்கடந்து நாட்டையணுகிவந்துற்றேன்
கண்ணனே மணிவண்ணனே
எத்தனை தூரம்போனாற் சமுத்திரங்காணப்படுமோ
எண்ணுதேயகங்குண்ணுதே
ஓடக்காரனென்னையுந்தன் னோடத்தின்மீதேற்றுவானோ
உச்சிதாவருளச்சுதா. (அ)

வசனம்.

ஆ! தெய்வமே எனக்கென்னகாலம் நேர்ந்தது. ஒருவன் தன் னிஷ்டப்படி நடத்தல்நலம். குருமொழி கேட்டுநடத்தல் அதினு நன்மை பகைவர் சொற்படிகேட்டல் துக்கமாகும்மனையவள் பேச் சின் நடத்தலோ? சாந்துக்கமாகும் என்ற முதியரம்வார்த்தை யுணர்ந்தும் இவ்வித ஆபத்துக்குள்ளானேனே இனி பயமில்லை காட்டைக்கடந்து நாட்டை யடைந்தேன் சமுத்திரந்தெரிகிறது. விரைவாகச்சென்று கரையையணுகி சற்று உட்கார்ந்து இளைப் பாறுவோம்.

ஓடக்காரர் பிரசங்கம்.

இந்தவிதமாமுனி குசேலதாசர்
எரிலகுமனைவியுரை கேட்டுதம்மில்
சிந்தையதுபூரித்து பயணமாகி
சீர்பெறுதுவாரகையை நாடிதேக
நைந்திடுக்கண்கண்மிக வனுபவித்து
நகர்வழிகடந்தாழி கரையைச்சேர
மந்தஹாசத்துட னோடக்கார்க்கூடி
வருகின்றார்தம்வரவை அறைகின்றாரே.

வசனம்.

இவ்விதம் சமுத்திரக்கரையில் ஓடக்காரர் வருகின்றபடி.

ஓடக்காரர் வருதல்.

இங்கிலீஷ் நோட்டு ஆதி.

ஓடக்காரர் நாங்களே
உண்மையறிவீர் நீங்களே
ஓடத்தின் மீதேறுவீர்
உடனெஞ்சம்பளம் தருவீர்தருவீர். (௧)

படகைதாண்டாற்றள்ளுவோம்
பரபரப்புடன் செல்லுவோம்
கடனிலையென விள்ளுவோம்
கைமேற்பணமுங் கொள்ளுவோம்கொள்ளுவோம். (ஓ)

சேதம்வாராமற் காக்கிறோம்
சீருயக்கரை சேர்க்கிறோம்
கோதை நேராமற்பார்க்கிறோம்
கொடிபறந்திட, தூக்குறோம்தூக்குறோம். (ஓ)

துவாரகாபுரி நாடுவோம்
துளசிதரனைக்கூடுவோம்
அவாவுடனெதிர்பாடுவோம்
அவரருளினைத் தேடுவோம்தேடுவோம். (ஓ)

குசேலர் வசனம்.

கோபிகாரமணா! இங்குள்ள தோணியேறிச் செல்லலாமென்றால் மீகாமனுக்குக்கூலிகொடுக்க அரைகாசுங்கையிலில்லையே இக்கப்பலோட்டுபவனே என்னைக்கூலிகேளாது ஏற்றிக்கொண்டுபோவானேன் வினைப்பதற்கு மிடமில்லையே ஏனெனில் நானோ வஸ்திரஹீனனாயும் மதிப்பற்றவனாயு மிருக்கின்றேனே ஒருக்கால்தேவகிதேவியின் இளஞ்செல்வராகிய திருக்கண்ணபிரான் திருச்சேவைக்குப் போகின்றேனென உண்மையைக் கூறின போதிலும், நம்புவானோ நம்பமாட்டானோ? ஆகிலும்யாவும் சென்றறிவோம்.

குசேலர் விருத்தம்.

கப்பலின்தலைவனேயான் கண்ணன்வாழ்த்வாரகைக்கு
செப்பமாய்த்தோணியேற சின்னகாசில்லைகையில்
ஒப்பிநீமனமுகந்தே உனதுநாவாயிலேற்றி
அப்பனேசென்றாற்புண்ய மனுகிநீடூழிவாழ்வாய்

வசனம்.

கப்பலோட்டு மீகாமனே துவாரகைக்குசென்று துளசிதரன் தரிசனம்செய்து வரல்வேண்டும். உனக்களிக்க சின்னகாசுங்கிடையாது. தயவுசெய்து, என்னை அக்கரைசேர்ப்பாய், நீ நீடூழிவாழ்வதாக இதோ ஆசிர்வாதம் புரிகிறேனப்பா.

ஓடக்காரர் விருத்தம்.

மதியிழந்தவரேநல்ல வாசகமுறைசெய்திட்டீர்
ததியுமையோடமேற்றல் தருமமென்றேபுகன்றல்
விதியதுவேறுமுண்டோ மேடிடுக்கண்டுலேக்க
துதிமிகநீர்செய்தாலும் சுகங்கிடைக்காதுபோவீர்.

வசனம்.

இஞ்சிற்றேனு மதியில்லாதவரே நீர் யார்காணும் நல்ல வார்த்தையோதினீர் போதும்போதும் இந்த வோடம் விடுந்தொழில் தவிற நமக்கேதேனும் வருமானமுண்டோ தருமத்திற்குப் பாடு பட்டுக்கொண்டிருந்தால் எமது வயர் வளர்ந்துவிடுமோ என்ன வுபசாரம்செய்தாலும் முடியாது. கூலிகொடுத்தால்தான் முடியும் பேசாதுபோவும்.

குசேலர் கண்ணிகள். சஹானா அடதாளம்.

இப்படியுரைத்தால் எப்படியாகுமோ
கப்பல்விடுத்திடுங் கண்ணியரே
விப்பிரனுமென்னை ஒப்பிவித்தோணியில்
இப்பொழுதேற்றுவீர் புண்ணியரே.

ஏழையிலுமேழை என்கையிலோர்காசும்
இல்லையே நானென்னசெய்வேன்
தோழமைபாராட்டி தூறிபேசாதெந்தன்
சோகந்தணித்திடில் உய்வேன்.

மனைவியின்வார்த்தையால் மக்களுக்காயெங்கள்
வறுமையைத்தீர்த்திடப் போறேன்
தினையளவேனுஞ்சந் தேகமேகொள்ளாமல்
சேர்ப்பீர்துவாரகை நேரே.

கட்டகந்தைமற்றும் கஞ்சிதண்ணீரற்று
கஷ்டமடைந்திங்கு வந்தேன்
நிஷ்டைகலைந்தது நேமங்குலைந்தது
நீர்தயவெய்குவீர் நொந்தேன்.

ஓடக்காரர் வசனம்.

உம்மிட இருப்பிடம் ஏது ? மனைவிமக்களுண்டா எதற்காக புறப்பட்டீர் ? சொல்லும்பார்ப்போம்.

குசேலர் கண்ணி ஷை.

மதுராபுரிவாசம் மனையவள்சுசீலை
மக்கண்மூவொன் பதறிவீர்
பிதுரார்ச்சிதமில்லை பேணவன்னோர்களை
பேயாய்ப்பறக்கின்றேன்பாரீர்.
கண்ணபிரானுடன் கலையொருபள்ளியில்
கற்றேன்யாவுந்தெரிந்திட்டேன்
எண்ணியதையாவ தீய்ந்தருள்செய்வாரென்
றேகமனதாய்ப் புறப்பட்டேன்.

குசேலர் வசனம்.

நானிருப்பது மதுராபுரிக்குச்சமீபம் அவந்திநாடு என்மனைவியின்பெயர் சுசீலை எனக்கு 27-மக்களுண்டு நாங்கள் நித்தியதரித்திரிகள். ஆதியில் ஸ்ரீகண்ணபிரானுடன் கல்விகற்றவன் அவரிடமணுகியாவது வறுமையைத்தீர்த்துக் கொள்ளலாமெனப்போகின்றேன். உங்கள் தருமமும் கொஞ்ச மிருக்கட்டும். தயவு செய்து ஏற்றிக்கொள்வீர்.

ஓடத்தலைவன் வசனம்

அடாதம்பி வாஸ்தவத்தில் இவர் அடக்க வொழுக்கங்களை நோக்குங்கள் சுத்த ஏழையாய்த்தானிருக்கவேண்டும் பார்க்கபரிதாபமாகின்றது. மேலும் சாக்ஷாத்கண்ணபிரானுடன் ஒரே பள்ளியில் படித்தவனென்கிறார் இதற்கென்னயோசனை.

2-வது ஓடக்காரன் வசனம்.

ஆம் அண்ணா எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. மேலும் பெருத்த குடும்பி அதுஇருக்கட்டும். மதுரைக்குச்சமீபமிருந்துவரப்பட்டவர், கையில் காசளவுமில்லாமல் புறப்படுவாரா? வயிற்றுக்கென்னசெய்திருப்பார். அவர்சொல்வதும் நீசொல்வதும் நல்லவேடிக்கைதான். ஆகிலும் அவர்போர்த்துக்கொண்டிருக்கும் கந்தையில் ஏதோ முடிந்துவைத்திருக்கின்றார். அதை நீ அறியவில்லைபோலும் அஃதென்ன கேட்டறியலாம் வா.

ஓடத்தலைவன் விருத்தம்.

தரித்திரம் குடியாய்க்கொண்டு சந்ததமனுபவிக்கும்
சரித்திரம்கேட்டபிக்க சஞ்சலமானேமையா

விரித்துரை செய்வதென்ன வீந்தையாயுங் கக்கத்தில்
தரித்திடு மிம்முடிச்சை தயவுடன் தருவீரையா

வசனம்.

ஐயா:—தரித்திரங் குடியாய்க்கொண்டு சந்தத மனுபவிக்கும் உங்கள் சரித்திரங்கேட்க மனம் சஞ்சலக்கடலில் ஆழ்கின்றது. விஸ்தாரமாய் வார்த்தையாடுவதென்ன உம்மிட கக்கத்தில் ஏதோ முடிந்து வைத்திருக்கின்றீரே அதையாவது அளித்துவிடும்.

குசேலர் விருத்தம்.

கண்ணியமாகவெந்தன் கக்கத்திலுண்முடிச்சில்
அண்ணலாங்கண்ணற்கிய அவல்கொண்டுபோறேனப்பா
உண்ணநீர்க்கூடாதிதை ஒருபொருளாயெண்ணாது
நண்ணிடத்துவாரகையை நன்மனம்வைத்திடீரே.

வசனம்.

இந்த முடிச்சையா கேட்கின்றீர். ஸ்ரீ கண்ணபிரானுக்கு நதராக அளிக்க கிஞ்சிற்று அவல்கொண்டு போகின்றேன். நீங்கள் உண்ணத்தகாது. ஆசை வைக்கவேண்டாம் மனங்குளிர்ந்து. என்னை யேற்றிக்கொள்ளுங்க ளப்பா.

ஓடாக்காரன் வசனம்.

ஆ! ஆ!! பகவானு? இந்த அவலைத் தின்பார். நல்ல வேடிக்கை. சொல்வாருக்கு மதியில்லாவிடினும் கேழ்பாருக்கு மதியில்லையா? சரி சரி. பாபபுண்ணியம் உன்னோடே. அடா தம்பி இவருக்கென்று நாம் ஓடம்விடப் போகிறதில்லை. நம்ம குழந்தை குட்டிகளுக்குப் புண்ணியமாய்ப் போகட்டும். ஏற்றிக்கொள்ளலாம்.

2-வது ஓடக்காரன் வசனம்.

சரி; உன்னிஷ்டப்படி செய்யப்பா.

ஓடத்தலைவன் வசனம்.

ஐயா:—பெரியவரே இத்தோணியில் ஏறிக்கொள்ளுவீர்.

குசேலர் வசனம்.

அப்பா உங்களுக்கனேக ஆசீர்வாதம் ஏறிக்கொள்ளுகின்றேன்.

ஓடக்காரர்

ஏலப்பாட்டு.

இ-ம்-புன்னாகவராளி-ஏகதாளம்

ஏலேலோ ஏலலிலோ கோவிந்த
ஏலேலோ ஏலலிலோ கண்ணன்பதம். (ஏ)

இந்தகப்பலார்ப்பரித்து நம்மவக
தீஸ்வரனையே துதித்து
சந்தமுடன்பாய்விரித்து தண்ணீரின்மேல்
சம்பிரமமாய்கோஷித்து.

(முடுக்கு.)

சட்டமுடனெட்டு பலகைகள்கூட்டி
சரிசரியாக சதுரங்கம்பூட்டி
முட்டமுட்டப்பல ஸ்தம்பங்களாட்டி
முகடுக்கலங்கார வானங்கள்தீட்டி
பட்டம்பகலாக கண்ணாடிமாட்டி
பக்கங்களிற்சில பலகணிமூட்டி
ஒட்டாரமாகவே சாதுக்கள்கோட்டி
உண்மையாய்ப்பிரசங்கம் செய்யகைநீட்டி. (ஏ)

பாரளந்தமாயவனே சார்க்கவாரும்
பார்க்கவிபிநாயகனே
தாரணியுந்தாயகனே பாகவத
தாசர்களுக்கருள்பவனே

(முடுக்கு.)

சங்கையொழித்து சகலரும்பார்க்க
சாதுர்யமாகக் கொடிகளுந்தூக்க
மங்களவல்லி மகிழ்ந்தினிகார்க்க
மகராஜரெல்லோருங் கூடிசீர்தூக்க
கங்காபவானி கலங்கியேதோற்க
கரியமாலெங்கள் கடுந்துயர்தீர்க்க
இங்கிதவான்கள் இதுநல்லமார்க்க
மென்றகந்தன்னிலா னந்தமதேற்க, (ஏ)

பாண்டவர்க்காய்ப் பிறந்தவனே பூமி
பாரந்துலக்க வந்தவனே
ஆண்டவனாய் வாய்ந்தவனே பக்தர்க்
கருள்மழையாய்ப் பெய்ந்தவனே.

(முடுக்கு.)

அன்பர்களா மிக்கரையோரநாட
ஆச்சர்யமென்ன அறைந்திசைபாட
அன்னநடைப் பெண்களாசைகொண்டாட
அஞ்சிபயந்து நடுங்கியேயோட
தொன்மையிலேயிற்று யின்றுனைக்கூட
துவாரகையெங்கே யெங்கேயென்றுதேட
தென்றல்குளிர்ந்ததி சீராகநீட
ஜெயம்ஜெயமென்று ஜனங்கள்கைபோட. (ஏ)

பத்தவதாரங்கொண்டவா கோவினிட
பால்தயிர்வெண் ணெய்யுண்டவா
அத்திநடுத் துயின்றவா பிரிய
ஆயரிட ரைவென்றவா.

(முடுக்கு)

அந்தணரான குசேலருமிக்க
ஆவலாய்ஸ்ரீகிருஷ்ண பூபன்களிக்க
அந்தரர் துந்துமி நாதமுழக்க
அச்சமில்லாதவல் தன்னையளிக்க
சிந்தைபூரித்தவர் சீருய்புசிக்க
செந்தணலொத்த வறுமையொழிக்க
வந்ததேதோணி யெல்லீருமதிக்க
வளருந்துவாரகைக் கரையிலிறக்க. (ஏ)

வசனம்.

ஐயா:—தாசரே கப்பல் துவாரகைக்கரையில் நின்றுவிட்டது இதோ எல்லோருமிறங்குகின்றார்கள். நீரும் இறங்குவீர்.

குசேலர் வசனம்.

நல்லதப்பா நீங்கள் எல்லோருந்தீர்க்காயுஷ்மானா யிருக்க வேண்டும். போய்வரவுத்தரவா.

(ஓ-வ-ம்) போய்வருவீர்.

"எனைபூசைசெய் அர்ச்சுனு" என்கிற வர்ணமெட்டு.

குசேலர்-தரு கமாஸ்-ஆதி.

இதுதானோதுவாரகாபுரி எனக்குரைப்பீர்
இதுதானோ துவாரகாபுரி
பதுமாசனிசமேதன் பாதமலரைக்காண
மதுராபுரியைவிட்டு வந்தேன்கிருபைபூண. (இ)

அரண்மனைகள்விசித்திரம் சோமாஜிகளுக்
கன்னமளிக்குஞ்சத்திரம்
திரள்திரளாய்ப்புதுக்கி செம்பொன்னினிலிழைத்த
தரளமணிகள்தொங்க தாஷ்டீகமாயமைத்த: (இ)

துரைராஜசேகரர்க்கூட்டம் இரதகஜ
துரகபதாதிகள்கோஷ்டம்
தரையிலிடமில்லாமல் சமரசமாய்வருகும்
கரையிலாதவானந்த கண்ணீரதைப்பெருகும். (இ)

அந்தணர்யாகசாலை இரம்மியமாக
அதனைச்சுற்றிலும் சோலை
விந்தையாய்நிருமாணித்து வேடிக்கையாய்த்துலங்கும்
இந்தநகரைப்போல எங்குந்தோன்றுதிலங்கும் (இ)

வணிகரின்தெருவிதுவோ ஸ்ரீகண்ணபிரான்
வாழுமாளிகை எதுவோ?
கணிகையர்வீதிவந்து கலங்கி நிற்கலானேன்
பணிசெய்பவரையொப்ப பதுங்கியொதுங்கலானேன். (இ)

தாளமேளமிருதங்க வோசைகளிங்கு
தாம்தாமென்னவேமுழங்க
காளம்பூரிதம்பட்டம் கணகணவென்றொலிக்க
கோளகமானகொடி கொக்கரித்துஜொலிக்க. (இ)

குசேலர் வசனம்.

கம்சன், சாளுவன், சிசுபாலன், காலயவண்ணன் முதலிய வீராதிவீரரைசம்மரித் தாண்டுகொண்ட ஜனார்த்தனனது திவ்யசரிதையைப்பண்ணுடன் பாடிகளிக்கும் இத்துவாரகையின் ஆனந்தத்தை எவ்வாறு உரைப்பிடுவேன் ஆதிசேடனும் முடியாதென்றால்

அடியனால் முடியுமோ! என்ன சிறப்பு என்னவேடிக்கை ஆ! ஆ!! ஆ!!! இதோ தாசன் உன் அரண்மனையை நாடி ஆயத்தனாய் வருகின்றேன்.

பொது விருத்தம்.

இந்தவிதமாய் பாகவத குசேலர்
இனியமொழி மீசாமருக்குரைத்து
சுந்தரநாவராய் வீதிலேறிபார்த்து
துவாரகைக்கரையதனை யணுகியந்த
நந்தநந்தனனையெதிர் நோக்கியேற்றி
நாடியேவருகவது காலையாங்கே
மந்தஹாசத்துடனே கிருஷ்ணபூபன்
வருகின்றார்லீலையது புரிகின்றாரே.

வசனம்.

இவ்விதம் ஸ்ரீகண்ணபிரான் வருகின்றபடி.

ஸ்ரீ கிருஷ்ண ஸ்வாமி லீலை.

தோடி ரூபகம்.

கண்ணன்மணி வண்ணன்வந்தனன் திருக்
காக்ஷியளித்திடக் கண்டோர் துதித்திடக். (க)

மண்ணுதியரோற்றிடுந்து
வார்கைசெங்கோனீதி
வழுவாத நழுவாத. (க)

காவலனிந்திரன் பெய்வித்த
கன்மழையை நீக்கவேண்டி
கோவர்த்தன கிரியையொரு
குடையாய்க்கொண்டாயர்களின்
குறைதவிர்த்த நிறைதுளித்த. (க)

மாக்ஷியுடனே காளிங்க
மடுவிலுற மாயிறங்கி
தாக்ஷியின்றி நாகமீதில்
தத்தித்தீம் தீமெனவே
தாண்டவஞ்செய் யாண்டகத்துய். (க)

சேலையின்றி நிருவாணமாய்
சேர்ந்து ஜலக்ரீடைசெய்யும்
பாலிகைகளோல மிடுக
பாதபத்தின் மீதாடையை
பார்த்தொளித்த கார்த்தளித்த. (க)

வசனம்.

அடிசகி நான் ! இன்றையதினம் சத்தியபாமையின் கிரகத்திற்குச்சென்றுவரல்வேண்டும் இதுசங்கதி நீ ருக்மணியிடம் தெரிவிக்கப்போகாது. ஜாக்கிரதை யான் போய்வரலாகுமா ?

சகி வசனம்.

ஆக்ஷேபமென்ன போய்வருவீர்.

கிருஷ்ணர் வசனம்.

சத்தியபாமா? எ! சத்தியபாமா? ஓ! சத்தியபாமா கபாடந் திறப்பாயடி, இதோயான் வந்திருக்கின்றேன்.

சத்தியபாமை வசனம்.

சகி தெருவாயிலில் நின்று அழைப்பவர்யாரடி, கண்ணபிரான் போற்காண்கின்றது. எதிர் சென்று அழைத்து வருவோமா ? அழைத்துவருவோம். நீயுமென்னுடன் வருவாய்.

சத்தியபாமை ஜாவளி.

“ஓ! வீணவதிவாணியென்முன் ஒடியேவாாய்” என்கிற வர்ணம்.

வாரும்வந்துட்காருமணி வண்ணவந்தனம்
வண்ணவந்தனம் திருக்கண்ணதந்தனம். (வா)

காருங்கட்டிச்சேரு முத்தந்தாருந்துரையே
கோரிவழிபார்த்திருந்தேன் பூரிப்படைந்தேன்
நேரிலுனைக்கண்டானந்த வாரிதியிலமிழ்ந்தேன்
நிச்சயநிச்சயமதி உச்சிதமுளவென்பதி. (வ)

கிருஷ்ணர் வசனம்.

சத்தியபாமை இன்றையதினம் இங்ஙனுக பிர்ம பிரயத்தனமாய் விட்டதடி.

(சத்தியபாமை வசனம்) அதேனப்படி.

கிருஷ்ணர் வசனம்.

உன்வார்த்தையென்றால் உருக்மணிக்காவது. உருக்மணிவார்த்தையென்றால் உனக்காகாது உங்களிருவருக்குப்பயந்தல்லவோ இடையில் அவஸ்தைப்படுகிறேன்.

சத்தியபாமை வசனம்.

ஆ! என்னவார்த்தை சொல்கின்றீர் என்னைவிட வுருக்மணி உயர்ந்தவளா? அவளிடத்தில் உமக்கென்னபயம் இன்று முதல் நீர் என்னைவிட்டுப் பிரியக்கூடாது. அன்னவளைக்கண்ணெடுத்துப் பார்க்கவும்போகாது.

கிருஷ்ணர் வசனம்.

சீ! சீ! துஷ்டி அவ்விதம் உரைப்பிடுவது அழகல்ல உன்னைப் போல் அவளும் பெண்பால் மேலும் பட்டத்திற்குரியவள்.

சத்தியபாமை வசனம.

சரிசரி நானென்னவைப்பாட்டியா? அவளிடமேசெல்லும், நீர்பெரும்பான்மை அவ்விடத்தில் வாசம். சிறுபான்மை இவ்விடத்தில்வாசம். இந்த அழகுக்கு உம்முடன் வார்த்தையென்ன? உமக்குப்பிரியமெல்லாம் அங்கே மேல் வார்த்தையாடுவது இங்கே எழுந்து நடவும்.

கிருஷ்ணர் வசனம்,

அடியென்னருங் காதலி கோபங்கொள்ளாதே யான் வேடிக்கையார்த்தமாய்ச்சொன்னேன். உன்னைவிட அவளென்ன சிறந்தவளா ஆ! ஆ!!

கிருஷ்ணர் ஜாவளி.

"மையல்மிகக்கொண்டேனே என்கிற வர்னமெட்டு.

பங்கஜநேர்வதனி சத்யபாமையெனும் சுகுணி. (ப)

அங்கம்வியர்த்துப் பொசுங்கி
இங்குதனியாய்க் கலங்கி
வங்கப்பட்டாயோ சங்கைதொட்டாயோ மங்கிவிட்டாயோ. (ப)

வஞ்சிநீயெனைப் பிரிந்து
பஞ்சணையிலே யிருந்து
நெஞ்சுடைந்தாயோ அஞ்சிநொந்தாயோ கொஞ்சிவந்தாயோ. (ப)

நித்தனு னில்லாமையாலே
சித்தஜன் கணைகளாலே
நத்திவைதாயோ சித்தமுப்தாயோ பத்திசெய்தாயோ. (ப)

சேரவரவில்லை யென்று
தூரதூரமாகநின்று
கூரங்கொள்ளாதே வேறுவிள்ளாதே சீறியெள்ளாதே. (ப)

கிருஷ்ணர் வசனம்

சற்குணி யான் உன்னுடன் சந்தோஷகரமாய்ப்புகன்ற வார்த்தைகளை விபரீதமாய்க்கொண்டனையே நித்தமும் வரவில்லையென சித்தநொந்து, சித்தஜன்கணைகள் தைத்ததன் மேல், எனை நத்தி வைதனையோ ஆ! ஆ!! பிராணேஸ்வரி.

கிருஷ்ணர் ஜாவளி.

"சுத்தாத் மஜோதிநீதியோ" வர்ணமெட்டு.

இத்தனை கோலமேனடி சித்தநீதோடி (இ)
எத்திசையு மதிக்கும். உத்தமியே யுனக்கு (இ)
எந்தன் மீதென்னதப்படி சிந்திக்காதேசெப்படி
உந்தனை நம்பியானே. வந்தேனிங் கேதோமானே (இ)
நெட்டிப்பேசலாம்வாடி கிட்டியோர் முத்தந்தாடி
எட்டியே நின்றிடாதே. அட்டி யொன்றும் சொல்லாதே (இ)
மோகமதிகரிக்குதே தாகமெடுக்குதே
தேகமெலாஞ் சோருதே. போகமதைக்கோருதே (இ)

கிருஷ்ணர் வசனம்,

அடியிளங்குயிலே கோபத்தைத்தணிப்பாய் எதோ வுன்முகத்தை என்புறமாகத் திருப்பு என் ரூபத்தை கண்ணாரநோக்கு.

சத்தியபாமை வசனம்

எனையா வீண்வார்த்தை உமதுபட்டத்தரசி யான உருக்மணியிடமேசெல்லும் யான் சேர்ந்துவர்க்கவள்தான் என்னுடன் வார்த்தையாடுவது உமக்குத்தகாது.

கிருஷ்ணர் வசனம்.

அடிசரஸிஜவதனி அப்படி சொல்லாதே அவளென்ன அல்பம் நீயேயெனக்குகதி நாமேனடனந்தப்பதி இன்றுமுதல் அங்கு நாடுவதில்லை.

சத்தியபாமை வசனம்.

அவ்விதமேனை போட்டுத் தருகின்றீரா?

கிருஷ்ணர் வசனம்.

ஆக்ஷேபமென்ன அவ்வாறே செய்கின்றேன் எதோ என் மனங் களிக்கவோர்பதம் பாடுவாய்.

சத்தியபாமை ஜாவளி.

"ஜெயமாக இங்கிலீஷ்" என்கிற வர்ணம்.

கண்ணபிரானே யிப்போது கட்டிச்சேருவாய்
மண்ணிலுன்னை நம்பினேனோர் மார்க்கமோதுவாய் (க)
மாது மோகலாகிரியால் வாடிதேடினேன்
பாதுகார்த்திடுவதுந்தன் பாரம் நாடினேன் (க)
சித்தஜன்கணைகளென்மேல் சீறிபெய்கிறான்
பித்தந்தலைக் கேறிடவே பீதிசெய்கிறான் (க)
சித்தமதுதத்தளிக்க தென்றல்வீசுதே
கத்தனேயுன் ரூபங்காண கண்கள்கூசுதே (க)

கிருஷ்ணர் வசனம்.

ஆ! ஆ!! என்னகளிப்பு என்ன ஆனந்தம் நன்னடையில் அனுகூலையையும் மென்னடையில் அன்னத்தையும் துன்னடையில் மின்னலையும் என்னடையில் சொல்தவறாமையும் தொன்னடையில் வழுவாமையுமுடைய எனதுகாதலியானதாட்குழலே.

ஜாவளி சரசா மோகமானேன் என்கிறவர்ணம்.

சரசம்செய்திடவா சற்குணமுடன் (ச)
சரவிஜவதனீ. சந்த்ரப்ரகாசினி (ச)
காமன் தொடுக்குமைங் கணைகளைவென்றிட
கனியிதழ் புசித்து மாதே கனஸ்தனம் மடித்து
கரங்கள்பின்னி. கண்ணியமுடன் (ச)
பஞ்சணைமீதினில் பக்ஷமாய்சாய்ந்திட
பரிந்தினியேகுவோம் மானேபரவசமாகுவோம்
பாக்யவதி. ப்கரமுடன் (ச)
கூறும் சாஸ்திர குறிபிசகாமல்
கூறிகூடிபுரிந்து தேனே கோபமெலாந்தணிந்து
கூடிடுவோம். கொம்பனையே நீ (ச)

கிருஷ்ணர் வசனம்

சத்தியபாமா ஓர்சங்கதி அதுவோமிக்க அவசரம் யாதெனில் வடமதுரையில் நான் சிறுவயதா யிருக்கும்போது யென்னுடன் கலைபயின்ற குசேலமாமுனிவரென்னும் ஓர்பரமபாகவதசிகாமணி நம்மை நாடி இன்றுவந்துகொண்டிருக்கின்றார் அதுதவிர மகா மகுட முடி மன்னவர்களும் காத்துக்கொண்டிருக்கின்றார்கள் அரசாக்ஷி மண்டபத்திற்கேகவேண்டும் காலமறிந்துதெரிவிக்கின்றேன் நீயும் அப்போது வருவை. செல்லட்டுமா ?

சத்தியபாமை வசனம்.

எனக்கு இவ்விதமாகப் போக்குகாட்டி என் சக்காளத்தியான உருக்மணியின் வீட்டிற்கேகின்றீரோ?

கிருஷ்ணர் வசனம்.

இதைப்பற்றி உனக்குமுன்னமே கையிட்டுக்கொடுத்திருக்கின்றேன்? மறுபடி அவ்விதமே செய்வேனா?

(சத்தியபாமை வசனம்.)

பத்ரம்:—சொல்லின்பேரில் கியாபக மிருக்கவேண்டும் போய்வருவீர். அநேகவந்தனம்.

பொது வசனம்.

இவ்விதம் சாக்ஷாத் கிருஷ்ணமூர்த்தியான கபட நாடக சூத்திரவதாரி சத்தியபாமைக்கு போக்குக்காட்டி உருக்மணியின் இரகத்தை நாடிவந்து கொண்டிருக்க அதுசமயம் அந்தமாது ஸ்ரீ தன்னருங்காதலனைக் காணாமல் சோகமுறுகின்றபடி.

ஜாவளி சாமியைக்காணேன் என்கிறவர்ணம்.

கண்ணனைக் காணேன் மணிவண்ணனைக்காணேன் (க)

எண்ணுதெல்லா மெண்ணுதே என்னைப்தரைநண்ணுதே
புண்ணாகி நெஞ்சம் குண்ணுதே சகா (க)

திங்கள்நது காயுதே செந்தணலாய் வீசுதே
அங்கஜன்கணைகள் பாயுதே சகா (க)

ஐம்புலனும் சோருதே ஆசைமிகமீறுதே
பம்பரம்போல்சீறுதே சகா (க)

நத்திகண்கள் தேடுதே நங்கையுடல்வாடுதே
முத்துக்ருஷ்ணன் மொழியைநாடுதே சகா (க)

வசனம்.

ஆ! எனதாசைப்ப்ராணேசர் என்னைத்தனியாய்விட்டு.

ஜாவளி இன்னமுங்காணேனே'' என்கிற வர்ணமெட்டு.

எங்குதான் சென்றனரோ கோபாலன்
என்ன செய்குவேனென் சகி (எ)
மங்கைராதாவிட மிங்கிதமாகவே
தங்கியே நின்றனரோ சிறந்தனரோ அறிகிலேன் (எ)
சோபிதமாகவே கோபிகாஸ்திரீகளின்
தாபம்தனிக்கின்றாரோ சுகிக்கிறாரோ அறிகிலேன் (எ)
காமமீறி சத்ய பாமா விடந்தனை
நேமமாயண்டினரோ துணிந்தனரோ அறிகிலேன் (எ)
இத்தரைமீதினில் பத்தரைகார்த்திட
சித்தமகிழ்ந்தனரோ விரைந்தனரோ அறிகிலேன் (எ)
ஆசைநாயகனே மோசஞ்செய்தேயெவள்
நேசித்திருங்கிறாளோ களிக்கிறாளோ அறிகிலேன் (எ)
புருஷசிங்கமுத்து க்ருஷ்ணகம்பீரனின்
திருஷ்டிஎன்மீதில்லையோ இதுதொல்லையோ அறிகிலேன்(எ)

உருக்மணி வசனம்.

அடி பிராணசகிஃ—என்னையகர் எங்கு சென்றிருப்பார் இராதையின்வீட்டிற் கேகினரோ? அல்லது பக்தஜனங்களுக்கு அருள் புரியவேண்டி சித்தமகிழ்ந்து விரைந்தோடினரோ? இல்லாவிடின் என்சக்களத்தி யிருக்கின்றாளே? அந்த சத்தியபாமை துஷ்டி, அதனப்ரசங்கி, அன்னவள் மாயவலைக்குள் அகப்பட்டு பின்னப் பட்டனரோ? ஆ! யாதுமறிகிலேனே ஐயோ என்னை அரைக்ஷண மும் பிரியாதவராயிற்றே அந்தோ!

"கண்ணே உந்தன்மீதில் யான் காதல் கொண்டேன்"

ஜாவளி என்கிற வர்ணமெட்டு.

தேடி யழைத்தோடிவா சேடியே நீ (தேடி)
வாடினுளென்று வகையாய்ப்புகன்று
வஞ்சியே தாமதிக்காதின்று பதியை (தேடி)

கன்னல்வில்பாவி கணைகளைத்தூவி
காமத்தைமூட்டுரானேதாவி பதியை (தேடி)

கண்ணொளிமாறி காதலுமீறி
கஸ்தியைநாடினளேகோறி பதியை (தேடி)

தென்றலிக்காலே சீறுவதாலே
திகம்பரமாயினதினாலே பதியை (தேடி)

வசனம்

அடிபாங்கி மோகலாகிரியானது தேகத்தை வாட்டுகின்றதே அவர் எங்கிருந்தாலும் சரி சென்று அறிந்து அழைத்தோடிவா.

சகி வசனம்.

அவ்வாறே அபீஷ்டப்படி செய்கின்றேனம்மா.

"சுத்தபிர்ம்மபராத்பரராம்" என்கிற வர்ணம்.

நாரதர் சுப்ரசன்னம்.

பிரம்மானந்த தேஜோன்மயமே
பிர்ம்மானந்த சுகோதயமே
பிர்ம்மானந்த பராத்பரமே
பிர்ம்மானந்த தயாபரமே
சீரார்தெய்வத் திருவருளே
ஜெகபதிமகிதி யாம்பொருளே
ஆராவமுத பரஞ்சுடரே
அகமுகானந்த சுகக்கடலே
பேரானந்தப் பெருவெளியே
பேரறிவேசுற் பரவொளியே
தாராவருள்தந் தருள்வடிவே
சாற்றும்சதுர்மறை யின்முடிவே
மூத்தேபவளப் பொற்குவையே
மோனமணிக்கு நற்சுவையே
நித்தியானந்த நிரஞ்சனமே
நிர்மலசுத்த நிராமயமே
கண்ணேவிண்ணே கற்பகமே
கருதாதிவ்விய நற்சுகமே

தண்ணருளார்ப்பரி பூரணமே
சாஸ்வதபுஷ்கள சற்குணமே
அத்துவிதானந்த தற்பரமே
அண்டபிண்டநிறை சிற்பரமே
தத்துவஞான ஜகத்குருவே
சாக்ஷாத்நாரத னென்திருவே

உருக்மணி வசனம்.

சுவாமி வந்தனம் வாருங்கள் இவ்வாசனத்தின்மீது அமருங்கள் தாங்கள் இவடம் பிராப்தமாயின வரலாறு அறியமிக்க அபிலாஷையாயினள் தெரிவிப்பீர்தேவா.

நாரதர் வசனம்.

அம்மணி யான் வந்தவரலாறு இருக்கட்டும் நீயேதோ உன்னகத்தில் துயரங்கொண்டிருப்பதாக முகத்தினிடமாகபுலப்படுகிறது அதன் விசேஷம் தெரிவிப்பாய்.

உருக்மணி வசனம்.

தேவா எனது நாயகர் இங்கென்னை யொண்டியாயலையவிட்டு எங்குசென்றனரோ? அறிகிலேன் அது விசாரமே யொழிய வேறில்லை நாதா.

நாரதர் வசனம்.

கிருஷ்ணனைப்பற்றியா? விசாரப்படுகின்றனை சரிசரி:—
"ஆ! ஆ! ஆ இதுவென்ன பெரும் அதிசயமே" என்கிற வர்ணம்.

நாரதர் ஜாவளி.

ஆ! ஆ!! ஆ!! அவன்செய்வதெலாமன்னீதமே. (ஆ)

தேகாபிமானமும் சீர்தருஞ்ஞானமும்
சிறிதுமின்றி திரிகிறான். (ஆ)

பாக்யவதிசத்ய பாமைக்காதிபத்யம்
பரிவாய்பாலித்திருக்கிறான், (ஆ)

அவ்விடம்பாடலும் அகமகிழ்ந்தாடலும்
அய்யோ நாரனென்னசொல்லுவேன். (ஆ)

சையோகலீலைகள் சாதுர்யவார்த்தைகள்
சகலமுமவள்சொந்தமே. (ஆ)

உனக்கொன்றுமில்லையே ஒவிது தொல்லையே
உன்னியோசிப்பாயிதனை. (ஆ)

பாக்கியஹீனிநீ பண்ணுவதேதினி
பாழுங்கிணற்றில் விழலாம். (ஆ)

நாரதர் வசனம்.

ஏ! பாக்கியஹீனி உனக்கேனவன் சகவாசம் அவனுக்குன்னிடமில்லை விஸ்வாசம் சத்யபாமையின் வீட்டில் சதாவுல்லாசம் தப்பியிங்குவருவதென்றால்மிகப்பிரையாசம் அன்னவன் புரிவதெல்லாம் வெகுமோசம் நீசிந்தனைசெய்வதில் வந்திடும்ஆயாசம் சீ சீ!! இதென்ன பிழைப்பு ஜெகத்திலிராது மதிப்பு அவனுக்கோ மெத்த கொழுப்பு அதனை மெல்லமெல்லவடக்கு யான் சென்றுவரட்டுமா?

உருக்மணி வசனம்,

இப்போது அவர் எங்கிருக்கின்றார் இயம்பவேண்டும் சுவாமி.

நாரதர் வசனம்.

அதனையேன் கேட்கின்றாய் சத்தியபாமையின்வீட்டில் சங்கீத சாஹித்ய நவரச அலங்கார சையோக லீலைகள்புரிந்து சந்தோஷ சாகரத்தில் அமிழ்ந்திருக்கின்றான் இதனையான் வந்தறிவித்ததாக அன்னவனிடம் சொல்லாதே யான் போய்வருகின்றேன்.

ருக்மணி வசனம்.

அப்படியா போய்வருவீர் வந்தனம்.

சகி வசனம்.

அம்மா உமது நாயகர் சத்தியபாமையின் வீட்டிலிருந்து தாராளமாய் தங்களை நாடி வருகின்றார்.

உருக்மணி விருத்தம்.

அப்படியாவோ நல்லதாகட்டுக் தாமதிக்கா
திப்படியே நீ சீக்ரம் ஏகிநற்கதவடைத்து
செப்படிதிரமாக திறக்கமாட்டேனென்றப்பால்
எப்படிவருகின்றாரோ இதனைகாண்போமிப்போதே.

வசனம்.

அடிசேடி:—அப்படியா நல்லதாகட்டும் நீவிரைவிற் சென்று தெருவாயிலின் கதவைத்தாளிட்டு திரமாகத்திரக்க மாட்டே னென்றுசொல் அவர் என்னிடம்வருந்திறமையை அறிகின்றேன்.

சகி-வசனம்.

அவ்விதமே செய்கின்றேனம்மா.

கிருஷ்ணர்-வசனம்.

உருக்மணி—ஏ! ருக்மணி! ஓ! ருக்மணி கதவைத்திறவடி மிக்க ஆயாசமாகின்றது.

சகி-வசனம்.

தங்கள் வருகையைக்கண்ட பிராட்டியார் கதவைத்தாளிட்டு திறக்கவேண்டாமென ஆக்யாபனை செய்திருக்கின்றார்கள் தெரிவித்துக்கொண்டேன் தேவா.

ஸ்ரீ கிருஷ்ணர் வசனம்.

இதென்ன விபரீதம்—அங்குசத்தியபாமையினிடமுறுக்கைத் திருப்பி வார்த்தையாடிவர இன்னேரமாயிற்று. இங்குவந்தால் இக்கதியாயிருக்கின்றது. இதுசங்கதி சத்தியபாமையறிந்தால் பங்கத்திற்கிடமாகும்'என்ன' நம்முடைய ஜனனவிருத்தாந்தம் இவ்விதமாய் முடிந்தது, நம் சங்கதியை யாராயினும் தெரிவித்து விட்டனரோ? சரி, சரி வருவதெல்லாம் வரட்டும், இனி யோசிப்பதிற் பயனென்ன கடகடவென்றுரைத்தால் காரியம் சித்தியாகாது, நயமாகவே வார்த்தையாடி கதவைத்திறக்கும்படிக் கேட்டுக்கொள்ளுவோம்.

ஸ்ரீ கிருஷ்ணர் ஜாவளி.

கதவுதிறக்கும்பாட்டு.

கண்ணபிரானிங்குவந்து காத்திருப்பதாகவே நீ
திண்ணமாயம்மாதிடத்தினில் செப்பிக்கதவைத்திறவடி

வசனம்.

சகி;—கண்ணபிரான் வந்திருப்பதாக உருக்மணியிடம் தெரிவிப்பாயடி.

சகிவசனம்

அம்மா—கண்ணன் தெருவாயில் வந்திருக்கின்றனர்.

உருக்மணி ஜாவளி ஷ்டி

கண்ணனென்றால் நமக்கென்ன கண்டிப்பாயன்னோரையேதன்
அண்ணனைரதேடியேகவே அறைகுவாயெந்தன்சகியே

வசனம்.

அடி கண்ணனுக்கு இங்கென்னவேலை அவர்
அண்ணனிடம் ஏகச்சொல்

ஸ்ரீ கிருஷ்ணர் ஜாவளி.

பாலகிருஷ்ணன்வந்தானென்று பக்குவமாகவுரைத்து
காலதாமதம் செய்யாமலே கதவைசற்றேதிறவடி

வசனம்.

அடிசேடி பாலகிருஷ்ணன்வந்திருப்பதாகச் சொல்

சகி வசனம்.

அம்மா பாலகிருஷ்ணன் வந்திருக்கின்றார்

உருக்மணி ஜாவளி.

பாலகிருஷ்ணன் என்றால்சத்ய பாமையையணுகச்சொல்லி
ஜாலமின்றியோடியின்னொரு தாளையுமிடுவாய் சகியே.

வசனம்.

சகி பாலகிருஷ்ணனென்றால் அவருக்குச்சாலவு மிஷ்டமாகிய
சத்தியபாமையினிடம் போகச்சொல்லி இன்னொருதாளையும்போடு

ஸ்ரீ கிருஷ்ணர் ஜாவளி.

மாயனிங்குவந்தானவ மானமெய்த லாகாதென்று
பாயமாகவேமொழிந்துநீ மையகதவைத்திறவடி

வசனம்.

மாயன் வந்து கோபமுடன் காத்திருப்பதாக உபாயமாக
மொழிந்து சீக்கிரம்திறப்பாயடி.

சகி வசனம்.

அம்மா—மாயன் வந்திருக்கின்றார்.

உருகமணி ஜாவளி.

மாயன்செய்யுபாயமெல்லாம் மாதென்னிடம்செல்லாதென்று
ஞாயமாகவேவழுத்தியே நடக்கச்செய்யடிசகியே

வசனம்.

மாயன் செய்யுமுபாய மெல்லாம் மாதினிடம் சொல்லாதென்று, ஞாயமாகவுரைத்து நடக்கச்சொல்.

ஸ்ரீ கிருஷ்ணர் ஜாவளி.

புராணம் படித்தின்றுவீணைப் போக்குவதாகவிருந்தால்
பிராணத்யாகமாவா ரென்னவே பேசிகதவைத்திறவடி

வசனம்.

அடிசகி—புராணம் படித்துக்கொண்டிருந்தால் பிராணத்தியாகமாவா ரென்றுசொல்.

சகி வசனம்.

அம்மா கதவைத்திறக்காவிடில் பிராணத்தியாகம் செய்து கொள்ளப்போகின்றாராம்.

உருக்மணி ஜாவளி.

வார்த்தையாடாமன்மவுன மாயிருக்கின்றேனடியான்
சாத்தியிருக்குங்கதவையே ஜல்திதிறந்துதொலேபடி

வசனம்.

சகி சாத்தியிருக்கும் கதவைத்திறந்து தொலைத்துவிடு யானென்னமோ அன்னவரிடம் கண்டிப்பாய்ப்பேசுவதில்லை.

சகி வசனம்.

சுவாமி இதோ திறந்துவிட்டேன் அம்மாள் அந்தரங்கத்துக் கேகிவிட்டார்.

கிருஷ்ணர் வசனம்.

அப்படியா யானுமிதோ அவ்விடம் செல்கின்றேன்.

பொது வசனம்

இவ்விதம் உருக்மணியம்மன் கதவைத்திறந்துவிடும்படி ஆக்யாபித்து அந்தரங்கத்துக்கேகிவிட ஸ்ரீ கண்ணபிரான் பிராணேஸ்வரி

யின் பிணக்கைத்தீர்க்க பின்தொடர்ந்தபின்னர் சபைக்குச்சென்று தன்னையழைத்துகொள்வதாய்ச்செப்பிய தனது நாயகர் ஜாமநேரமாகியும் சங்கதியறிவிக்கவில்லை சத்தியபாமை தனதில்லத்தில் சங்கேதமுறுகின்றபடி.

சத்தியபாமை ஜாவளி.

(மைடியர்கம்) என்கிற வர்ணம்.

என்செய்குவேன் இன்னமுங்காணேனே. (எ)

என்னை யொண்டியாக்கி
ஏகினாரென்சாமி. (எ)

தன்னிடங்குசேல தாசர்வாராரென்றே
பன்னிபக்குவமாய்ப் பையசென்றாரின்றே (எ)

ஆளின்மூலமா யழைத்திடுவேனென்றார்
ஏளனம்செய்திட்டார் எந்தனையகன்றார். (எ)

ஈதைமோசமென்றே எண்ணிடாமற்போனேன்
வாதையாகிபின்னால் வாடிடவுமானேன். (எ)

வசனம்.

சகி:—எனதாசை நாயகர் எனக்கேதேதோ போக்குக்காட்டி பக்குவமாய் விடைபெற்றுதெருவாயில் கடந்ததும்:—

சத்தியபாமை ஜாவளி.

(மையல்மீறுதேநான்) என்கிற வர்ணம்.

மறந்தனரோ மங்கையென்னை மதிமயங்குதே. (ம)

கறந்துறைந்திட்டாரோவையோ கஸ்தியாகுதே
காமம்வீணாய்ப்போகுதே கண்சிவந்து கலங்கிநோகுதே. (ம)

என்சகக்களத்திவீட்டிற் சேகிவிட்டாரோ
எவளுக்குட்பட்டாரோ ஏதுமறிகிலேன்கைவிட்டாரோ. (ம)

உன்னைப்பிரிவதில்லை என்கையிட்டுதந்தாரோ
உளமுமுகந்தாரே ஓர்க்கணத்திலேபிரிந்தாரே. (ம)

நாயகன்மீதாசைமீறி நெஞ்சம்வாடுதே
நத்திபதம்பாடுதே நல்வருகையை நாடிதேடுதே. (ம)

சத்தியபாமை வசனம்.

அடிபிராணசகா கண்ணபிரான் இராஜசபைக்கு உண்மையாய் ஏகியிருந்தால் என்னை அழையாமலிருப்பாரா? ஐயோ என்செய்வேன்.

ஆ! இதோ என்னெதிராக நாரதர் பிராப்தமாகின்றார் அவரை யாவதணுகிக்கேட்போம்.

சுவாமி எனதுநாயகர் இங்கணுகி உருக்மணியை சிலாகித்துப் பேசயான்பிணங்க இனி அன்னவள் வீட்டிற்குச்செல்வதில்லை என கையிட்டுத்தந்து சரசவார்த்தைகளாடி இன்று தன்னை நாடிகுசேலதாசர்வருவதாயும் அவர் சுப்ரசன்னத்தைக்காண அடியாளை அழைத்துக்கொள்வதாயும் போக்குக்காட்டி சபைக்குப்போகின்றேனெனப்போய்விட்டார் அன்னவர் சேதியை அறிந்திருந்தால் அறைகுவீரையா.

நாரதர் விருத்தம்.

அன்னவனின்சூதுகளை அறியவுன்னால்
ஆகுமோநீபாக்யஹீனி அம்மா
சொன்னயம்பரவிட போக்கொன்றுகாட்டி
சொந்தமனையாளுந்தன் சக்களத்தி
கன்னல்மொழி ருக்மணியினோடுகொஞ்சி
காதலதுமீறி பஞ்சணையிலேறி
மன்னிடும்விந்தையதை யென்னசொல்வேன்
மர்ம்மமாய்க்கண்டிவனுன் வந்திட்டேனே.

வசனம்.

அம்மாநீசுத்தபாக்கியஹீனி உனக்கேதோ அன்னவன்போக்குக்காட்டி தன் சொந்த ஆசைநாயகியும் உன் சகக்களத்தியுமான உருக்மணியுடன் கொஞ்சிகுலாவி நவரச அலங்கார சங்கீத சாஹித்யம்பெருக சையோக லீலைகள்புரிந்து பஞ்சணையிலுறைந்து மென்மேலும் சிறந்து அவர்கள் இருக்கும் விநோதத்தை யென் சொல்வேன். அந்தோ! உனக்கென்ன ஆதிபத்யமிருக்கின்றதம்மாயானி தனை மர்ம்மமாய்க்கண்டு உன்னிடம் பரிதாபமாய் வந்தேன்.

சத்தியபாமை வசனம்.

ஆ! ஆ!! ஆ!!! இது உண்மைதானா ?

நாரதர் வசனம்.

நானேன்பொய்ப் புகல்கின்றேன் ?

சத்தியபாமை வசனம்.

நான் சிறிதும் நம்பமாட்டேன் நீர்வேண்டுமென்றே இவ்வாறு உரையிடுகின்றீர்.

நாரதர் வசனம்.

அவ்விதமாயின் என்பின்வா யாவும் விசிதமாய்க்காண்பிக்கின்றேன்.

சத்தியபாமை வசனம்.

ஆ! ஆ!! அஃது உண்மையாயின் அன்னவரை விட்டேனா? ஒருகை பார்க்கின்றேன் சகி யான் வருமளவும் அரண்மனையில் பத்திரமாய்க்காத்துக்கொண்டிரு சுவாமி வாரும் செல்லலாம்.

கிருஷ்ணர் வசனம்.

அடிகண்ணே காமரசமே கற்கண்டே கதலிப்பழமே ஆ! ஆ!! அருங்காதலி சோதனைசெய்யாதே உன் வதனம் சோர்ந்திருக்கக் காரணமென்? நம்மைத்தனியாய் விட்டுப்போயினனென என்மீது கோபமோ? உன் முத்தான வாயைத்திறந்து உத்தாரமாக,

ஜாவளி (மார்க்கண்டாவிதோ)

கதவைசாத்தினகாரணமென கண்மணியேநீகூறடி
கண்ணியமுடனெந்தன்வதனமே கண்டாகுலமறநீரடி
காமராஜன் வாளியாலே
காதல்கொண்டேன் சேரடி. (க)

சத்தியபாமாவின்வீட்டினை சார்ந்தேனெனமனஸ்தாபமோ
சங்கதிசொலிபோகவில்லென தண்ணகந்தனிற்கோபமோ
ஜாமநேரமாகக் கூவின
தாலுனக்குச் சோபமோ. (க)

வசனம்.

அடிஎன் மானே தேனே மயிலே குயிலே என் வதனத்தைப் பாரடி, ஓர்வார்த்தைக்கூறடி ஆபாசந்திரடி அலைக்கணமுந்தாமதியாமல்சேரடி ஆ! ஆ!! ஆகாத்தியம்வேண்டாமடி.

உருக்மணி ஜாவளி.

"எங்குசென்றீரின்னேரமாய்" வர்னம்.

அங்குசென்றே யிங்குவந்திர் ஆ! ஆ!! ஆ!!! ஆ!!!! (அ)

மங்கையாளொண்டியாய் மங்கித்துடித்துமே
அங்கங்குலையவைத்தீரே ஆகுமோநீர். (அ)

சொந்தமனையவள் சோர்ந்துதவித்திட
எந்தவிதமாயேகினீர் ஏற்காதையோ. (அ)

ஏதுமினைந்திரோ என்னைகைவிட்டீரோ
போதும்போதும்சகவாசம் போம்போமையா. (அ)

மாயகள்ளியவள் மருந்துபுகட்டினளோ
தீயதுபற்றியெறியுதே தீ-வி-ர-மாய். (அ)

கிருஷ்ணர் ஜாவளி,

ஏனிந்தவாதடிமாதே உனக்
கேற்குமோவெந்தன் கோதே. (ஏ)

மான்விழியைப்பழிக்கும்பான்பதிநுதலாளே
தேன்மொழியாளுனக்குநான் வெகுவாயுரைத்தும். (ஏ)

ஷை உருக்மணி ஜாவளி.

சத்தியபாமையைத்தாவும் சர
சங்கள்செய்திடப்போவும். (ச)

எத்துவார்த்தைகள்சொலி உத்தமரைப்போலிங்கு
நத்திவந்திடிலெந்தன் சித்தமகிழ்ந்திடுமோ. (ச)

ஷை கிருஷ்ணர் ஜாவளி,

நங்கையேயினிசெல்வதில்லை அங்கு
நம்புவாநீஇச்சொல்லை. (ந)

அங்கமதுபதறி பங்கப்படுத்திடாமல்
சங்கையொழித்துமுத்தமி ங்கிதமாய்க்கொடடி. (ந)

ஷை உருக்மணி ஜாவளி.

நம்பமுடியாதசாமி கிட்ட
நாடத்தகாதுகாமி, (ந)
எம்பாலோராகிய கொம்பனையர்நோக்கின்
தெம்பாய்நகைப்பார்கள் வம்புக்கிடந்தேடாதீர். (ந)

கிருஷ்ணர் ஜாவளி.

"மங்கையேநாம் மலர்பரிப்போம்" என்கிற வர்ணமெட்டு.

கொம்பனையே கோபிக்காதே கோபிக்காதே
கங்குல்பகல்முழு துங்கண்மூன்பேயினி
தங்பியிருப்பேனென். (கொ)

அம்புஜவதன் சம்ப்ரமதேவியே
அண்டினேன் அண்டினேன்
அங்கங்குளிர்ந்துநீ சங்கையிலாமலே மங்களமாகசேர். (கொ)

சொன்னயமலிந்த நன்னயநாயகி
தூறிநீ தூறிநீ
சோகங்கொள்ளாமல் சாகசமாகவே போகமளித்திடு. (கொ)

அன்னநடையது மன்னுமென்காதலி
ஆண்டுகொள் ஆண்டுகொள்
அத்துஷ்டியையின்னம் நத்திப்பாரேனிது சத்தியவார்த்தையாம்()

உருக்மணி வசனம்.

ஆ! நாதா இஃதுண்மைதானு:

கிருஷ்ணர் வசனம்.

உண்மைதான்.

உருக்-வசனம்.

அவ்விதமே கையிட்டுத்தாரும்.

கிருஷ்-வசனம்.

இதோ தந்தேன்.

உருக்-வசனம்.

இனிவாரும் பஞ்சணையிலுட்காரும்.

கிருஷ்-வசனம்.

கண்மணி:—ஓர்பதம்பாடி என்மனதைக்களிக்கச்செய்வாய்.

உருக்மணி வசனம்.

அவ்வாறே பாடுகின்றேன்.

உருக்மணி ஜாவளி.

"மதனகுணுளனேமையலானேண்டா" வர்ணம்.

தேவதேவேந்திராவெனைச்சேராயோசாமி. (தே)

பாவிமாரன் வேலையினுல் ஆவிதடுமாறியே
தாவிதாவி நாடிதேடி கூவியழலானேன்மன்ன. (தே)

வந்தனங்கள் தந்தேனிதோ சந்ததங்கண்ணேக்குவீர்
இந்தவேளைவந்துநீர் எந்தனைக்கார்த்திடுவீர்
சொந்தமேல்லவோஎன்தேகம் சிந்தனைசெய்யாதேராஜா. (தே)

திங்களது செந்தணலாய் அங்கமதில்வீசுதே
சங்கையதுமீறுதே ஐங்கணையும்பாயுதே
செங்கைரெண்டும் கல்லாவிம்மி பங்கமாகுதேதுரையே. (தே)

நத்திகண்ணிரண்டும்தேடி பித்தந்தலைக்கேறுதே
வித்தவித்தநாடுதே புத்திதடுமாறுதே
முத்துக்ருஷ்ணனுன் மொழியால்
சித்தமகிழ்ந்தே னரசே. (தே)

நாரதர் வசனம்.

ஏ! சத்தியபாமா பார்த்தனையா? தேறவிசாரித்துக்கொள் யான்போய்வருகிறேன்.

கிருஷ்ணர் வசனம்.

ஆ! ஆ!! எனதாசைக்கிசைந்த ருக்மணிதேவி என்னருகேவா உன்பாடலைக்கேட்டு புளகாங்கிதனுனேன்.

சத்தியபாமை ஜாவளி.

ஆ! இதுநல்ல ஆச்சர்யமிக
ஆச்சர்யம்சபாஷ் ஆச்சர்யம் கிருஷ்ண சரி
ஆகட்டுமிப்புத்தி ஆருரைத்தாருனக்
காருரைத்தாருனக் காஹாஹா கூறெனக். (கா)

ஷை உருக்மணி

ஆடியெனப் பாடி பதில்
கூறடியிங்கு நாரடியடியே இங்கு
அத்துமீறிவந்தே ஆர்ப்பாட்டம் செய்கிறாய்
ஆர்ப்பாடம்செய்கிறாய் அப்பாலேபோ சிச்சி. (ஆ)

ஷை சத்தியபாமை

சிச்சி என்னடி காச்சு மூச்சென்று
பேச்சுமீறிநீ பூச்சிகாட்டுகிறாய் அடி
சேற்கண்டையைப்போல் துள்ளிவிழாதே நீ
துள்ளிவிழாதே நீ தூமிற்ப்பாய் தூதூ. (சி)

ஷை உருக்மணி

தூத் தூ வென்றெனை பார்த்துவேகமாய்
ஆத்திரமுடன் கூத்துகளாடுறாய்
துடுக்குவார்த்தைகள் சொல்லி சொல்லி இங்கு
சொல்லி சொல்லி யிங்கு தாறுநீத சட்போடி. (தூ)

ஷை சத்தியபாமை

போடிவாடியென்று ருடியுறமாய்
பாடிநாடியே ஜாடுராய் தகுமா?
போங்காலமோவிது போதும் போதும் போதும்
போதும் போதும் போதும் போடிசக்காளத்தி. (போ)

ஷை உருக்மணி.

சக்காளத்தியென் றிக்காலத்தினில்
வெட்கமின்றியு றைக்கிறாயிங்ஙனே
சாமர்த்தியந்தானோ சண்டாளிபடுநீலி
சண்டாளிபடுநீலி தாக்கிடுவேனோடி. (ச)

சத்தியபாமை இந்துஸ்தான் "ஐசரசரமனி" என்கிற வர்ணமெட்டு.

சரிசரியினி உனைவிடேனடி
சனிக்கிரகம் போதாதுவாடிவா
ஜகஜாலவித்தைகற்றநாரி
ஆ! ஆ!! தங்களுக்குமுத்திபஜாரி. (சரி)

கிண்டாரகிண்டி சம்பன்னகிரஸ்தி
விண்ணணம்பண்ணுாய் சக்காளத்தி
கிட்டிப்பேசாதே எட்டியேயிற்பாய்
குட்டிச்சுவரே மட்டிச்சாம்பிராணி
மா—னமே—யிலே—யோடி—இலேயோடி
மாட்டவோதவடைமேல் ஆ, ஆ, ஆ
காட்டவோஎன்கையினை ஓ, ஓ, ஓ
வாட்டவோ சுடச்சுட போ, போ, போ (சரி)

ஷை உருக்மணி.

சுடசுடசுடுவதுவெனவெனை
திருசுடனுறைப்பாயென்முன்னிலே
அடி தூமகேதொத்த மூதேவி
மெத்த சூதுகற்றபடு பாவி. (சுட)

பெண்டுமேல் பெண்டாய்வந்த தண்டுமாரி
பேரம்பேசித்திரியும் சதிகாரி
பேசாதேபோடி ஏசாதேயிங்கு
நாசகாவிநீ வீசாதேகையை
வே—சமாகவோ—டடி—வோடடி
வேலிக்குநான்போட்டமுள் ஆ, ஆ, ஆ
காலுக்கூனமாச்சுதே ஓ, ஓ, ஓ
வாலினைமுடக்கடி தூ, தூ, தூ, (சுட)

ஷை சத்தியபாமை.

வாலினைமுடக்கெனதைரிய
மாயுளதுங் காரணமெனமோ
பொல்லா வஞ்சநெஞ்சுள்ளபிடாரி
என்ன வாதென்னுடன்பழிகாரி. (வா)

சத்தேனும் புத்தியில்லாதசண்டாளி
தர்க்கமிட வெட்கமில்லையோமூளி
சல்லாபந்தானோ வுல்லாசமேனோ
வல்லாளகிண்டி நில்லாதேமுன்னே
நீ—விகூதா—மதே—வதை—தேவதை
நெட்டியேதள்ளட்டுமா? ஆ, ஆ, ஆ
கிட்டியேமோதட்டுமா? ஓ, ஓ, ஓ
எட்டியுதைக்கட்டுமா? சீ, சீ, சீ. (வா)

௸ உருக்மணி,

உதைஉதையென பதைபதைக்குமுன்
னுளமதிர வோட்டுகிறேன்பார்
அடி உன்னைப்போன்றமாயக்கள்ளி
பூவில் உண்டோடிதடுக்குத்தள்ளி. (உ)

கண்ணனைக்கைவசங்கொண்ட நிர்மூடி
கண்டபடியுளறுங் குடிகேடி
கட்டியடிப்பேன் எட்டிகொடுப்பேன்
வெட்டிபுதைப்பேன் கிட்டிநகைப்பேன்
கா—தகி—பர—தகி—பாதகி
கெட்டுபோகக்காலமோ ஆ, ஆ, ஆ
முட்டவீதிகோலமோ ஓ, ஓ, ஓ
பட்டியாக மூலமோ சீ, சீ, சீ. (உதை)

நாரதர் வசனம்

ஆ! ஆ!! ஆ!!! இதென்ன வெட்கக்கேடு இப்படிவாக்குவாதம் செய்வது உங்களுக்குத் தகுமா? நல்லவேடிக்கை சாந்தமாயிருங்கள்.

கிருஷ்ணர் வசனம்.

நாரதரே இதுவுந்தங்களுக்கோர் வேடிக்கையா? இப்படியுங் கலகத்தை மூட்டலாகுமா? சரி சரி நீர்என்ன செய்வீர்பாவம் உம்மிடகாலமெல்லாம் இவ்வாறே மூடிகின்றது. நல்லது இருக்கட்டும் சண்டையை மூட்டினநீரே அவர்களைச்சமரசப்படுத்தும்.

நாரதர் வசனம்.

ஏ! கிருஷ்ணபூபதி நானு கலகம் செய்தேன் சரிசரி அம்மா ருக்மணி இப்படிவா உனக்குகிஞ்சிற்றும் புத்தியில்லை உனக்கென்ன சத்தியபாமையிடா அவளுடன் நீவார்த்தையாடத்தகுமா? யாவும் சாவதானமாயுறைக்கின்றேன் மவுனமாயிரு.

அம்மாசத்தியபாமா? இப்படிவா உனக்கு உருக்மணியிடம் வார்த்தையென்ன பகவான் உன்னிடந்தானே பிரியமாயிருக்கின்றார். நீ ஒன்றுக்கும் அஞ்சாதே மவுனமாயிரு.

கண்ணபிரானே சாந்தப்படுத்திவிட்டேன் என்மீது கோபங் கொள்ளவேண்டாம்,

ஸ்ரீ கிருஷ்ணர் வசனம்.

இது சாந்த மாகுமா? இருவரும்ஒருவர்க்கொருவர் பேசும்படி செய்யவேண்டும்.

நாரதர் வசனம்.

ஆ! ஆ! அப்படியே செய்கின்றேன் அம்மா உருக்மணி சத்தியபாமையைத் தங்கையென்றழைப்பாய்

உருக்மணி வசனம்.

போமையா எந்தவார்த்தையாடினாலும் அந்தவார்த்தையாட வேண்டாம்.

நாரதர் வசனம்.

வேண்டாம் அம்மா யான்சொல்லும் வார்த்தையைக் கேள்.

உருக்மணி வசனம்.

இதென்ன பெருநச்சாயிருக்கின்றது தங்கா சத்தியபாமா.

சத்தியபாமை வசனம்.

ஏன் அக்கா இதோ வந்தேன்.

ஸ்ரீ கிருஷ்ணர் வசனம்.

நாரதரே இன்றுஎம்மை நாடி குலேசமாமுனிவர் வரப்போகின்றார் அவர் சுப்ரசன்னத்தைக்காண யாங்கள்மூவரும் சபைக்குச் செல்கின்றோம் தாங்களும் போய்வருவீர்.

(நாரதர் வசனம்)

அப்படியே.

துவாரபாலர் ஜாவளி.

"கூடுமுன்னம்" என்கிற வர்னம்.

வந்தனம் ஸ்ரீகிருஷ்ணபூபதி மாதர்மணிகாள்
வந்தனம் ஸ்ரீகிருஷ்ணபூபதி, (வ)
தந்தனமுன் சிரசுக்கும் தண்ணருள் வதனத்துக்கும்
சுந்தரமாகிய மொழிக்கும் சுகுணத்துக்கும். (வ)
மடலனையகாமத்துக்கும்மங்களஸ்ரீ சூர்னத்துக்கும்.
கடகமணி கரங்களுக்கும் கால்களுக்கும் (வ)
சங்குசக்கரங் களுக்கும் சாரும்பஞ்சாயுதங்களுக்கும்
உங்கள்பட்டு பீதாம் பரத்துக்கும் உந்தி மலர்க்கும். (வ)
மஞ்சைநிகர் நடனத்துக்கும் மலருபய தாட்களுக்கும்
பஞ்சேந்திரியங்களுக்கும் பாகவதர்க்கும். (வ)
அத்துவிதானந்தத்திற்கும் அஷ்டாக்ஷரங்களுக்கும்

ஸ்ரீகிருஷ்ணன் கவிகட்கும் மூலப்பொருட்டும் வந்தனம்,

கிருஷ்ணர் விருத்தம்.

பூமேவுகலைவாணி கேள்வன்வாழி
புகலொணுச் சாத்திரமாமறைகள்வாழி
ஆமேவுமீரே பூதலமும்வாழி
அறுபத்துநான்கு கலைக்யானம்வாழி
பாமேவுமடியார்க ளுள்ளம்வாழி
பன்னுருக்மணி சத்யபாமைவாழி
தாமேவுசப்தரிஷி கூட்டம்வாழி
துவாரபாலகரேநீர் வாழிவாழி.

பொது வசனம்.

இவ்விதம் கோபாலனுகிய பூபாலன் தனது தேவிமார்களான உருக்மணி முதலியவர்களுடன் துவாரபாலர்கள் புடைசூழ அமர்ந்திருக்குங்கால், குசேலமாமுனிவர் கண்ணபிரான் அரண்மனையை நாடி உண்ணுமைய சமயம் நோக்குகின்றபடி.

குசேலர் விருத்தம்.

மண்ணவர்ப்புகழுங்கண்ணன் மனையினுட்செல்வோமென்றால்
அண்ணலர்த்துன்னுங்கூட்டம் அதற்கிடையூருய்நின்று
நண்ணியிங்கார்த்திருக்க நாளொருகற்பகாலம்
திண்ணமாய்க்கார்த்திட்டாலும் திருவடிகிட்டிடாதோ.

வசனம்.

ஆ! ஜெகத்காரணு! மண்ணவர்ப்புகழுங்கண்ணபிரானது மனையினுள் எவ்வாறுபோவது? மன்னவர்த்துன்னு நெருக்கமானது மாறுதுபோற்காண்கின்றதே ஆ! என் செய்வேன், இங்கு கற்ப கோடிகாலம் கார்த்தாலும் இஷ்டதெய்வத்தின் திருவடி கிட்டுமோ கிட்டாதே ஆகிலும் யோசிப்போம்.

குசேலர் விருத்தம்.

மன்னவர்த்துன்னுங்கூட்ட, மத்தியினுநுழைந்து
இன்னமுந்தாமதிக்கா தேகுவேனதனுல்பின்னும்
மன்னிடுந்துன்பமோடு வருவதெல்லாம் வரட்டும்
என்னசெய்வேனிங்கின்ன மீதொருசூக்ஷிதானே

வசனம்.

ஆ! இனிவரப் பொழுதோகழிகின்றது. சும்மா காலதாமதம் செய்வது காரியமன்று. மனந்துணிந்து மன்னர்கூட்டத்துள் நுழைந்துசெல்வோம் இதுவுமோர்சூக்ஷிதான் என்னுலாகுங்காரிய மிதுவே வருபவையாவும் வரட்டும்.

சேவகன் வசனம்.

ஆரடாவன்.

குசேலர் வசனம்.

ஐயையோ காவலாளன் கண்டு விட்டானே என்செய்வேன் ஓடியாவது மறைவோம்.

தீனரக்ஷகா! நீயே துணை இதுதான் சமயம் சேவகனைக்கூட காணும் வேகமாய்ச்செல்வோம்.

ஆ! இவர்கள்யார்? திருநெடுமால் அடியவர்போல் காண்கின்றது. மேலும் துவாதசத்திருமணக்குறி நெற்றிமுதலிய 12 ஸ்தானங்களில் தரித்து விளங்குகின்றனர். எம்பெருமான் எழுந்தருளியிரானின்ற ஸ்ரீ வைகுந்தத்துள்ள ஜெயவிஜயாளென்னும் துவாரபாலர்களோ? அப்படித்தானிருக்கவேண்டும் அருகிற் சென்று வாழ்த்துதல் அளிப்போம்.

ஸ்ரீகுசேலர் விருத்தம்.

அப்பன்வைகுந்தவாசன் அருகிருந்தகமகிழ்ந்து
செய்யநற்சேவைதன்னை தினமடைந்திங்குநீக்க
வையமீதிடரறுத்து மாதவஞ்செய்துகந்த
துய்யரேத்வாரபால சுகுணரேவாழிவாழி.

வசனம்.

அப்பாதுவாரபாலர்களே ஆசீர்வாதம் இடைவிடாது கமாலாசனியென்னும் கோமளவல்லியை திருமார்பிற்றரித் தருளிய தேவதேவனது திவ்யசேவை தினேதினே யடைகின்ற மாதவரே ஆசீர்வாதம்நீங்கள் இவ்வையகத்தின்கண்யாதுதபம்செய்தீர்களோ உம்மிடமேன்மையை எம்மாற்புகழத்தரமோசுகுணரேவாழிவாழி.

துவாரபாலர் வ-ம்.

மெய்ஞ்ஞானியே அநேகவந்தனம் தாங்கள்யார் எங்குவந்தீர்.

"சோதிரூபமே" என்கிற வர்ணமெட்டு.

குசேலர் ஜாவளி.

துவாரபாலர்களே கேழ்ப்பீர். (து)
துவாரபுரிவாசரே மிகுநேசரே ஐயா. (து)
அந்தணர்க்குலவாசனும் அடியன்பேர்குசேலனும்
ஆவலாகவேவந்தேன் ஆவலாகவே கண்டுமை
ஆறினேன் மனந்தேறினேனையா. (து)
சாந்தீபர் கல்விச்சாலையில் சாற்றுமாதிநாளையில்
சாமியாருடன் கிருஷ்ணசாமியாருடன்யானுமே
சார்ந்தேன் படிப்பில்தேர்ந்தேனையா (து)
சிந்தனைசெய்யாமலே தீவிரம்வையாமலே
தேவன்சமுகம் வாசுதேவன்சமுகம் எந்தனை
சேர்ப்பீர் பாதுகார்ப்பீர் ஐயா. (ஐயா)

குசேலர் வசனம்,

துவாரபாலர்காள் நானோ அந்தணர் குலத்திலுதித்தவன் என்பேர்குசேலன் ஸ்ரீகண்ணபிரானோடுஇளமையில் சாந்தீபமுனிவாது பள்ளியில் கலைபயின்றவன் அவர் சுப்ரசன்னங்காணவந்தேன் அடியேனை அப்பரமாத்மாவிடம் சேர்ப்பீர்களையா.

வாசலிலிருப்போர் ஏளனம்செய்தல்.

விருத்தம்.

பிச்சைகொள்ளும்பார்ப்பானே பேதமைகொண்டேயந்த
அச்சுதனோடுகூட அருங்கலைபயின்றனென்றீர்
இச்சகத்துள்ளோரீதை எள்ளளவேனுநம்பார்
நிச்சயமீர்திரும்ப நேர்வழிபார்த்திடீரே.

வசனம்.

முஷ்டியெடுக்கும் பிராம்மணரே உமக்கென்னபேதமைமேலிட்டதோ எங்கள் அச்சுத மூர்த்தியினுடன் ஆதிகாலத்தில் கலைபயின்றேனென்கிறீர் சொல்வாருக்குமதியில்லாவிடினும் கேட்பாருக்கு மதியில்லையோ இதையார் நம்புவர் வந்தவழியைப்பாரும்.

2-மவன் விருத்தம்.

அப்படியொன்றாய்க்கூடி அருங்கலை பயின்றிருந்தால்
எப்பொழுதாவதுந்தன் இருப்பிடநாடிடாரா
தப்படிபேசுகின்றீர் தகாதிதுசொன்னோமின்னம்
இப்படிதிரும்பினீர்கள் ஏசுநீர்வந்தவழியே.

வசனம்.

சரிசரி இவர்செல்லுவதொரு பக்ஷமிருக்கட்டும் அப்படிஒன்று கூடி கண்ணனுமிவரும் சலேபமிருந்திருந்தால் எப்பொழுதாவது இவர் இருப்பிடத்தை நாடிபகவான் சென்றிருக்கமாட்டாரா போமையாபோம் தகாதவார்த்தை யாடுகின்றீர் திரும்பிப்பாராமல் ஓடும்.

3-மவன் விருத்தம்.

நல்லதவ்வாறு தேவன் நாடிச்செல்லா விட்டாலும்
சொல்லியோர் தூதனுப்பி சுகமசுகந்தான்தெரிந்தே
அல்லலைத்தீர்த்திடாரா அதுவுமல்லாதொழிந்தால்
புல்லியோர்க்கடிதமேனும் புகழ்ச்சியாய்வரைந்திடாரோ

வசனம்.

நல்லதப்பா சினேகிதவிஷயமாய் இவர் இருப்பிடத்தை பகவானே நாடிச் செல்லாவிட்டாலும் ஒரு தூதனுப்பி சுகக்ஷேமங்களை விசாரித்திருக்கமாட்டாரா அதுவுமல்லா தொழிந்தாலும்ஒரு திருமுகச்சந்திரிகையாவது வரைந்தனுப்பி யிருக்கமாட்டாரா இது சுத்தபைத்தியம் போமையா.

4-மவன் விருத்தம்

வெய்யவாழ்க்கைக்காயிங்கு வேண்டிவந்தீரோபாவம்
பையதன்தீபமென்று பகர்ந்திடுவாரோமுத்தம்
ஐயோவுட்சென்றால்மிக்க அவமானநேருமல்லால்
உய்யவேசெய்திடாது ஓடிவீர்வந்தவாக்கே.

வசனம்.

ஐயோ பாவம் கொடிய இவ்வாழ்க்கையில் தரித்திரம் குடி கொண்டதோ அதை நீக்கிக்கொள்ளலாமென வந்தீரோ பைத்திய மேலிட்ட விருத்தாப்பிய பிணமே உலகின்கண் தன்சொந்த விளக்கென்றுமுத்தமிடுவாருண்டோ நீர் பழைய சினேகம்பாராட்டி இப்பொழுது உட்செல்ல மனந்துணிவு கொள்வீரேயாகில் மிக்க அவமானநேரிடும் சந்தோஷமுண்டாகாது சொல்லாமலோடும்.

5-மவன் விருத்தம்.

தரணிமன்னவர்களெல்லாம் தரிசனங்கிட்டிடாமல்
திரணியமாய்ப்பன்னாளாய் நெருங்கியிங்கேங்கிநிற்க
திரணமாகியநீரையோ ஜெகத்திரக்ஷகனையின்று
சரணமென்றடையப்போதல் சாற்றவும்வெட்கந்தானே.

வசனம்.

ஓ! வேதியரே குபேரனும், இந்திரனும் மற்றுமுள்ள வானவர்களும் மகாமகுடமன்னவர்களும் இந்த அற்புதசேவை கிட்டாமல் காத்திருக்க திரணமாகிய வுனக்கு எவ்விதங் கிட்டப்போகிறது இது கேட்பதற்கும் சொல்வதற்கும் வெட்கத்தைத்தாரா நிற்கின்றது போம்போம்

6 மவன் விருத்தம்.

அந்தணனுயுதித்தும் அறுதொழிற்காளராகி
செந்தணலிட்டியாகம் செய்துசெல்வங்கொள்ளாது
கந்தையைப்பூண்டுதேவன் காக்ஷிகண்டிடவந்தீரோ
விந்தையோ அல்லதுந்தன் வித்தையோ அறிகிலேனே.

வசனம்

ஓ! விப்பிரகுலோத்தமா நீர் அந்தணராய்ப் பிறந்தும் அறுதொழிலக்கைக்கொண்டு அதனுள் ஒன்றாகியயாகத்தொழிலைநடாத்தி அதனுல் உண்டாகும் ஊதியத்தின் பயனுல் நல்லாடைவுடுத்தி அறுசுவையுண்டிகளை உண்டு காலங்கழிக்காது பிறல்கந்தையைப் பூண்டு தேவாதிதேவன்காக்ஷியைகாண வந்தது ஆச்சரியமோ அல்லது நீர்கற்றகல்வியின் செருக்கோ ஒன்றுந்தெரியவில்லை. ஆ ஆ ஆ

துவாரபாலர் தரு. கமாஸ் ஆதி

"ஏனிந்தப்படி மனங்கலங்கலானீர் மன்னு" என்கிற வர்ணம்.

ஆரென்றுநினைக்கிறீர் அவரையேமடையர்களே
அருந்தவத்திலுயர்ந்த பெருந்தவசியாயிற்றே. (ஆ)

நீரின்றலக்ஷியமாய் நினைத்துதூஷிக்கலாமோ
நெஞ்சமஞ்சும்படியாய் நேரில்நிந்திக்கப்போமோ. (ஆ)

அந்தணர்க்குலத்தினிலவதரித்திட்டமுழுஞானி பொல்லா
அக்யானத்தையொழித்து சுக்யானத்தையடைந்தமானி
விந்தையெனவேசதுர் வேதங்கரைகண்டவர்
விஷ்ணுபக்தியேசதா விரதமாகக்கொண்டவர். (ஆ)

அல்லலுறும்பொய்சொல்ல ஆயுளிலுமறியாதவரே நமக்
காசாரியருந்தெய்வமான மகானுபாவரிவரே
நல்லவர்தரிசனம் நயமாகக்கிடைக்குமோ
நாடிநீவிரிப்படி நவிலுதலடுக்குமோ. (ஆ)

சகலபற்றையுமறுத்தவரொருவருக்குமேகடுங்கார் பிர
சண்டமாறுதம்வீசி கடனிலெபெயர்ந்தாலுமொடுங்கார்
விகலந்தரும்வெறுப்பு விருப்புகிடையாதென்பார்
விஷத்தையருந்தினாலும் மிருத்திலையெனவிள்வார். (ஆ)

துவாரபாலர்கள் வசனம்.

ஏ! மடையர்கள் இந்தயோகீஸ்வரரை யார் என்று நினைக்கி றீர்கள் இவர் சுத்த பிர்ம்மகுலத்தில் உற்பவித்தவர். பொய்யைத் தள்ளி மெய்யைக்கைக்கொண்டவர் மகாவிரதம்பூண்டவர், சதுர் வேதங்களையுங்கரைகண்டவர் இவரேநமக்கு ஆசாரியரும் தெய்வமு மான வழிபடுகடவுள். இப்படி நீங்கள் வாயில்வந்தவாறுபேசுவது அடாதகாரியம்.

ஓ! ஞானச்செல்வரே, உமது தவப்பெருமையை யார் யறிய வல்லவர், இச்சிறியர் அறியாமலுரைத்த வார்த்தைகளை உமது திரு வுளத்தில் கொள்ளற்க.

துவாரபாலர் தரு "அரனேகங்காதரனே" என்கிற வர்ணம்.

வாரீர் எம்மைப்பாரீர் சுகந்தாரீர் தவமணியே
வந்தனங்கள் தந்தோம்தய வாயுட்காருவீர் முனியே. (வா)
தேவா மனுபாவா மகிஜீவா புகழ்பெருக
சிறியோர் செய்தபிழையை பெரியோர் பொறுத்தருள்க(வா)
ஈசாஹரிதாசா கண்ணனேசாமகிழடைய
இங்குமதுவருகையால் எம்பாவமுற்றுந்தொலைய. (வா)
மெய்யா பிருதுய்யா எமதையா பாகவதரே
வேந்தர்க்குமதுவரவை விண்ணப்பம்செய்தோடிவாரோம். ()

வசனம்.

சுவாமி தங்களுக்கிதோ நமஸ்கரிக்கின்றோம் இவ்வாசனத்தின் மீது எழுந்தருள்வீர், மன்னவர்க்கு உமதுவருகையை விண்ணபபம் செய்தோடி வருகின்றோம்.

குசேலர் வசனம்.

அவ்விதமே அதிசீக்கிரம் வருவீர்.

துவாரபாலர் விருத்தம்.

போற்றிகண்ணபிரானே புகலுவோமோர்விண்ணப்பம்
நாற்றிசைப்புகழுமந்த ணர்க்குல குசேல பேராம்
தேற்றமாய்த்தங்களோடு சேர்ந்துகல்விக்கற்றாராம்
வீற்றிருக்கின்றாரங்கு வேகமாய்ச்சொலவந்தோமே.

வசனம்.

ஸ்ரீமானே கோடிவந்தனம் ஒரு பிராம்மணமுனிவர் அவர் திருப்பெயர்குசேலராம். தங்களுடன் ஆதிகாலத்தில் கல்விபயின்ற வராம் அவர்தேவர்மீது வைத்துள்ள அன்பின் மிகுதியால் தங்கள் தரிசனம்வேண்டி நம்வாயிலில் வந்து காத்துக்கொண்டிருக்கின்னர் இதுவே எமது விண்ணப்பம் தேவா.

கிருஷ்ணர் விருத்தம்.

ஆ!ஆ!! என்னருமைவாய்ந்த அந்தணகுசேலதாசர்
ஆ!ஆ!! இங்கெம்மைத்தேடி அன்புடன்வந்திட்டாரா
ஆ!!ஆ! நானவரையேகண் டனேகநாளாயிற்றுங்கே
ஆ!ஆ!! இக்ஷணமேயேகி அழைத்துநீர்வருகுவீரே.

வசனம்.

துவாரபாலர்கள் என்னருமை சிநேகிதராகிய குசேலமாமுனிவர் எம்மைத்தேடி வந்திருக்கின்றாரா! நான் அம்மகாத்மாவைக் கண்டு வெகு நாளாய்விட்டது நீங்கள் இனிதாமதியாமல் ஒரு க்ஷணகாலத்திற்குள் அன்னவரை யிங்கழைத்தோடிவருவீர்.

துவாரபாலர்கள்-தரு மாடுமேய்க்கவோ என்கிறவர்னம்,

வாரீர்ஐயனே எங்கள்
மாதவனழைக்கிறார். (வா)
மாயைகளொழிந்திட மலரடிபணிந்திட. (வா)
பாக்கியவானே பகருமெங்கோனே
பரமபாகவத பார்த்பரதுதிஜித. (வா)

சித்தமிலானே சீர்தருவோனே
சீக்கிரமாகவே சிறுமையுமேகவே. (வா)

அருந்தவத்தோனே ஆசைகற்றோனே
அரைநொடிதன்னிலே அவராதுமுன்னிலே. (வா)

அந்தணர்க்கொழுந்தே அமரரின்மருந்தே
அல்லலொழிக்கவே ஆக்கம்பெருக்கவே. (வா)

நற்கலையானே நலம்பெறுவோனே
நரகரிதாசரே நவிலுங்குசேலரே, (வா)

குசேலர் வசனம்

ஆ!! ஆ! துவாரபாலர்காள் அநேக ஆசீர்வாதம் உங்களாலல்லவோ இவ்வளவு பெருமைக்குப் பாத்திரனானேன் இதற்குக் கைம்மாறியற்ற அடிமையால் முடியுமோ ஆ ஆ வாருங்கள் செல்லீர்ம்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் எதிர்கொண்டழைத்தல்.

"கம்-மிதினேபார்க்கவி" என்கிற வர்னம்.

மாதவரேவாருமே தம் மலரடி தரிசனமளிக்க நாங்களிக்க. (மா)

வேதசுபோத விநோதமனோத
விண்ணவர்புகழதி புண்யதயாபர. (மா)
பல்லவர்நல்லவர் எல்லவர் துதிபெறும்
பரமபாகவத சிகாமணிசுகுண. (மா)

நாதப்ரகாச யோகிசக்ருபாகர
நாவலர்க்காவலர் ஆவலாய்ப்பணியு. (மா)

நேசவிஸ்வாச வென்தாசமனோகர
நிகரொருவருமிலா நிபுண ஸ்ரீகுசேல. (மா)

வசனம்.

ஸ்ரீபரமபாகவதயோகஞானசிகாமணியே இதோ சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து கொண்டேன் தேவரீர் இவ்வளவு தூரம் கடாக்ஷித்தெழுந்தருளியது இவ்வரண்மனைசெய்தபூஜாபலமோ அல்லது இவ்வனிதாரத்தினங்கள் இயற்றிய நற்றவமோ அடியேன் ஆதிநாள் செய்த பூஜாபலமோ ஆ! ஆ!! யான் இன்றைக்கல்லவோ கிருதார்த்தனானேன் சுவாமி வாரும் இந்நவரத்தினமிழைத்த கனகாசனத்தில் எழுந்தருளும்.

மாதர்காள் ஆதிநாள் என்னுடன் வாசித்த குசேலமாமுனிவர் வருகின்றாரென முன்னம் உங்களிடம் பிரஸ்தாபித்திருந்தேனல்லவா? அவர் இவர்தான் நீங்களும் இம்மகாத்மாவை நமஸ்காரம் செய்துகொண்டு அதிசீக்கிரம் அரண்மனைக்கோடி பரிசுத்தமாகிய ஜலம்கொண்டு வாருங்கள் இவருக்கு ஸ்நானம்செய்விக்கவேண்டும்

தேவிமார் வசனம்.

அவ்வாறே கொண்டுவருகின்றோம் சுவாமி வந்தனம்.

குசேலர் வசனம்.

தீர்க்க சுபமங்கல்யபவா.

தேவிமார் வசனம்.

பிராணநாத் உத்திரவின்படி சுத்த ஜலம் கொண்டு வந்தோம் முனிவர்க்கு ஸ்நானம் செய்விப்பீர்தேவா.

ஸ்ரீ கிருஷ்ணர் ஜாவளி,

"மோடிசெய்வதேதுக்கோ" என்கிற வர்ணம்.

ஸ்நானம்செய்விக்கிறேன் முனிவர்க்கு
சந்தோஷமாகசரியாய் நெறியாய்முழு. (ஸ்)

தண்ணீர்முகந்தளிப்பீர் தையலரே
சங்கேதமின்றி தளர்ந்துவிரைந்துமுழு. (ஸ்)

செங்கையினற்றடவி தேகமதை
சிந்தைபூரித்து சிறந்துமகிழ்ந்துமுழு. (ஸ்)

இந்தக்குசேலர்தம திருபதம்
எப்பொழுதுங்கதியென்று புகன்றுமுழு. (ஸ்)

கிருஷ்ணர் வசனம்.

ஏ! பெண்காள்:—ஸ்ரீகுசேலமாமுனிவர்க்கு ஸ்நானம்செய்வித்தாயிற்று இனி உலர்ந்தமெல்லிய வஸ்திரத்தால், இவரது தேகமாத்தியந்தமும் துடைப்பேன் நீங்கள் இனி அதிவேகமாய்ச் சென்று இவர்க்குடுத்த பட்டு பீதாம்பரம் கொண்டுவாருங்கள்.

தேவிமார் வசனம்.

நாதா:—இதோ கொணர்ந்தோம் உமதுஇஷ்ட சிகாமணிக்கு உடுத்துவீர்,

ஸ்ரீகிருஷ்ணர் வசனம்.

ஏதோ தருவீர் இதோ இவர் இடுப்பில் உடுத்தினேன் சுவாமீ வாரும் இத்தங்கமணையில் உட்காரும் திருமண் ஸ்ரீசூர்ணம் அணிகின்றேன் இனி இவரைப்பூஜைசெய்து கொள்ளுவேன்.

ஸ்ரீ கிருஷ்ணர் தேவாரப்பண்,

பூசைசெய்கின்றேனென் னேசகுசேலர்ப்பதமே
வீசுபுகழ்தங்கிடவே ஆசையுடனிவ்விதமே. (பூ)

அன்றுமலர்ப்புட்பங்கள் நன்றெனவேயானெடுத்து
தொன்றுவினைதீர்ந்திடவே இன்றிவர்தேகநிறைந்து. (பூ)

மல்லிகைசாமந்தியுடன் முல்லைமலர்க்கைக்கொண்டு
சொல்லரியமந்திரமும் எல்லையிலாமல்விண்டு. (பூ)

மருவுமருக்கொழுந்தோடு இருத்துழாய்சிரம்வைத்து
பொருமைமிகவனுதினமும் பெருகிடநாவாறுதித்து. (பூ)

ஸ்ரீகிருஷ்ணர் வசனம்,

இனி இந்தக்குசேலமகானுபாவர்க்கு அர்க்கியம் பாத்தியமும் தூபதீபமும்சமர்ப்பித்து சோடசோபசாரமும் செய்துகொள்வேன் சுவாமி:—இன்று தங்களுக்கு ஊழியஞ் செய்ய முன்செனனத்தில் அடியேன் யாது தவம் செய்துளனோ வனிதையர்காள் என்னுப்தர் மெத்த பசியோடிருக்கின்றார் நீங்கள் அதிதுரிதமாய் அரண்மனைக் கேகி சிற்றுண்டிகொண்டுவாருங்கள்.

தேவிமார் வசனம்.

இதோ கொணர்ந்தோம் ஸ்வாமி

ஸ்ரீ கிருஷ்ணர் ஜாவளி,

"ஜென்மமெந்துகு" என்கிற வர்னம்.

போஜனங்கொள்வீர் பூரிப்பாகதேவா. (போ)

தேஜவிலகுமுன் செங்கையாலுகந்து
பாசமுடனேந்திப் பவளவாய்த்திறந்து. (போ)

தங்கவட்டில்தேடி சாதனன்படைந்தேன்
சர்க்கரைபருப்பும் தானிதோவமைத்தேன்
பொங்கமாய்ப்பதார்த்தம் பூர்த்தியாகவைத்தேன்
புத்துருக்குநெய்யும் பொறுமையாய்வட்டித்தேன்
புன்சிரிப்படைந்தேன் புனலருந்தத்தந்தேன்
ஒன்றாகப்பிசைந்தேன் ஊட்டவுந்துணிந்தேன் (போ)

வசனம்,

ஐம்புலச்சேஷ்டைகளை நீக்கிப் பிரகாசித்துவரும் ஞானசிரோன்மணியாகிய எனது குசேலமாமுனிவரின் சாப்பிட்ட வாயையும் கையையும் அலம்பக்கடவேன்.

சுவாமி இந்தாரும் தாம்பூலம் தரித்துக்கொள்ளும் மெத்தையின்மீது தேவரீர் தய்வுசெய்து சற்றுநேரம் இளைப்பாறசயனித்துக் கொள்வீர்.

ஜாவளி "கன்னுகாருண்யா" என்கிற வர்னம்

குசேலரேநான் விசிறிகொண்டு விசுறுகின்றேனே. (கு)

பசியிளைப் பிணைத்தவிர்த்த பாதைநீங்கவே
விசையாகக்குளிர்ந்தகஉற்று வீசிடவிதோ. (கு)

எந்தனையோ காதவழி எம்மைநாடியே
சித்தங்குழைந்திங்குவந்த தேகம்பூர்க்கவே. (கு)

வேர்த்திடலாயிற்றுடலம் வேறென்செய்குவேன்
ஆர்த்தினிமிற்காமலேகை யார்ந்துவேகமாய். (கு)

நித்திரைபதித்துசற்று நேரமாகிலும்
மெத்தையின்மேல் சயனிப்பீர் மித்ரதீபமே. (கு)

ஸ்ரீகிருஷ்ணர் வசனம்.

தபோதனரே:—அடியனைக்காணு நிமித்தமாக பற்பலகாத தூரம் கால்கடுக்க எவ்விதமாக நடந்து வந்தீரோ என்னை வந்து போகும்படி ஓர்நிருபம் வரைந்தால் வரமாட்டேனு பாதங்கள் எவ்விதமாக நோகின்றதோ எனது கரங்களால் சற்று அமுக்கக் கடவேனுக.

ஸ்ரீ கிருஷ்ணர் ஜாவளி.

"ஆயிரசிமேபஹூர்" என்கிற வர்னம்.

பாதம்பிடிப்பேனையா பாகவதரே. (பா)

பாதம்பிடிப்பேன் பாதம்பிடிப்பேன்
பாதம்பிடிப்பேன் வந்தபாதைதீரபாகவதரே. (பா)

வெய்யலிற்தேகம் வேர்த்துவேசாரி
பையநடந்துவந்த பாதைதீர பாகவதரே. (பா)

தற்பெருமையை சற்றும்வையாமல்
பற்பலகாதம்வந்த பாதைதீர பாகவதரே. (பா)

ஸ்ரீகிருஷ்ணர் வசனம்.

சாந்தகுணமுடையசாதுவே:—உமது திருவடிகள் இரண்டும் அடியனிமித்தமாக நடந்து இளைத்தனவே அந்நோய் நீங்க என்னுல் கூடிய மாத்திரம் கரசரணநிகளைப்பிடித்தேன் எதோயான் செய் செய்யும் உபசாரம் கொஞ்சமாயிருக்கினும் அதை பெரிதாகக் கொண்டு,

தரு-தோடி-ரூபகம்.

ஓதுவீர் உங்கள்க்ஷேமம் ஐயா
உமதுளமகிழுடனிந்ததி. (ஓ)

சதுசங்கச்சேர்க்கை தானகப்பட்டதோ
சாற்றுந்திருமணச் சடங்காய்விட்டாதோ
மாதுநற்குணநற் செய்கைக்குட்பட்டதோ
மன்னுந்தன்னு யிரேற்பரோ
மன்னனை முன்னங்கார்ப்பரோ. (ஓ)

பாரதனையொத்திருப்பாரோ அதி பதிவிரதாதருமந்தனை
போதமூண்டு தரிப்பாரோ
ஏரணிபெருகுங் கருணையடக்கம்
இணையிலாசசரன்றே ரிடத்திலொழுக்கம்
பூரணமாய்க்கொண்டவரோ தர்க்கம்
போடாதவரோசிந்தம் வாடாதவரோதத்தம். (ஓ)

தாரித்திரநேர்ந்திட்டாலும் சஞ்
சலமதை நீக்கியேகுடிதனில்
பூரித்திருப்பரோ நாளும்
ஆரியரெனவே அச்சம்வைத்திடுவாரா
அருமந்தபிள்ளைக ளன்பாய்ப்பிறந்தாரா
பாரியவுபன யனங்கள்செய்தீரா
பலகலைகற்பித்தீரா நலமுடனுய்வித்தீரா. (ஓ)

நாடியேநீர்வந்தீரோ இங்கு
நம்மகமாகியத்வாரகை
தேடியேபுகுந்தீரோ
பாடியேகொணர்ந்த பக்ஷணத்தைத்தாரும்
பன்னாளாய்வழி பார்த்தேனிதுகாரும்
கூடினேமிப்போ தெந்தன்முகம்பாரும்
குவலயம்பரவசமாகிட
தவமுனிவர்கள்களிகூர்ந்திட. (ஓ)

ஸ்ரீகிருஷ்ணர் வசனம்.

நான்முகனை யொத்த ஞானமூர்த்தியே பால்யத்தில் சாந்தீப முனிவர் கல்விச்சாலையில் நாமிருவரும் வாசிக்கும்போது யானும்

நீரும் ஒருவரோடொருவர் கட்டிப்புரண்டு உம்மையான் தள்ளியும் எம்மைநீர் தள்ளியும் விளையாடிவந்த விளையாட்டுகளெல்லாம் உமது ஞாபகத்தில் வைத்திருக்கின்றீரா அவைகளிலொன்று இப்போது ஞாபகத்தில் வருகின்றது சொல்லட்டுமா ?

ஸ்ரீ கிருஷ்ணர் அகவல்.

நம்மிடகுருவின் நாயகிநம்மை
தம்மகந்தன்னில் சமையலுக்காக
எறிகரும்பில்லை யென்றுரைத்தனள்
குறியிடயிருவரும் கூடியேகானம்
சென்றியாங்கட்டை சேரவேவெட்டி
நன்றெனவிருசுமை நலமுடன்கட்டி
கல்லும்முள்ளும் காலினிற்றைக்க
சொல்லொணுத்துயரம் சூடியேதலையில்
தாங்கிவருகையில் சப்தமேகங்களும்
ஆங்கதிசயமாய் ஆர்ப்பாடமுடனே
இடியுமின்னலும் ஏகமாயிருளும்
படிமிசைச்சூழ பார்த்தியாம்நதறி
பாழ்மண்டபத்தில் பட்டினியாக
வீழ்ந்திருந்தோமவ் விடியற்காலம்
குருமுனிவந்து கூட்டியேபோயின
திரமுளசங்கதி சிந்தையிலுளதோ.

வசனம்.

சுவாமி:—இச்சங்கதியாவும் ஒருபக்ஷமிருக்கட்டும் பேயோடு பழகினும் அதைவிட்டு நீங்குவது வெகு அருமை என்பதுபோல் பால்யஸ்நேகம் இச்சரீரம் உள்ளளவும் போகாது ஆயினும்.

ஸ்ரீ கிருஷ்ணர் தரு.

"தாஜராஜராஜராஜ" என்கிற வர்ணம்.

எந்தற்கென்னைகொண்டுவந்தீர் என்குசேலரே
இத்தனைநாள்சென்று
சித்தமகிழ்ந்துநீர்
பத்தியாய்வந்தீரே.

சித்துண்டிக்காய் வித்தகித்தமுகத்தியிருந்தேனன்
உத்தரதிசையை திருஷ்டித்துப்பார்த்தானந்தித்தேன்தான்
ஒன்றுமிலாமலே
என்னிடசமுக
முன்றனையும்மனைவி
ஒப்பியனுப்பிருப்பாரோ
ஒளியாதிப்போதா
ஒளியாதிப்போதா
ஒளியாதிப்போதா—தா—தா. (எ)

வசனம்.

குசேலரே:—இத்தனை நாள் கழித்து இந்த இஷ்டனைக்காண வந்தீரே எமக்கென்ன கொண்டு வந்திருக்கிறீர் எதோ ஒளியாமல் தாரும்.

குசேலர் ஜாவளி.

அண்ணலே கண்ணொளியே'' என்கிற வர்ணம்.

அப்பனே இப்போ திவ் வவலை எப்படி தருவேன், (அ)

விப்பிரனென்மேல் கிருபை
வைத்துகொண்டாடுறீர் வந்தனம்பாடுறீர் வர்னித்து நாடுறீர் (அ)

அடியேனிர்வாகம் அறியாதென்தேகம் துடிதுடிக்க சிற்றுணவு
துணிவுடன்கேழ்கிறீர் சோதனைபார்க்கிறீர் சொக்கிலைகேட்டுறீர் ()

எதனாலிக்காலம் எய்வதிக்கோலம் இதுகபட நாடகமோ
என்னென்றுகூறுவேன் என்மனமாறுவேன்
இனிகடைத்தேறுவேன். (அ)

இத்தாத்ரிமேலே ஏழையெம்போலே மற்றொருஜீவனுண்டோ
மாந்தரிற்காண்கிலேன் மாநினிபூண்டிலேன்வந்திடவேண்டிலேன் ()

குசேலர் வசனம்.

ஆ! என்தன்பிற்கிசைந்த ஏ! கிருஷ்ணபூபதி எனது மனையவள் தந்தனுப்பிய இந்த அற்ப அவலை எப்படித் தருவேன், ஆ! ஆ! ஆ! இதென்ன திருவிளையாட்டு இருகரங்களையும் எந்தி நிற்கின்றீரே என்னிட நிர்வாகம் தாங்களறியீரா சுவாமி.

கிருஷ்ணர் வசனம்.

ஆ! குசேலரே நல்லவார்த்தைபோதினீர் நீர் அவல் என்ற போதே, அதை எப்போதுகருவார் எப்போது பக்ஷிக்கலாமென என்வாய் ஊறுகின்றது எதோ தருவீர்.

ஸ்ரீகிருஷ்ணர் தரு.

அவல் உண்பது.

"திருத்தணிகை மலேயிலுறைவாசனே" என்கிற வர்னம்.

ஆகா இவ்வவல் மிகயோக்கியம் எனக்
கருந்தக்கிடைத்ததே என்பாக்கியம் ஆ! ஆ!! (ஆ)

ஓகோவிப்படியிற்கிட்டாது அந்த
உம்பர்விரும்பினுமெட்டாது நாளும்
தேகபாதைவரவொட்டாது மென்று
தின்றால்பந்தனையுந்தட்டாது ஆ ஆ. (ஆ)

பேசவுமிது நல்லநேர்த்தி ஒரு
பிடிநுகர்ந்தடைந்தேனேகீர்த்தி எந்தன்
ஆசையுள குசேலமூர்த்தி யாலே
ஆயினதென் புண்யம்பூர்த்தி ஆ ஆ (ஆ)

மற்றொருபிடிவாயில்போட்டேன் உயர்
மாதவர்கண்களினும்காட்டேன் சொந்த
உற்றார்கேட்கினுந்தரமாட்டேன் என
துள்ளத்தையினியெங்கு நாட்டேன் ஆ ஆ.
இந்தசிற்றுணவோப்ரகாசம் நாவால்
என்னென்றுரைப்பேன் கமழ்வாசம் இங்கு
சந்ததமிவரதுநேசம் கிடைத்
தாலதுவேநற்சகவாசம் ஆ ஆ. (ஆ)

உருக்மணி விருத்தம்.

உத்தமராங்குசேலர் உளமகிழ்வாய்க்கொணர்ந்த
அத்தனையவலையுந்தான் அற்புடனீரேதின்றால்
நத்தியேயாமிதற்காய் நலமுடனிங்குகார்த்து
சுத்தியேயிருக்கின்றோமே குக்ஷியென் தயவெய்வீரே.

வசனம்.

உலகாரக்ஷகரே தங்கள் நேசதீபமாகிய குசேலமா முனிவர் கொணர்ந்த அத்தனை அவலையும் சிரக்கம்பஞ்செய்து, நீரே அருந்திவிட்டால் இந்த அவல் மீதிலிருக்கும் பிரியத்தால்யாமும் காத்துக்கொண்டிருக்கின்றோமே இதென்ன கபடநாடக சூஸ்திரம் தயவு செய்து மிச்சத்தை தருவீர்சுவாமி.

கிருஷ்ணர் வசனம்.

எனது ஸ்ரீதேவியான உருக்மணியே இப்படி வருவாய் என்ன சூக்ஷத்தைக்கண்டு இந்த மீதியவலை நீ விரும்புகின்றனை தெரியச் செய்வாய்.

உருக்மணி தரு.

"கானகத்தில் நாமலைந்து" என்கிற வர்ணம்.

ஒன்றுமறியாதவர் போல்
ஓதுகிறீர்ரிப்புவி மேல்
நின்றிருபிடி நுகர்ந்தீர்
நெஞ்சமதி லெண்ணினைந்தீர். (ஒ)

சகலபோக பாக்கியமும்
தந்தீரிதற்கு சாக்ஷியம்
புகலவேணுமோ மெய்யா
புன்சிரிப்பென்னத்துக்கையா. (ஒ)

உம்மிடபரவசத்தால்
உள்ளதிதையும் புசித்தால்
இம்முனிவர்க்குட்படுவோம்
ஏவலாளராய் விடுவோம். (ஒ)

தேவர்களுமே நகைப்பார்
சின்னத்தனமா யுரைப்பார்
பாவையறுமே வெறுப்பார்
பக்ஷமின்றியேயிருப்பார் (ஒ)

வேதனிக்குசேலருக்கே
வேண்டுவ்தகப்பெருக்கே
ஓதுக்தொண்டவருக்கேனோ
உண்பதறியாயந்தானோ (ஒ)

அடியார்க்கருள் செய்திட்டால்
அன்பு மாரியும்பெய்திட்டால்
படியினில் மிதமில்லையோ
பங்கஜ நாபா சொல்லையோ. (௯)

வசனம்.

சுவாமி எது ஒன்றும் அறியாதவர்போல் வசனிக்கின்றீர் இரண்டுபிடி அவலையும் நீர் அருந்தினபோது உள்ளத்தில் சங்கற்பித்த சங்கதியென்ன? குசேலருக்கு சகலபோக பாக்கியங்களும், பொருந்தச்செய்ய வேண்டுமென்கிற எண்ணந்தானே ஒளியாமற் சொல்லும் அப்படியிருக்க மூன்றுவது பிடியையுந்தின்றால் பலநாளும் அம்முனிவருக்கு அடிமையாய் அவர்சொல்லும் பணிவிடைக்குப் பாத்திரமாய் அமரவேண்டி முடியுமே ஆ, ஆ, ஆ, என்ன காரியம் செய்ய யோசித்தீர்.

கிருஷ்ணர் வசனம்.

ஏ! ருக்மணிதேவி அப்படியானால் இதோ மிச்சத்தை முடிந்து விட்டேன் நீ செல்வாய்.

ஐயா குசேலரே தாங்கள் அதிபிரியமாய்க்கொணர்ந்த அவலில் இருபிடி நுகர்ந்து பரவசனாயினேன். இன்னமும் தின்போமென்றால், திகட்டுகின்றது. மிச்ச அவலை இக்கந்தையிலேயே முடிந்துவிட்டேன். இந்தாரும்பெற்றுக்கொள்ளும் இனிவாரும், நீர்வந்து நெடுநாளாய் விட்டது உம்மிட சம்சாரகிருத்தியங்கள் எவ்விதமாயிருக்கின்றதோ ஆனது பற்றி:—

விடையளித்தல்.

ஸ்ரீ கிருஷ்ணர் ஜாவளி.

"வரமுலுசகிப்ரோசுடனு" என்கிற வர்னம்.

ஊருக்குப் போய்வருகின்றீரா
உள்ளமுமகிழ்கின்றீரா (ஊ)

பாருக்குளுன் தரிசனமே
பார்த்தானந்தித் தேனித்தினமே. (ஊ)

திரும்பியெப்போதுவருவீர்
செப்புவீரெனக்கையன்மீர்

தேவிக்கென்சுகமுறைப்பீர்
சிந்தாகுலந்தனையறுப்பீர்
அருந்தவந்தனில் செழிப்பீர்
அடியனையாசீர்வதிப்பீர்
அன்பாய்த் திருமுகம்விடுப்பீர்
அஷ்டபாக்கியமும்வகிப்பீர். (உள)

ஸ்ரீ கிருஷ்ணர் வசனம்.

சுவாமி இதோ சாஷ்டாங்க நமஸ்காரம்செய்துகொண்டேன். போய்வாரும் அடிக்கடி க்ஷேமாதிசயங்களைத் தெரிவித்துக்கொண்டிரும் மறந்துவிடப்போகின்றீர்.

குசேலர் வசனம்.

அவ்வாறே தெரிவிக்கின்றேன் அன்பார்ந்த ஞாபகம்வைக்க வேண்டும் சென்றுவருகிறேன்.

ஸ்திரீகள் ஸ்ரீ கிருஷ்ணபூபனை ஏசுதல்.

இராகம்-நாதநாமக்கிரியை-ரூபகம்.

ஆ! நல்லஞாயம் அய்யா அய்யா
அவனியிலிந்தவுபாயம் ஆர்செய்வாரோசகாயம். (ஆ)

தீனனவர்கொணர்ந் திட்டவவல்தனை
சித்தமகிழ்த்துபரித்தீர் தீவிரமாகபுசித்தீர். (ஆ)

அந்தணனையோ பாவமித்தனை தூரம்
அலைந்துதேடிவந்தாரே தேடி
வந்தவர்க்கொன்றுங் கொடாமற்போவென்றீரே
வாட்டமுடனடந்தாரே அரு
மங்கமக்கள் மனைவிவழிபார்ப்பாரே
இந்தசேதி யறிந்தேங்கியே நிற்பாரே
இப்படியுஞ்செயலாமோ
ஒப்பியனுப்பிடபோமோ
உந்தனையெவர்மதிப்பார்கள்
உம்பருமே நகைப்பார்கள். (ஆ)

பொது வசனம்.

இவ்விதம் ஸ்ரீ குசேலமாமுனிவர் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவினிடம் விடைபெற்று தமது சுதேசத்தை நாடி வருகின்றவழியில்

எம்பெருமானுடைய பரிபூர்ணகடாக்ஷத்தினால் நடக்கும்அதிசயம் எவ்விதமெனில்:—

ஸ்ரீ குசேலர் ஜாவளி.

• "பாரபாரகர்த்தகு தற்பாருசலாம்" என்கிற வர்ணம்"

ஆஹாஹாவீதென்னவிந்தை யேதுவிந்தையோ
தேகமெங்கும்பூரிப்பான தென்னவிந்தையோ. (ஆ)

மகுடமென்சிரத்திலங்கு மார்க்கமென்னமோ
தகுதியாய்க்குழைசெவியில் சார்ந்ததென்னமோ. (ஆ)

கந்தரத்தில்சந்த்ரஹாரம் காந்திவீசுதே
சந்தனாதிபரிமளங்கள் தானும்வீசுதே. (ஆ)

அங்கமீதில்முத்திழைத்த அங்கிமின்னுதே
செங்கையில்காப்புகொலுசு சேரமின்னுதே. (ஆ)

வைதீகம்பறந்திராஜ வண்மையாச்சுதே
தையலாள்சுசீலையெண்ணம் சித்தியாச்சுதே. (ஆ)

அவல்முடிந்தகந்தைமாய மாகபோச்சுதே
புவனமீதிலெங்கருந்து பொய்த்துபோச்சுதே. (அ)

குசேலர் வசனம்.

ஆ! இஃதென்னஆச்சரியம் என்தேகமானது அகஸ்மாத்தாய் பூரிக்கின்றதே அநேகமாகிய நகைகளும் விலையேறப்பெற்ற இரத்தினகிரீடம் என்சிரசிலும், பச்சைகுண்டலம் என்செவியிலும் கழுத்தில் சந்திரஹாரமுதலிய ஆணிமுத்தாரங்களும் தகத்தகாயமாய் ப்ரகாசிக்கின்றதே மாதவன் உடுத்திடும் பீதாம்பரத்துக்குச் சமமான வஸ்திரமும் முத்துகள்கோர்த்த அங்கியும் என்தேகத்தை மூடிக்கொண்டிருக்கின்றதே ஆ! இஃதென்ன வேடிக்கை என்வைதீகமெல்லாம் பறந்துபோயிற்றே இராஜபூஷணங்கள் வாய்ந்ததே என்எண்ணம் பொய்த்துப்போய்விட்டதே சுசீலையினெண்ணம்பலித்ததே ஆ! அவல்முடிந்திருந்த பிதூராச்சிதமாகிய என் பழைய கந்தையெங்கே? ஏ! லோகரக்ஷகா உன் திருவுளமிப்படியாயிருந்தது ஆ! இதென்ன கொள்ளை இதோ எனனெதிராக இரதகஜதுரகபதாதிகள் கடலொலிபோல் திரண்டு வருகின்றதே முந்தி வேகமாய் வருபவர் யார் வேடத்தைப் பார்க்கின் மந்திரி போல் காண்கின்றது,

மந்திரி விருத்தம்.

கண்ணனைக்கண்டுவந்த கரிசறுதவத்தோய்போற்றி
மண்ணினிற்குபேரனைப்போல் மாதனம்வாய்ந்தோய்போற்றி
கண்ணியவஷ்டலக்ஷ்மி கடாக்ஷமுங்கொண்டோய்போற்றி
திண்ணமாயென்னையாளும் தேவனேபோற்றிபோற்றி.

வசனம்.

கண்ணபிரானைக்கண்டு வந்த கம்பீரமுடையவா இதோ போற்றி செய்துகொண்டேன்.

குசேலர் விருத்தம்.

இத்தரைமீதிற்செல்வம் ஏற்றுநீநாளும்வாழி
சத்தியம்தருமசிந்தை தழைத்துமென்மேலும்வாழி
உத்தமதெய்வபக்தி ஊன்றியெப்போதும்வாழி
புத்திரமித்ரரோடு புவிதனில்வாழிவாழி.

வசனம்.

அகஸ்மாத்தாய் என்னெதிர் வந்த மந்திரி நீ சதாவாழி.

மந்திரி ஜாவளி "இராஜாதிராஜனடி" என்கிற வர்ணம்.

நாற்றிசையும்புகழும் நாலுவிதசேனைகளும்
ஏற்றமுடன்வந்ததிதோ இதயங்களிகூர்ந்தய்யனே
எழுந்தருள்வீர்சுவாமி எழுந்தருள்வீர்
இப்பொழுதே இப்பொழுதே.

அந்தமாய்க்காத்திருக்கும் அம்பாரிபோட்டிருக்கும்
இந்நல்லயானையின்மீ தேரிடப்ரீதியிருந்தால்
எழுந்தருள்வீர்சுவாமி எழுந்தருள்வீர்
இப்பொழுதே இப்பொழுதே.

மஞ்சையெனவோடிக்கும் மாதலம்தனிற்சிறக்கும்
பஞ்சவர்ணக்குதிரையின்மேல் பவனிவரப்பிரியமானால்
எழுந்தருள்வீர்சுவாமி எழுந்தருள்வீர்
இப்பொழுதே இப்பொழுதே.

ஈரெட்டுகால்பரிகள் இஷ்டமுடன்கட்டிநாங்கள்
சாரட்டுகொண்டுவந்தோம் சாரிவரபிரியமானால்
எழுந்தருள்வீர்சுவாமி எழுந்தருள்வீர்
இப்பொழுதே இப்பொழுதே.

மட்டுமிதமின்றிசுத்த மாணிக்கங்கள்கொண்டிழைத்த
பெட்டிவண்டிமீதுவர பிரியமுமக்கிருக்குமானால்

எழுந்தருள்வீர்சுவாமி எழுந்தருள்வீர்
இப்பொழுதே இப்பொழுதே.

சுத்தரத்தினம்பதித்த சொர்னமதிலைமைத்த
முத்துபல்லாக்கின்மீது முனைந்துவரபிரியமானல்
எழுந்தருள்வீர்சுவாமி எழுந்தருள்வீர்
இப்பொழுதே இப்பொழுதே.

குசேலர் வசனம்.

ஏ! மந்திரி:—இச்சதுரங்கசேனைகள் என்னை நாற்புரமும் சூழ்ந்து வரட்டும், அந்த கிருபாநிதியான கிருஷ்ணமூர்த்தியின் கிருபா கடாக்ஷம், இவ்விதமாயிருக்கின்றது. சரிசரியான் ஆரோகணித்துக் கொள்ள முத்துசிவிகை கொண்டுவாருங்கள்.

மந்திரி வசனம்.

இதோ கொணர்ந்தேன் ஆரோகணித்துக்கொள்வீர் சுவாமி.

குசேலர் தேவாரம்.

அய்யனேவாசுதேவா அடியன்மீதருள்சுரந்து
வெய்யவாழ்க்கைக்காயிந்த வெகுவிதமானசெல்வம்
பையநீர்தந்ததென்ன பாரினிலிதனையாது
செய்யநானறிகிலேனிச் சிவிகையிலேறுவேனே.

வசனம்.

இதோ இம்முத்துச்சிவிகையிலுட்கார்ந்துகொண்டேன் செல்வீர்களப்பா.

குசேலர் விருத்தம்.

ஆஹாஹாவீதென்ன புதுமையென்பேன்
அன்றிருந்தவனமெல்லா மின்றுநாமேனன்
ஓகோகோவெனதுசிறு குடிசையெங்கே
உத்தமிசுசீலையொடு மக்களெங்கே
ஏகமாயிந்த வரன்மனைகளெல்லாம்
எவராலேவிருமாண மாயிருப்பேர
பாகாரிநகர மிதற்கிணையதாமோ
பார்க்கவுங்கூசுதிதை நன்றுநன்றே.

வசனம்.

ஆ! இதென்ன ஆச்சர்யம்; யான் துவாரகைக்கு செல்லும் போது இருந்த காடுகளெல்லாம் எங்கே? யாவும் நாடாயிருக்கின்றதே? தகத்தகாயமான உப்பரிகைகளால் பிரகாசிக்கின்றதே மந்திரி இதென்ன நாடு:—

மந்திரி வசனம்.

இதுதான் அவந்திபுரி சுவாமி.

குசேலர் வசனம்.

ஆ! எனது சிறிய குடிசை எங்கே என் மனைவி மக்களெங்கே? அனேகசனகரும் இதற்கிணையல்ல போற் காண்கின்றதே இதனைப் பார்க்க கண்கள் கூசுகின்றதே சரி சரி ரொம்ப நன்றாயிருக்கின்றதப்பா.

மந்திரி வசனம்.

இதுதான் தங்கள் அரண்மனை சுவாமி

சுசீலை விருத்தம்.

நான்மறைமுற்றுமோர்ந்த நற்றவ மணியேவாரும்
கான்முனையார்களின்மேல் கவனமேகொண்டோய்வாரும்
மான்மலர்ப்பாதந்தன்னை மண்ணினிற்கண்டோய்வாரும்
தேன்மொழியாளையாள் தேவனேவாரும்வாரும்.

வசனம்.

சுவாமி வாரும்வாரும் இதோசாஷ்டாங்க நமஸ்காரம்செய்து கொண்டேன்.

குசேலர் வசனம்.

மகாபதிவிரதா சிரோன்மணியான, எனது பிராணநாயகி நீ யெப்போதும் வாழ்வாயாக.

பிள்ளைகள் வசனம்.

எங்கள்பிதாவே இதோவுமது திருவடித்தாட்களுக்குயாங்கள் 27-பெயரும் நமஸ்காரம் செய்துக்கொண்டோம் சுவாமி.

குசேலர் வசனம்.

இன்னமும் கல்வியுடனே செல்வமும், நீங்கள் பெற்றுவாழக் கடவீர்கள் மைந்தர்களே.

சுசீலை விருத்தம்.

எந்தனற்சகிகளாநீ ரிக்கணந்துரிதமாக
சிந்தைபூரிப்பாயோடி சீரியபனிநீர்க்கொண்டு
விந்தையதாய்த்தெளித்து விசிதியால்விசிறிபின்னர்
அந்தமாய்முத்திழைத்த ஆசனம்போடுவீரே.

வசனம்.

தோழிகாள்;—நீங்கள் அதிசீக்கிரம்சென்று, பனிநீர்கொண்டு வந்து முகமலர்ச்சியாய்த் தெளியுங்கள். இம்மஹானுபாவர் ஆயா சந்தீரும்படி விசிறிகளைக்கொண்டு விசிறுங்கள். இவர் எழுந்தருள முத்திழைத்த ஆசனம் சமர்ப்பியுங்கள்.

சுசீலை விருத்தம்

வந்தவாயாசந்தீர வகையுடனுன்படைக்கும்
இந்தபாயாசமுண்டே இளைப்பினைதவிர்த்துபின்னர்
விந்தையாமிலவம்பஞ்சு மெத்தையின்மேற்படுத்தே
உந்திபூர்த்தோனின்சேதி உரைத்திடவேணுமையா.

வசனம்.

சுவாமி தேவரீர் வந்த ஆயாசந்தீர பாயாசமருந்துவீர் இந்த இலவம் பஞ்சுமெத்தையின் மீது படுத்துக்கொள்வீர் பகவானிடம் சென்றுவந்த சேதியை சாற்றுவீரையா

குசேலர் வசனம்.

உன்னிஷ்டப்படி செய்கிறேன் கண்மணி.

சுசீலை வசனம்.

துவாரகைக்குச் செல்லுமார்க்கம் எவ்விதமறிந்தீர் சுவாமி?

குசேலர் வசனம்

கானகத்தில் கல்லிலும் முள்ளிலும் அநேகவித லஜ்ஜை யடைந்து நடந்தேன்.

சுசீலை வசனம்.

கடலை யெவ்விதம் கடந்தீர் சுவாமி?

குசேலர் வசனம்.

கப்பலோட்டிகள் முதலில் கூலிகேட்டார்கள். பின்னர் என் வேண்டுகோளுக்கிரங்கி ஏற்றிக்கொண்டு துவாரகைக்கரையிலிறக்கினார்கள்.

சுசீலை வசனம்.

துவாரகாபுரி எவ்வளவு அழகோடு இருக்கின்றது சுவாமி?

குசேலர் வசனம்.

அதை ஆயிரம்நாவுள்ள ஆதிசேடனாலும் வர்ணிக்க முடியாதென்றால், எனதொரு நாவால் முடியுமோ கண்மணி?

சுசீலை வசனம்.

அவ்விதமா? சரிசரி பகவான் தரிசனம் எவ்விதம் கிடைத்தது சுவாமி?

குசேலர் வசனம்.

அதனையா கேட்கின்றனை முதலில் ராஜகூட்டத்து நடுவில் தெரியாமல் நுழைந்து துவாரபாலகாளிடம் சேர்ந்தேன் அன்னவர் என்னை உபசரித்து, பகவானிடம் சேர்ப்பித்தார்கள்.

சுசீலை வசனம்.

பகவான் யாதுசெய்தார் சுவாமி?

குசேலர் வசனம்.

பகவான், என்னைக்கண்டதும், என்றுமிலாச் சந்தோஷமடைந்து, எதிர்கொண்டு அதிவந்தனத்துட னழைத்து, சோடசோபசாரமும்புரிந்து, ஸ்நானம் செய்வித்து, பட்டுபீதாம்பரம் அணியச் செய்வித்து, தன் கரங்களால் போஜனத்தையெடுத் தூட்டி விசிறி கொண்டுவிசிறி பஞ்சணையிலமர்த்தி கரசரணுதிகளை தனதிருகரங் களால்பிடித்து க்ஷேமலாப விசாரணைபுரிந்து, ஆயாசந்தணித்தார் கண்மணி:—

சுசீலை வசனம்.

கொண்டுபோன அவலை என்னசெய்தீர் சுவாமி?

குசேலர் வசனம்.

பகவான் என்ன கொணர்ந்தீர் எனக்கேட்டார் அதன்மேல், இதனை எப்படியளிப்பதென ஆயாசமானேன். பின்னர் அவரே பிடுங்கிக்கொண்டார் பெண்ணே?

சுசீலை வசனம்.

ஆ! ஆ!! அவர் கபடநாடக சூஸ்திரத்திற்கு அளவுண்டா? சரி அவலை உண்டாரா?

குசேலர் வசனம்.

அவலை மூன்று பிடியாக்கி இரண்டு பிடி யருந்திட் ஒருபிடியை நம்மகந்தையிலேயே முடிந்து, தின்ன திகட்டுகின்றதென, என்னிடமேயளித்துவிட்டார்.

சுசீலை வசனம்.

சரி தங்களை அன்னவரே பிரயாணப்படுத்தினரா? தாங்களே வந்து விட்டீரா சுவாமி?

குசேலர் வசனம்.

அன்னவரே பிரையாணப்படுத்தி அனுப்ப வந்தேன்.

சுசீலை வசனம்,

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்னும் பழமொழி பலித்தது சுவாமி.

குசேலர் வசனம்.

நல்லது நீ யந்தப்புரம் செல்வாய் யான் சற்று நித்திரைசெய்ய வேண்டும்.

சுசீலை வசனம்.

அவ்வாறே செல்கின்றேன், வந்தனம் சுவாமி.

சுசீலை மனை விசாரணை.

ஆசிரிய விருத்தம்.

சுசீலை.

சேடிகர்ணம்முடைய சித்ரமாளிகையெல்லாம்
சீருடன் மெழுகியாச்சா?

தோழிகள்.

சித்தமாய்ப்பரிசுத்தமாய்க் கட்டளைப்படி
சீருடன் மெழுகியாச்சே.

சுசீலை,

நாடியேநவரத்ன நூள்களாற் கோலங்கள்
நாகரீகமாயிட்டீரா?

தோழிகள்.

நல்லுத்திரவைசிரம் தாங்கியேகோலங்கள்
நாகரீகமாயமைத்தோம்.

சுசீலை.

தேடியேநன்மலர் என்பதிபூஜைக்கு
சித்தமாய் வைத்தீர்களா?

தோழிகள்.

திவ்வியப்பரிமளப் புஷ்பங்கள்பூஜைக்கு
சித்தமாய் வைத்தனமிதோ.

சுசீலை.

கோடிக்கணக்கென வந்தவேதியரெல்லாம்
கூடியே யுண்டார்களா?

தோழிகள்,

குறைவறப்போஜனம் சாதித்துபிசகின்றி
கூட்டியாமனுப்பினேமே

சுசீலை வசனம்

ஆயின் வெகு சந்தோஷம் இனி அரண்மனையில் நடக்கவேண்டிய அலுவல்களை கிரமமாய் நடாத்துங்கள் ஜாக்கிரதை.

தோழிகள் வசனம்.

உத்தரப்படி நடாத்துகின்றோமம்மா,

பொது வசனம்.

இவ்விதம்யோக நித்திரை பதித்துக் கொண்டிருந்த ஸ்ரீ குசேலமாமுனிவர் எழுந்து, நித்தியானுஷ்டான ஜெபதப நேமநிஷ்டைகளைமுடித்து, சுசீலையம்மன் சிசுருஷைபுரிய, ராஜபூஜிதையாயும், இராபூஷணாலங்கிருதராயும், இராஜபோஜன ரகிதராயும், தனதன் பொழியாத,27 மக்களும் ராஜபுத்திரர்களைப்போல்பிரகாசிக்கவும், அதி உன்னதமாய் காலங்கழியாநிற்கையில், ஓர்நாள் முனீஸ்வரர் இச்செல்வம் நிலையல்லவெனவும், இஃது அநேக இடையூறுகளுக் காஸ்பதமா யிருக்கின்றதெனவும், தீர்மானித்து ஓர் அந்தரங்கமானஇடத்திலிருந்து துவாரகாபுரவாசராகிய ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவை துதிசெய்கின்றபடி.

ஸ்ரீ குசேலர் தேவாரம்.

தேவனே ஆசைகாட்டில் சிக்கியேபன்னாளாக
பாவமேபெருகியுந்தன் பதமலர்தனைமறந்து
ஜீவமேவைத்தியானும் திகைதிகைக்கின்றேனையா
காவநீயென்முன்வந்து காக்ஷிதாகிருஷ்ணதேவே.

ஸ்ரீகுசேலர் ஜாவளி

"மங்கையால்தயங்குகிறேன்" என்கிற வர்னம்.

ஸ்ரீகிருஷ்ணதயாநிதி யிங்கு சீக்கிரம் நீர்வாருமே (ஸ்ரீ)

தேகமெங்கும்சோர்ந்துமே சித்தாகுலம்சார்ந்துமே
சோகமாககூவிநின்றேன் சோதனைசெய்யாமலே. (ஸ்ரீ)

கன்றிழந்தஆவுபோல் கதறலானேன்பூமிமேல்
தொன்றுவினையைத்தொலைக்க தோன்றியதிவேகமாய். (ஸ்ரீ)

மன்னற்கோலம்பூண்டிலேன் மாளிகைகள்வேண்டிலேன்
முன்னிருந்தவேழ்மைத்தனம் மூளக்ருபையியவே. (ஸ்ரீ)

மந்தஹாசமாச்சுதே வைதீகம்போக்சுதே
இந்தசெல்வந்தாங்கேனினி ஏற்றுக்கொள்ளவேமுனம். (ஸ்ரீ)

பகவான் பிரசன்னம்.

அய்யனேவந்தேன்வந்தேன் அஞ்சலிபுரியவேண்டாம்
மெய்யனேவந்தேன்வந்தேன் மெய்யலாம்சோரவேண்டாம்
துய்யனேவந்தேன்வந்தேன் துயரகங்கொள்ளவேண்டாம்
ஐயவேவந்தேன்வந்தேன் பகருவீர்சேதிதானே.

ஸ்ரீகுசேலர் சொல்.

ஆசிரிய விருத்தம்.

எண்டிசையுமாள்பவா என்முறையைகேட்பவா
எக்குறையையுந்தீர்ப்பவா
ஏழைமுகம்பார்ப்பவா எத்தினமுகங்காப்பவா
இணையடிகளிற் சேர்ப்பவா

புண்டரிகபாதனே புகழுமதுசூதனே
 பூவிலக்குமி நாதனே
போகநிறைபோதனே போற்றுசதுர்வேதனே
 புகலரிய மிகுநீதனே
தொண்டரதுபாசனே சுகுணமனவாசனே
 துங்கபறவைநேசனே
சோதிப்ரகாசனே துதிபரவுதேஜனே
 துரைசிங்கசருவேசனே
பண்டுவினைதீருமே பக்ஷமொடுகோருமே
 பரவசமதாய்ப்பாருமே
பன்னுமருள்தாருமே பாங்குடனேவாருமே
 பத்மாசனத்தமருமே.

ஸ்ரீகுசேலர் வசனம்.

சுவாமிவாரும் இப்பதுமாசனத்திலுட்காரும்.

சுசீல விருத்தம்.

மண்ணிலியாமடைந்த வறுமையைத்தீர்த்துமிக்க
கண்ணியம்பெருகச்செய்த கமலபொற்பாதம்போற்றி
திண்ணமோடினியென்னாளும் திருஷ்டியெம்மீதுவைத்து
தண்ணருள்புரியவேண்டும் தற்பராபோற்றிபோற்றி

ஸ்ரீ கிருஷ்ணர் வசனம்.

அம்மணி உன்னிஷ்டப்படி சித்தியாக வரந்தந்தனம்.

பிள்ளைகளும் போற்றி வசனம்.

எம்பெருமானே தங்கள் பாதார விந்தத்திற்கு அனேக வந்தனம் சுவாமி.

ஸ்ரீகிருஷ்ணர் வசனம்.

குழந்தைகாள் வருவீர் ஓர் முத்தந்தருவீர்.

ஸ்ரீகிருஷ்ணர் வசனம்.

பூதலவாழ்க்கையைப் பொய்யென வெண்ணி நீதிசேர்ஞான நிலைபிணைபறிந்த மாதவமணியே தேவரீர் மனதுமெலிந்து எம்மை மழைத்தக்காரணம் யாது? இயம்புவீரையா.

ஸ்ரீ குசேலர் வசனம்.

சுவாமி:—ஏது ஒன்றுமறியாதவர்போல் என்னை என் அழைத்தீரெனவசனிக்கின்றீர். இதுமிகவும் ஆச்சரியகரமேயானேசொல்ல வேண்டு மென தங்களுக்கபிப்ராய மிருப்பதால் இதோ உரைக்கின்றேன் கேட்டருள்செய்வீர்நாதா.

ஸ்ரீ கிருஷ்ணருக்கும் ஸ்ரீ குசேலருக்கும் தர்க்கம்.

"இவளழகென்னசொல்லுவேன்" என்கிற வர்ணமெட்டு.

இ-ம்-பியாக் ஆதி-தாளம்.

ஸ்ரீ குசேலர்.

நந்தசுபுத்திரா நல்லவர்மித்திரா
நவிலுமென் விண்ணப்பம் கேட்டருள்வீர்
இந்தசம்பத்தெனக் கேனளித்தீரையா
இக்கணமேயிதை யேற்றுக்கொள்வீர்.

ஸ்ரீ கிருஷ்ணர்.

ஏற்றுக்கொண்டால்நீரும் இனைஞர்மனைவியும்
எப்படிபூமியில் வாழ்ந்திடுவீர்
சாற்றுவீர்செல்வத்தால் சார்ந்தகுறையதனை
தரித்திரத்தால்முன்போல் தாழ்ந்திடுவீர்.

ஸ்ரீ குசேலர்.

தரித்திரம்பெரிதல்ல சம்பத்தினுற்பொல்லா
சஞ்சலம்சகிக்கக் கூடவில்லையே
பெருத்தவென்குடும்பத்தை பேணிடநாங்கள்
பிழைத்திருக்கக்குறை யேதில்லையே.

ஸ்ரீ கிருஷ்ணர்.

குறையொன்றுமணுகா குணங்கெட்டுப்போகா
குவலயம்புகழும் ஞானேஸ்வரரே
நிறைவுடனுலுமின்னிதியை யனுபவித்து
நீடூழிவாழுமுனீஸ்வரரே.

ஸ்ரீ குசேலர்.

நீடூழிவாழ்ந்திடில் நெஞ்சமுகந்திடில்
நேர்ந்திடுமோ பரசுகமதுவே
தேடிகுளிக்கப்போய் சேறினைப்பூசியே
சீர்கெடும்பான்மை போலாமிதுவே.

ஸ்ரீ கிருஷ்ணர்.

சீர்பெறபரசுகம் சித்திக்கச்செய்திடும்
செல்விழியாவுக்குங் காரணமே
நேர்முகமாய்ப்பனி நிற்குமோபரிதிமுன்
வினையொன்றும் பாதிக்காதிப்பணமே.

ஸ்ரீ குசேலர்.

பணத்தாசையாலே பாரிதன்மேலே
பாதையடைந்தவர் கள்பலரே
குணமுளநல்லவர் கோறிதனத்தைகைக்
கொண்டுகதியடைந் தோர்சிலரே.

ஸ்ரீ கிருஷ்ணர்.

கதியடைந்தோர்பெறுங் காக்ஷியைநீங்களும்
கண்ணியமாகவே தான்பெறுவீர்
விதிதவறியிப்போ வீண்குதர்க்கங்களை
விள்ளுவதிற்பயனில்லை யறிவீர்.

ஸ்ரீ குசேலர்.

பயனிலாசெல்வம் பாலித்தெந்தனையினம்
பங்கபடுத்தவெண்ணங் கொண்டனையோ
பயமாகத்தோணுதே பார்க்கவும்நாணுதே
பணத்தையென்செய்குவேன் தொண்டனையோ.

ஸ்ரீ கிருஷ்ணர்.

என்செய்வேனென்றென திலக்குமியைமுன
மௌனம்புரிகுவ தேனுரைப்பீர்
நன்றல்லவுமக்கிது நாளும்பாக்கியத்துடன்
நண்ணியேவாழ்ந்து மென்மேல்சிறப்பீர்.

ஸ்ரீ குசேலர்.

வாழ்ந்திடபுவிமிசை வாகுடனுன்தயை
வைத்திருந்தாலது போதுமையா
தாழ்ந்திடுவேனென்னை சாரிலக்குமியினுல்
சரிசரிவேண்டிலே னுளுமையா.

ஸ்ரீ கிருஷ்ணர்.

வேண்டிலேனென்றிடில் விருப்பமுன்னிடமதில்
வீசம்பங்காகிலும் வைத்திடுகேன்

பூண்டிடுவாய்மனஸ் பூர்வமாய்க்கூறினேன்
போகிறேனினியிங்கு வந்திடுகேன்.

ஸ்ரீ குசேலர் வசனம்.

ஆ! இஃதென்ன ஆச்சரியம் என்மீது கோபாவேசமாய்பாவித்து, எழுந்தருளுகின்றீர், வாரும் சுவாமி

ஸ்ரீ குசேலர் விருத்தம்.

இங்கனேநின்கடாக்ஷ மிவ்விதமிருக்குமாயின்
பொங்கமாயிந்தசெல்வம் புவிமிசையனுபவிப்பேன்
தங்களின்மீதுபக்தி சந்ததம்பெருகியீற்றில்
மங்களமாய்வைகுந்தம் வாய்த்திடவரமீவீரே.

வசனம்.

சுவாமி:—தங்களின் கடாக்ஷமிவ்வித மிருக்குமாயின், அடியனால் அதை நிக்ரகிக்கமுடியுமோ கட்டளைப்படி நடந்துகொள்ளுகின்றேன். ஆயின் எந்தகாலத்திலும் தங்கள் பாதாரவிந்தத்தை மறவாமல், துதிசெய்யவும், முடிவில் ஸ்ரீ வைகுந்தபதவியை யடைந்து, பேரானந்தமடையவும், வரம்பாலிக்கவேண்டுந்தேவா.

ஸ்ரீ கிருஷ்ணர் விருத்தம்.

இட்டமேயெனதுத்யானம் எந்தநேரமுமுன்னெஞ்சில்
சட்டமாய்த்தழைத்துமென்மேல் தரணியில்சம்பத்தோடு
மட்டிலாப்பெருமைபெற்று வாழ்ந்துநீர்பலநாள்பின்னர்
பொட்டெனவைகுந்தத்திற் புக்கிடவரந்தந்தேனே.

வசனம்.

நேசதீபமே:—என்னுடைய தியானமானது சதாவுன்னெஞ்சத்தில் குடிகொள்ளவும். இம்மகத்தானசம்பத்துடன் நீரும், உம்மிட மனைவி சுசீலையம்மனும், இருபத்தேழு பிள்ளைகளும் மட்டுமிதமில்லாப் பெருமைக்குப் பாத்திரராய் நெடுங்காலம் இவ்வுலகில் வாழ்ந்திருக்கவும் பின்னர் குடும்பசமேதராய் எமது வைகுந்தமடையவும் இதோவரம் பாலித்தனம் யான் போய்வருகின்றேன்.

நூதன ஜாவளி.

ஏரிலகுந்திருக் காஞ்சிகரிவரதராஜா
ஏற்றமாம் பெருந்தேவிதாய்க் குகந்தநேசா

சீர்கருணீசமுத் துகிருஷ்ணப் பிள்ளையவர்நாடி
செய்துதந்தகு சேலநாடகமதைபாடி
சிறுவரெல்லவருங்கூடி திவ்யமாய்நடனமாடி
தென்பதாகவே சிறுமையேகவே திருவருள் புரிகுவாயோடி (ஏ)

கோதிற்பாரதிபரி பூரணனந்தசபைசீரும்
கோள்களின்றிவெகு கூர்மையாய்ப்பெருகபாராய்
மேதினிமீதுயிர்வாழு மாந்தர்பலவாரும்
வித்தியாசமா யேசிடாதெமைநீகாராய்
பீதியோடிடவேநேராய் பிரியமாகவிங்குவாராய்
ஆதிஜோதியே அமரர்நீதியே அடிமையருள்பதம்போற்றி.

வாழ்த்து விருத்தம்.

வையமிசைமர்தவ குசேலதாசர்
மாப்புகழ்சிறந்து பலநாளும்வாழி
தையலர்க்கரசென சுசீலையம்மன்
சாற்றவிருபத்தேழு மைந்தர்வாழி
ஸன் ஆப் இன்டியா பிரசுரம்வாழி
சசிபரிதியுள்ளவரை யோங்கிவாழி
பையவிதையச்சேற்றி பரவவிட்ட
பகர்சூளை முனிசாமி வாழிவாழி

மங்களம்.

இராஜீவலோசன இரவிப்ரகாசன மங்களம் சுபமங்களம்
பராபரவதித்யாகி பரபிர்ம்மமகயோகி மங்களம் சுபமங்களம்
பிருந்தாவனசஞ்சாரி பிதுருபக்தமுராரி மங்களம் சுபமங்களம்
பிருதவானரஜீவா பிதபாவிமகதேவா மங்களம் சுபமங்களம்
அனந்தகுணகம்பீரா அநுசூயவ்ரததரா மங்களம் சுபமங்களம்
ஜனகபுத்ரிகநாதா ஜயித்ரஜகப்ரக்யாதா மங்களம் சுபமங்களம்
சுஜனபாபஹரா துளசிதாமபூஷண மங்களம் சுபமங்களம்
நிஜசர்வக்ரஹரூபா நிரஞ்சனமகானுபாவா மங்களம் சுபமங்களம்
புவிதனிற்குசேல புகழ்பெருஞ்சுசீல மங்களம் சுபமங்களம்
கவிஞன்முத்துக்ருஷ்ண கவிமலர்ப்பூஷண மங்களம் சுபமங்களம்.

ஸ்ரீ குசேலமாமுனிவர் சரித்திரம்.

முற்றுப்பெற்றது.